No 1567

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை
# நடவடிக்கைகள் செயலக
# வெளியீடு

தொகுதி-16 எண்-3

செவ்வாய் மார்ச் 10, 1992

வெளியீடு 26-8-1992 Issued 26-8-1992

567

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
## செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES

## OFFICIAL REPORT

செவ்வாய்க்கிழமை மார்ச் 10, 1992 - தொகுதி 16 - எண் 3
Tuesday the 10th March, 1992 - Volume 16 - No. 3

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009
Legislative Assembly Secretariat,
Madras-600 009

விலை ரூ. 3-00] [Price Rs. 3-00

உள்ளடக்கம்

10—3—1992


| | பக்கங்கள் |
|---|---|
| 1. வினாக்கள் - விடைகள்— | |
| உடுக்குறியிட்ட வினாக்கள் | 1—45 |
| 2. சிறப்புக் குறிப்புகள். | |
| (அ) வினா நேரம் முடிவுற்றவுடன் பிரச்சினைகளை எழுப்பும் முறை குறித்து. | 45—46 |
| (ஆ) மேல்நிலைப் பள்ளிகளில் பணியாற்றும் தொழிற் கல்வி பகுதிநேர ஆசிரியர்களை நிரந்தரமாக்க வேண்டுமென்ற கோரிக்கையை வலியுறுத்தி அவர்கள் நடத்தி வரும் போராட்டம் குறித்து | 46—48 |
| 3. வரவு-செலவுத் திட்டம், 1992-93, பொது விவாதம்—தொடர்ச்சி. | 48 117 |
| திரு. மா. சுந்தரதாஸ் | 48—64 |
| திரு. காஞ்சி பன்னீர்செல்வம் | 64—67 |
| திரு. எஸ். அண்ணாமலை | 67—71 |
| திரு. உ. பலராமன் | 72—82 |
| திரு. ஆர்.பி. பரமசிவம் | 82—85 |
| *திரு. தேனி பன்னீர்செல்வம் | 85—90 |
| டாக்டர் மு. அம்மமுத்து பிள்ளை | 90—94 |
| திரு. கே. கந்தசாமி | 95—98 |
| *திரு. டி.எம். ரங்கராஜன் | 98—102 |
| திரு. வெ. தமிழரசு | 102—104 |
| *திரு. ப. கலியபெருமாள் | 104—108 |
| *திரு. எச்.எம். ராஜு | 108—113 |
| திரு. வி. ரவிச்சந்திரன் | 114—117 |
| 4. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் | 117—118 |

162337

D

V211,31 N92

N92-16·3

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

மாசி 27, பிரஜோற்பத்தி — திருவள்ளுவர் ஆண்டு 2023,

1992 மார்ச் 10, செவ்வாய்க்கிழமை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. இரா. முத்தையா அவர்கள் தலைமையில், காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

''பலசொல்லக் காமுறுவர் மன்றமா சற்ற
சிலசொல்லல் தேற்றா தவர்''.

குற்றமற்றவையான சில சொற்களைச் சொல்லத் தெரியாதவர்களே, பல சொற்களைத் தேடிச் சொல்லிக் கொண்டிருப்பர்.

1. வினாக்கள்—விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினாக்கள்-விடைகள். **வினா எண்** 139. டாக்டர் எஸ். சுந்தரராஜ். மாண்புமிகு நிதி அமைச்சர்.

139—

பொதுத் தேர்தலில் வாக்குப்பதிவு.

2399—டாக்டர் எஸ். சுந்தரராஜ் :

மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பொதுத் தேர்தல் 1984-ஐக் காட்டிலும் 1989-ல் குறைவாகவும், 1989-ஐக் காட்டிலும் 1991-ல் குறைவாகவும் வாக்குகள் பதிவாகியிருப்பது குறித்து அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், அது குறித்து அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) வாக்களிக்கும் உரிமை வாக்காளர்கள் அனைவருக்கும் உண்டு. வாக்காளர்களைக் கட்டாயப்படுத்தி வாக்களிக்க தேர்தல் சட்டத்தில் இடம் இல்லை. எனினும், தேர்தலின் போது வாக்களிப்பதன் முக்கியத்துவம் குறித்து செய்தித்தாள் கள், தொலைக் காட்சி மற்றும் வானொலி வாயிலாக பல்வேறு விளம்பரங்களும், வேண்டுகோள்களும் வெளியிடப்படுகின்றன.

டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''மக்கள் தீர்ப்பே மகேசன் தீர்ப்பு'' என்று பேரறி ஞர் அண்ணா அவர்கள் கூறினார்கள். ஆனால் ஜனநாய கத்தில் நம்பிக்கைகொண்டு ஒட்டு மொத்தமாக மக்கள் இன்னும் வாக்களிக்கவில்லை. ஒவ்வொரு தொகுதியிலும் வாக்களிக்க வில்லை, அமெரிக்கா போன்ற நாடுகளில் வாக்களிப்பதன் முக்கியத்துவத்தையும், ஜனநாயகத்தின் முக்கியத்துவத்தையும் மதித்து ஒட்டுமொத்தமாக மக்கள் வாக்களிக்கிறார்கள். அவ் வாறு ஒட்டுமொத்தமாக மக்கள் வாக்களிக்கின்ற ஒரு நம் பிக்கையைப் பெறுவதற்கு அரசு வேறு ஏதாவது நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்கள் வாக்களிக்க வேண்டும் என்பது ஜனநாயகத்திலே மிகச் சிறப்பாக மேற்கொள்ள வேண்டிய ஒரு பொறுப்பாகும், பண்பாகும். ஆனால் பொது மக்கள் அத்தனை பேரும் அவரவர்கள் உணர்ந்து அதைச் செய்யவேண்டுமே தவிர, அரசாங்கம் கட்டாயப்படுத்தியோ அல்லது சட்டத்தின் மூலமாகவோ வாக்களித்துத் தீரவேண்டும் என்று ஆணையிட இன்றைக்கு சட்ட விதிகளில் இடமில்லை. ஆனாலும் கூட ஓரளவுக்கு பொது மக்களுக்கு விழிப்புணர்ச்சி தரவேண்டிய பொறுப்பு பொது வாழ்க்கையில் ஈடுபட்டிருக்கின்ற அரசியல் கட்சித் தலைவர்கள் மற்றவர்களுக்கெல்லாம் உண்டு. வாக்களிப்பதன் மூலம் ஏற்படுகிற ஜனநாயக விழிப்புணர்ச்சியை அவர்களுக்கு எடுத்துச்சொல்வதன் மூலமாகத்தான் அதைப் பெறவேண்டும். அந்த வகையிலேதான் சில பல நேரங்களில் வாக்கு எண்ணிக்கை குறைகின்றது. சிலபல நேரங்களில் கொஞ்சம் கூடுதலாகவும் அமைகிறது.

டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிங்கப்பூரில் வாக்களிக்காவிட்டால் பிரஜா உரிமையை ரத்து செய்கிறார்கள். மேலும் ஐ.ஆர்.டி.பி. மற்றும் தாட்கோ லோன் போன்ற கடன்கள் வாங்கினால் ரேஷன் கார்டுகளில் அடையாளம் வைக்கின்றனர். குடும்பக்கட்டுப்பாடு போன்ற வற்றிற்கு பிரச்சாரக் குழு கூட அமைக்கச் செய்கின்றார்கள். அவ்வாறு ஜனநாயகத்தில் முழு நம்பிக்கை பெறுவதற்கு அரசு பிரஜா உரிமையை ரத்து செய்யவோ அல்லது ரேஷன் கார்டு களிலே அடையாளம் இடவோ அல்லது தேர்தல் பிரச்சாரக் குழுவோ அமைப்பதற்கு அரசு முன் வருமா என்று அறிய விரும்பு கிறேன்.





மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிங்கப்பூரில் என்ன நடைமுறை கள் இருக்கின்றன என்று எனக்குத் தெரியாது. அதை இனி மேல்தான் நான் போய் ஆராய்ந்து பார்க்கவும் வேண்டும். ஏனென்றால் ஒரு குறிப்பிட்ட அளவு, குறைவான மக்கள் தொகை, அதாவது சுமார் 20 இலட்சம் மக்கள் தொகை மட்டுமே கொண்டது ஆகும். அங்கே ஒரு கட்டுப்பாடான அரசியல் முறையை நடைமுறைப்படுத்துவது எளிது. இங்கே 85 கோடி மக்கள் வாழ்கின்ற இந்தியாவில் கிட்டத்தட்ட 50 கோடிக்கு மேல் வாக்காளர்களாக இருக்கின்ற இந்த நாட்டில் இப்படிப்பட்ட கட்டாய நிலைகளை ஏற்படுத்துவதன் மூலம் சங்கடங்கள்தான் அதிகமாகுமே தவிர, அதனால் வேறு எந்த வகையிலேயும் நாம் எதிர்பார்க்கின்ற பலன்கள் கிட்டா. ஆனால் விழிப்புணர்ச்சி ஏற்படுத்துவதன் மூலமும் மக்களை உணர வைப்பதன் மூலமாகத்தான் நிலைமையைச் செம்மைபடுத்த முடியும்.

குறிப்பாக 1952 தேர்தலை எடுத்துக்கொள்வோமானால் 77.49 சதவிகித மக்கள் வாக்களித்திருக்கிறார்கள். இதுவரையில் நடந்த தேர்தல்களிலே அதிகமான மக்கள் பங்கு கொண்டு வாக்கு அளித்தது 1952-லே நடைபெற்ற தேர்தலிலே தான். அதற்குப் பிறகு 1957-லே 65.52 சதவிகிதம் மக்கள் வாக்களித்திருக்கிறார் கள். 1971-ல் 71.83 சதவிகிதம் பேர் வாக்களித்திருக்கிறார்கள். கடந்த 3 தேர்தல்களிலே மட்டும் நாம் பார்ப்போ மானால், 1984-ல் 71.66 சதவிகிதம் பேர் வாக்களித்திருக்கிறார் கள், 1989-ல் 69.45 சதவிகிதத்தினர் வாக்களித்திருக்கிறார்கள், 1991-லே நடைபெற்ற தேர்தலிலே 63.83 சதவிகிதம் பேர் வாக்களித்திருக்கிறார்கள். 1991-லே வாக்களித்தவர்கள் எண் ணிக்கை ஓரளவுக்குக் குறைந்திருக்கிறது என்பதற்குக் காரணம், அப்போதுதான், மாண்புமிகு இந்தியாவினுடைய முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி அவர்கள் எதிர்பாராத வகையில், தேர்தல் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கும் பொழுதே, படுகொலைக்கு ஆளாக்கப்பட்டு, அதன் காரணமாக மக்களிடத் திலே பலவிதமான எண்ணங்கள் ஏற்பட்டு, மக்கள் பீதி அடைந்து, பல்வேறு சூழ்நிலைகள் கெட்டிருந்தபோது தேர்தல் நடந்தது. மக்களுக்குப் பீதியும் இருந்தது, அச்சமும் இருந்தது, வேறு பல கலவர சூழ்நிலைமைகளும் இருந்தன. அப்போதும் நாம் ஓரளவு அதற்கான முயற்சிகளை காவல் துறையினரின் ஒத்துழைப்போடு மேற்கொண்டோம். என்றாலும் கூட 63.83 சதவிகிதத்தினர் தான் வாக்களித்திருக்கிறார்கள்.

முற்பகம் 9-35

அண்மையில் நடைபெற்ற பஞ்சாப் தேர்தலின் போது கலவரங்கள், பீதிகள், வேறு பல சூழ்நிலைகள் எல்லாம் நிலவிய தன் காரணமாக, அங்கே 34 சதவிகிதத்தினர் மட்டுமே தங்கள் வாக்குகளை அளித்துள்ள நிலையில் புதிய சட்டமன்றம் அமைக்க

வேண்டிய கட்டத்திற்கு அம்மாநிலம் வந்திருக்கிறது. ஆக, 65 சதவிகிதத்தினர் வாக்களிக்காமல் இருக்கின்ற நிலைமை, சூழ்நிலையை பொறுத்தே அமைகின்றது என்பதை நாம் மிகத் தெளிவாகவே அறிந்து கொள்கிறோம். அதனாலேதான் சூழ்நிலையை செம்மைப்படுத்துகின்ற பொறுப்பை, பொது வாழ்க்கையில் ஈடுபட்டிருக்கின்ற அத்தனை பேரும் மேற்கொள்வார்களேயானால் அரசு தன்னுடைய கடமையைச் செய்கின்ற போது, மற்றவர்களுடைய பணிகளும் சேர்ந்து அது பெரும் துணையாக அமைந்து தேர்தல் சுமூகமாக நடைபெறும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அடிக்கடி தேர்தல் வருகின்ற காரணத்தால்தான் மக்களுக்கு இது போன்ற நம்பிக்கைக் குறைவு ஏற்படுகிறது. நேற்று கூட நம்முடைய மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி ஜெயலலிதா அவர்கள் காங்கிரஸ் பேரியக்கத்திற்கு ஒரு நல்ல சப்போர்ட்டைக் கொடுத்து, இன்றைக்கு அந்த இடத்தில் நெருக்கடியைத் தீர்த்திருக்கக் கூடிய ஒரு பெருமைக்காக மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு காங்கிரஸ் பேரியக்கத்தின் சார்பாக நாங்கள் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம். (பலத்த மேசையைத் தட்டும் ஒலி) 8 மாதத்திற்கு, 11 மாதத்திற்கு ஒரு முறை தேர்தல் என்று இல்லாமல், ஒரு குறிப்பிட்ட இடைவெளிக்குப் பிறகு தேர்தலை நடத்தினால் மக்களுக்கு தேர்தலில் நம்பிக்கையை ஏற்படுத்த முடியும். அதற்கு அரசு வழிவகை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாகவே நாடாளுமன்றத் தேர்தல், சட்டமன்றத் தேர்தல் 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை நடைபெற வேண்டும் என்பதுதான் அரசியல் சட்டம் வகுத்துத் தந்திருக்கிற முறை. அந்த முறையைக் கையாளுகின்றபோது, சூழ்நிலைகள் சரியாக அமைகின்றனவா என்றால் இல்லை. ஆளும் கட்சியினர் தாங்களாகவே ராஜினாமா செய்தாலும் போயிற்று, எதிர்க்கட்சிகள் எல்லாம் சேர்ந்து அரசை ராஜினாமா செய்ய வைத்தாலும் போயிற்று, அல்லது குடியரசுத்தலைவர் பார்த்து டிஸ்மிஸ் செய்தாலும் போயிற்று. ஆகவே, பொதுத் தேர்தலை எப்போது வேண்டுமானாலும் கொண்டு வரலாம் என்ற முறைகள், எப்பொழுதும் இருக்கின்றன. நம்முடைய ஜனநாயகத்தில் கூடுமானவரை எல்லோரும் தேர்தல் அடிக்கடி வராமல் பார்த்துக் கொள்ள வேண்டுமென்ற பொறுப்புணர்ச்சியோடு நடந்துகொள்வார்களேயானால் மிக மிக நல்லது. ஆனால் அமெரிக்காவில் மட்டும்தான் இதிலே ஒரு முறை வைத்திருக்கிறார்கள். அந்த முறையின் காரணமாக அடிக்கடி அங்கே தேர்தல் நடைபெறுவதில்லை. 4 ஆண்டுகளுக்கு ஒரு முறைதான் குடியரசுத் தலைவரைத் தேர்ந்தெடுக்கிற முறை அமெரிக்காவில் இருக்கிறது. 4 ஆண்டுகளுக்கு ஒரு முறைதான் தொடர்ந்து தேர்தல் நடைபெற்-



றுக் கொண்டு வருகிறதே தவிர, இடைத் தேர்தல் என்று அமெரிக்காவில் இல்லை. அதற்குக் காரணம், என்னவென்றால், அந்த நாட்டினுடைய சட்டத்தைத் தெளிவாக வகுத்து வைத்திருக்கிறார்கள். குடியரசுத் தலைவர் மறைந்துவிடுவாரானால் அல்லது ராஜினாமா செய்து விடுவாரானால் அடுத்த எஞ்சிய காலத்தில் துணைக் குடியரசுத் தலைவர் பொறுப்பைப் பார்ப்பார் என்றும், அவரும் செத்துப் போய்விட்டால் . வைத் தலைவர்பொறுப்பைப் பார்ப்பார் என்றும், அவரும் போய்விட்டால் அதற்கு அடுத்து இருக்கும் செயலாளர்கள் பார்ப்பார்கள் என்றும், ஒரு 17 பேரை போட்டு வைத்திருக்கிறார்கள். 16 பேர் செத்துப் போய்விட்டாலும் 17-வது ஆள் வந்து தொடர்ந்து நடத்தி எஞ்சிய காலத்தை நிறைவேற்றலாம். அப்படி இருக்கிற காரணத்தினால்தான், 4 ஆண்டுகளுக்கு ஒரு முறை தேர்தல் அமெரிக்காவில் நடைபெற்றுவருகிறது. அந்த முறை பிரிட்டனில் கூட இல்லை. பிரிட்டனில் நம்முடைய நாட்டைப் போல எப்போது வேண்டுமானாலும் தேர்தல் நடத்தலாம், அந்த சூழ்நிலை ஏற்படலாம். ஆனால் கூடுமான வரையில் தேர்தலை அடிக்கடி நடத்தாமல் இருக்கின்ற சூழ்நிலையை வகுப்பது தான் நல்லது. அதற்கு அரசியல் கட்சிகள், பொது வாழ்வில் ஈடுபட்டிருப்பவர்கள் எல்லாம் சேர்ந்து முயற்சி செய்தால், ஓரளவுக்கு இந்த நிலைமையை சீர்படுத்தலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. என். ஜி. வேணுகோபால்.

திரு. என். ஜி. வேணுகோபால் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேர்தல் முறையிலே வாக்களிப்பதற்காக, பல்வேறு சூழ்நிலை காரணமாக வாக்களிக்க முடியாமல் இருக்கின்ற நிலைமையைப் போக்குவதற்காக, குறிப்பிட்ட கிராமங்கள் அதிக சதவிகிதம் வாக்களித்தால் அந்தக் கிராமத்தை அரசாங்கமே தத்து எடுத்துக் கொள்கின்ற முறையை அனுசரித்தால், வாக்களிக்கின்ற மக்களுக்கு அது ஊக்கமளிப்பதற்தாக, ஏதுவாக இருக்கும். மற்றவர்களுக்கும் அது ஒரு பாடமாக அமையும் என்பதால் அரசு இதைப் பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு குறிப்பிட்ட கிராமத்தைத் தத்து எடுக்க வேண்டியதற்கு அவசியமே இல்லை. ஏன் என்றால் எல்லா கிராமங்களும் அரசினுடைய புதல்வர்கள்தாம். (சிரிப்பு) ஆகவே, பொதுவாக தத்து எடுக்க வேண்டிய அவசியம் இல்லை. ஆனால் அதிக அளவுக்கு வாக்குகளை சேகரிக்கிறார்கள் என்றால், அதைப் போன்றவர்களுக்கு வேண்டுமானால் ஊக்கம் தரலாம் அல்லது பரிசுகள் வழங்கலாம் அல்லது பாராட்டலாம். மாவட்ட அளவில், வட்ட அளவில் அப்படி அதைச் செய்யலாமே தவிர, அதனை வேறு எந்த வகையிலும் செய்ய முடியாது. பொதுவாக, பொதுமக்களுக்கு ஊக்கமும் ஆக்கமும் அளிக்க வேண்டியதுதான் இதிலே மிக முக்கியமாக கடைப்பிடிக்க வேண்டிய ஒன்றாகும்

[1992 மார்ச் 10

முற்பகல் 9-40

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கே. கந்தசாமி.

திரு. கே. கந்தசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் தயாரிக்கப்பட்ட வாக்காளர் பட்டியலில், காங்கிரஸ், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆதரவு வாக்காளர்கள் பெருமளவிற்கு நீக்கப்பட்டிருக்கிறார்கள். இதை அரசு அறியுமா என்று அறிய விரும்புகிறேன்.

. மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாக்காளர் பட்டியல் அவ்வப்போது திருத்தப்பட்டு வருகிறது. அதிலே சில பேர்களுடைய பெயர்களை எடுப்பதும், சில பெயர்களைச் சேர்ப்பதும் வழக்கமாக இருந்து வருகின்ற ஒன்றுதான். ஆனால் வாக்காளர் பட்டியலில் திருத்தம் கொண்டு வரலாம். விடுபட்டவர்கள் சேரலாம் என்று அறிவிப்பு தந்து, அதற்காக 30 நாட்கள் ஒதுக்கீடு செய்கின்றபோது விடுபட்டவர்கள் தங்களுடைய் பெயர்களைச் சேர்த்துக்கொள்ள வாய்ப்பு எல்லாம் இருக்கிறது. அது தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டு வருகின்ற ஒன்று.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் மு. அம்மமுத்து பிள்ளை.

டாக்டர் மு. அம்மமுத்து பிள்ளை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கள்ள ஓட்டு போடுபவர்கள்மீது கடுமையான நடவடிக்கை எடுக்க மத்திய அரசுக்கு தமிழக அரசு சிபாரிசு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கள்ள ஓட்டு போடக்கூடாது என்ற உணர்வு மத்திய அரசுக்கும், மாநில அரசுக்கும், பொது வாழ்க்கையில் ஈடுபட்டிருக்கிற நல்லவர்கள் அத்தனை பேருக்கும் இருந்து கொண்டிருக்கிறது. அதை எந்த வகையில் தடுக்கலாம் என்பதைப் பற்றித்தான் மத்திய அரசும் இப்போது சிந்தித்துக் கொண்டிருக்கிறது. தேர்தல் ஆணைக் குழுவிற்கும், மத்திய அரசுக்கும், இதற்காக என்று அமைத்த ஒரு குழுவினர்கூட சிபாரிசு செய்திருக்கிறார்கள். ஒவ்வொரு வாக்காளருக்கும் அவர்களை அடையாளம் கண்டுகொள்ளத் தக்க அளவுக்கு, அவர்களுடைய போட்டோ இணைத்த ஒரு கார்டைக் கொடுத்து, அந்த அடிப்படையிலே வாக்குகள் அளிக்க வேண்டுமென்ற நிலைமை வந்தால், கள்ள ஓட்டு போடும் முறையைத் தடுக்கலாம் என்ற அளவிற்கு ஒரு யோசனை கூறப்பட்டிருக்கிறது. அந்த யோசனையை ஏற்றுக் கொண்டிருந்தாலும்கூட, அதற்குப் பெரும் செலவு ஏற்படுமென்ற காரணத்தாலும், இந்தச் செலவை



1992 மார்ச் 10]

மாநில அரசும், மத்திய அரசும் தாங்கிக் கொள்ள வேண்டிய அவசியம் ஏற்படுமென்ற காரணத்தாலும், நிதி நெருக்கடி நிலை மத்திய அரசைப் பொறுத்தும், மாநில அரசுகளைப் பொறுத்தும் இருக்கிறது என்ற காரணத்தாலும் அந்த முறையை உடனடியாக நடைமுறைப்படுத்துவதற்கு இல்லை என்று இருக்கிறது. குறிப்பிட்ட பகுதிகளிலே இதை நடைமுறைப் படுத்தலாமா என்பது பற்றி மத்திய அரசு யோசித்துக் கொண்டிருக்கிறது. உதாரணமாகப் புதுவை மாநிலம் போன்ற சிறு மாநிலங்களில், சிறு பகுதிகளில் அதை நடைமுறைப்படுத்தி, வெற்றி பெறுமானால், படிப்படியாக மற்ற இடங்களில் கொண்டு வரலாம் என்ற யோசனையும் மத்திய அரசிடத்தில் இருந்து கொண்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. இளம்வழுதி.

திரு. இளம்வழுதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேர்தல் நேரத்திலே வாக்களிக்க உரிமையுள்ள வாக்காளர்கள் சுதந்திரமாக அவர்களுடைய வாக்குகளைப் போடுவதற்கு இடைஞ்சலை ஏற்படுத்தும் வகையிலே வன்முறையையும் கலவரத்தையும் உருவாக்குகின்ற சமூக விரோதிகள்மீது எப்படிப்பட்ட நடவடிக்கை எடுக்கப்படுகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேர்தல் அமைதியாக நடைபெற வேண்டுமென்பதும், கட்டுப்பாட்டுடன் நடைபெற வேண்டுமென்பதும்தான் அரசினுடைய நோக்கம். ஆகவே, எல்லோரும் தங்களுடைய விருப்பத்திற்கிணங்க யாருடைய தடைபாடும் இல்லாமல், குறுக்கீடும் இல்லாமல் அவரவர்களுடைய வாக்குகளைச் செலுத்த வேண்டும். அதற்கான வாய்ப்பு வசதிகளை உருவாக்க வேண்டும். அதற்கான சூழ்நிலைகளை ஆங்காங்கு ஏற்படுத்த வேண்டுமென்பதுதான் அரசினுடைய நோக்கம். அந்த அடிப்படையிலேதான் சென்ற பொதுத் தேர்தலிலேகூட, சிறு சம்பவங்கள் அங்கொன்றும் இங்கொன்றும் நடந்ததே தவிர, பெரிய அசம்பாவிதங்கள், வன்முறைகள் நடைபெறவில்லை. ஆனால் அப்படி கலவரம் செய்யக்கூடும் அல்லது கலகம் விளைவிக்கக்கூடும் என்று கருதப்படும் சூழ்நிலையில், யார் யார் அதற்குக் காரணமாக இருக்கிறார்களோ அவர்களை 'ப்ரெவின்டிவ் டிடென்ஷன்' என்ற முறையில் முன்கூட்டியே கைது செய்து, அவர்களை காவலிலே வைக்கும் ஒரு முறை இருந்து வருகிறது. இப்போதும் நடைமுறையில் பல ஊர்களில் அது கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. அந்த முறையிலே எதிர்பாராத வகையிலே, யாரும் நினைக்காத முறையிலே வன்முறைகள் ஏற்பட்டு விடுமானால், அதைத் தடுத்து நிறுத்த பலத்த போலீஸ் காவலும், ராணுவக் காவலும் ஆங்காங்கு செயல்பட்டு வருகின்றன.

[1992 மார்ச் 10

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஆர். சிங்காரம்.

திரு. ஆர். சிங்காரம் : பேரவைத் தலைவர் அவர்களே,
மாண்புமிகு உறுப்பினர் திரு. இளம்வழுதி அவர்கள் சொன்னதைப்
போல தேர்தல் காலங்களில் கலவரம் செய்யும் சமூக விரோதி
களை 'தடா' சட்டத்தின்கீழ் கைதுசெய்ய வாய்ப்பு இருக்
கிறதா ? மேலும் இறந்துபோனவர்கள், காலமானவர்கள்
காலம் மாறியதால், மீண்டும் கீழே வந்து வாக்களிக்கின்ற
ஒரு நிலை, அதாவது கள்ள ஓட்டு போடும் ஒரு நிலையைத்
தடுக்க, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னது
போன்று, அவர்களையும் 'தடா' சட்டத்தின்கீழ் கைது செய்ய
வாய்ப்பு இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9-45

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்
பினர் 'தடா' சட்டத்தையே சரியாகப் புரிந்துகொள்ள
வில்லையோ என்றுதான் நினைக்கிறேன் 'தடா' சட்டம் ஏன்
ஏற்பட்டது ? எதற்காக ஏற்பட்டது ? எந்தச் சூழ்நிலையில்
அதைப் போட வேண்டும் ? என்பதை உணர்ந்து கொண்டு
கடைசி கட்டமாக பயன்படுத்த வேண்டுமென்ற
தன்மையிலேதான் செய்யவேண்டுமே தவிர, எடுத்ததற்கெல்
லாம் 'தடா' சட்டத்தையே பயன்படுத்த வேண்டும் என்று
வந்தால், சிறைகளில் இடமே இருக்காது. புதிய சிறைகள்
தான் கட்டவேண்டுமேதவிர, மருத்துவ மனைகளுக்கு
பள்ளிக்கூடங்களுக்கு ஒதுக்க வேண்டிய பணத்தையெல்லாம்
இதற்குத்தான் ஒதுக்கவேண்டி வரும். ஆனால் அந்தந்த
கட்டங்களில் குற்றங்களின் அடிப்படையில் கைது செய்வதற்
கும், தண்டனை கொடுப்பதற்கும் இந்தியன் பீனல் கோட்
சட்டத்திலும், கிரிமினல் புரசீஜர் கோட் சட்டத்திலும் ஏராள
மான விதிமுறைகள் இருக்கின்றன. அவைகளையெல்லாம்
மீறி வருகின்ற வன்முறைச் சூழ்நிலைகளைச் சமாளிப்பதற்
காக வைத்திருக்கின்ற சட்டம்தான் 'தடா' சட்டம். ஆகவே
அதைப்பயன்படுத்துவதற்கில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சூ. சே. இராஜ
மன்னார்.

திரு. சூ. சே. இராஜமன்னார் : பேரவைத் தலைவர்
அவர்களே, வாக்குப் பதிவின் சதவீதம் குறைந்துகொண்டே
வருவதற்கு முக்கிய காரணம், அரிசன மக்களை வாக்களிக்
காதவாறு தடுப்பதுதான். சென்ற தேர்தலில் எனது தொகுதி
யில் நான் சுற்றுப் பயணம் செய்தபோது பல கிராமங்களில்
ரோடு வேண்டும், தண்ணீர் வேண்டும் என்று கேட்டார்கள்.
ஆனால் பல அரிசன கிராமங்களில் இன்னும் வாக்குச்
சீட்டையே இதுவரை நாங்கள் பார்த்ததில்லை என்று கூறி



1992 மார்ச் 10]

னார்கள். அவர்கள் வாக்குப் போட வேண்டுமென்று மிகவும் ஆவ
லோடு கூறினார்கள். அதற்கு ஏற்பாடு செய்வதற்கு அந்தப்
பகுதியில் போனபோது, தேர்தல் அன்று ஜமீன்தார்கள் என்று
சொல்லப்படுபவர்கள் பலபேரால் நானே துப்பாக்கியால்
சுடப்பட்டேன். 13 ரவுண்டுகள் போலீசார் சுட்டு, அந்த அரி
சன மக்களை வாக்களிக்க ஏற்பாடு செய்தார்கள். அப்படி
யிருந்தும், 15 ஆயிரம் அரிசன மக்களில் 5 ஆயிரம் அரிசன
மக்கள்தான் வாக்களித்தார்கள். 10,000 அரிசன மக்கள்
தடுக்கப்பட்டார்கள். இப்படி 'சென்சிடிவ்' ஆன அரிசன
மக்கள் உள்ள ஏரியாக்களில் போலீசாரை விட்டு மிகவும்
பாதுகாவலாக சினிமாவில் வருவது போல பபுன் போலீஸாராக
இல்லாமல் துப்பாக்கி ஏந்திய போலீஸாரை மிகவும் 'சென்
சிடிவ்' ஸ்பாட்டில் போட்டு அரிசன மக்களை வாக்குப் பதிவு
செய்ய வைத்தாலே வாக்குப் பதிவு அதிகரித்து விடும். அதற்கு
ஏற்பாடு செய்ய அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, வாக்களிக்க வேண்டுமென்று
விரும்புகிறவர்கள் அத்தனை பேரும் அவர்களுடைய விருப்
பத்தின் அடிப்படையில் வாக்களிக்க வேண்டுமென்பதுதான்
அரசினுடைய நோக்கம். ஆகவே அவர்கள் வாக்களிப்பதற்கான
எல்லாவிதமான வசதிகளையும், வாய்ப்புகளையும், சூழ்
நிலைகளையும் அமைதியான தன்மைகளையும் ஏற்படுத்து
வதற்கான எல்லா நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்
டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவது
போன்று தாழ்த்தப்பட்ட நண்பர்கள் தடுத்து நிறுத்தப்படு
வதன் காரணமாகத்தான் பொதுவாக வாக்கு எண்ணிக்கை
குறைவாக இருக்கின்றது என்ற கருத்தை ஏற்றுக்கொள்வ
தற்கில்லை. அவர்கள் சொல்கின்றபடி சில பல கலவரங்கள்,
குறிப்பிட்ட சில பல கிராமங்களில் வேண்டுமென்றால் யாருக்
குமே தெரியாமல் நடைபெற்றிருக்குமே தவிர, தமிழகம் முழு
வதும் நடந்த தேர்தல்களில் ஆதி திராவிடப் பெருங்குடி
மக்கள் வாக்களிக்கவில்லையென்று யாரும் சொல்ல முடியாது.
இன்னும் சொல்லப்போனால், மாறாக நான் சொல்வேன்.
அதிகமான அளவுக்கு வாக்குப் போடுகின்ற தன்மையிலே இருப்
பவர்கள் ஆதிதிராவிடப் பெருங்குடி மக்களும், சேரியில்
வாழ்கிற மக்களும்தான். யார் வரவில்லை என்றால், மேட்டுக்
குடியினர் வருவதில்லை, பங்களாவாசிகள் நகருவதில்லை.
நிரம்பப் படித்தவர்கள் என்று கருதிக் கொண்டிருப்பவர்கள்
தான் நிரம்ப மிதப்போடு இருந்து வாக்குப் போட வராமல்
இருப்பார்களே தவிர, ஆதிதிராவிடர்களைப் பொறுத்தவரையில்,
கணக்குப் போட்டுப் பார்த்தால், நான் பார்த்த வகையில்,
அதிகமான அளவுக்கு வாக்களிக்கின்ற வகையில் பல
இடங்களில் இருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர்
கூறுவதைப் போல குறிப்பிட்ட சில இடங்களில் விதி விலக்கு
இருக்கக்கூடும், கலவரங்கள் ஏற்பட்டு இருக்கக்கூடும், தடுக்கப்

பட்டிருக்கக்கூடும். அவற்றையெல்லாம் தடுப்பதற்கான முயற்சிகளைக் காவல் துறையினர் முறைப்படி மேற்கொண்டு வருகிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 140, திரு. எஸ். ஆர். ஜெயராமன், மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர்.

140—

மாவட்ட முன்சீப் நீதிமன்றம்.

* 5049. திரு. எஸ். ஆர். ஜெயராமன் :

மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

சேலம் மாவட்டத்தில், ஓமலூர் வட்டத்தில், ஓமலூரைத் தலைமையிடமாகக் கொண்டு மாவட்ட முன்சீப் நீதிமன்றம் எப்போது செயல்படத் தொடங்கும் ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சேலம் மாவட்டம், ஓமலூரில் மாவட்ட முன்சீப் நீதிமன்றம் அமைக்கும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. எஸ். ஆர். ஜெயராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு நல்ல செய்தியைச் சொல்லியிருக்கிறார்கள். அதற்காக என்னுடைய நன்றியை நான் தெரிவித்துக் கொள்கிறேன். வெகுசீக்கிரமாக மேட்டூரில் இருக்கக்கூடிய அந்த நீதிமன்றத்தை ஓமலூருக்குக் கொண்டுவந்தால், 30 மைல்களுக்கு அப்பால் இருந்து செல்லக்கூடிய ஏழை மக்களுக்கும் தொழிலாளர் வர்க்கத்திற்கும் அது சௌகரியமாக இருக்கும் என்று கூறி அதற்காக நான் நன்றியைக் கூறிக்கொள்கிறேன். (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எப்போது அதை ஓமலூருக்குக் கொண்டுவருவார் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : "மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விரைவில் கொண்டு வரப்படும்.

முற்பகல் 9-50

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருமதி செ. சுந்தராம்பாள்.

திருமதி செ. சுந்தராம்பாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மேட்டூரில் இருக்கும் முன்சீப் கோர்ட்டை ஓமலூருக்கு மாற்றுவதாகக் கூறினார்கள். ஓமலூரைவிட பத்து மடங்கு பெரியதாக மேட்டூர் உள்ளது. அங்கே பத்து தொழிற்சாலைகள் உள்ளன. ஆகவே மேட்டூரில் உள்ள முன்சீப் கோர்ட்டை மாற்றக்கூடாது என்று உங்களைப் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.





மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓமலூர் சட்டமன்றப் பேரவை உறுப்பினர் கேட்டது அவருடைய தொகுதிக்கு. அவருடைய தொகுதிக்குத் தனியாக அமைக்கப்படும். மேட்டூரில் நிச்சயமாக போற்றுதற்குரிய புரட்சித் தலைவி அவர்கள் தலையிட மாட்டார்கள். அந்த நீதிமன்றம் அங்கேயே இருக்கும். புதியதாக ஒரு நீதிமன்றம் ஓமலூரில் அமைக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கே. கந்தசாமி.

திரு. கே. கந்தசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கூறியதுபோன்று மேட்டூரில் உள்ள கோர்ட் மேட்டூரிலேதான் இருக்கும். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெயராமன் கேட்டது, ஓமலூருக்கு உரிய கோர்ட்டை ஓமலூருக்குக் கொண்டுவர வேண்டும் என்பதுதான். எனவே ஓமலூருக்கு உரிய முன்சீப் கோர்ட் இந்த நிதியாண்டிலேயே கொண்டுவரப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது அனுதாபத்தோடு கவனிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 141. திருமதி ப. சரஸ்வதி மற்றும் திரு. கே. தவசி, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

141—

குடியிருப்பு பட்டா வழங்கல்.

*3824 திருமதி ப. சரஸ்வதி

திரு. கே. தவசி :

மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழ்நாடு குடியிருப்பு சட்டப்படி எத்தனை நபர்களுக்கு குடியிருப்பு பட்டா வழங்கப்பட்டது?

(ஆ) குடியிருப்பவர்களுக்கு எவ்வளவு நிலம் ஒப்படைக்கப்படுகிறது?

(இ) எவ்வளவு நபர்களுக்கு நிலம் வழங்கப்படாமல் உள்ளது?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) 1,81,609 நபர்களுக்கு குடியிருப்புப் பட்டா வழங்கப் பட்டுள்ளது.

[1992 மார்ச் 10

(ஆ) ஒவ்வொருவருக்கும் மூன்று சென்ட் நிலம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

(இ) மீதி குடியிருப்புப் பட்டா வழங்க வேண்டிய நபர்களின் எண்ணிக்கை 7,357.

திருமதி ப. சரஸ்வதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு குடியிருப்பு சட்டத்தின்படி குடியிருப்பு பட்டா பெற என்ன தகுதி வேண்டும்? எந்தெந்த பிரிவினருக்கு எவ்வளவு கொடுக்கப்படும்? சில பகுதிகளில் இரண்டு சென்ட் நிலம் கொடுக்கப்பட்டிருப்பதால் தொகுப்பு வீடுகள் கட்ட இயலவில்லை. ஆகவே அவற்றை அமைச்சர் அவர்கள் அறிவிப்பாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடி உரிமை பட்டா வழங்குவதற்குத் தகுதி— அவர்கள் விவசாயிகளாக இருக்க வேண்டும் அல்லது விவசாயத் தொழிலில் இருக்க வேண்டும் ; அல்லது கிராமக் கைவினைஞர்களாக இருக்க வேண்டும். பட்டா கோருபவர்கள் குடியிருப்பு இடத்தில் குத்தகைதாரராகவோ அல்லது அனுபவிப்பவராகவோ யார் நிலத்தில் வேண்டுமானாலும் —அரசு நிலமாக இருந்தாலும் சரி, தனியார் நிலமாக இருந்தாலும் சரி—இருக்கலாம். அப்படி குடியிருந்தால் அவர்களுக்கு அந்த இடம் கொடுக்கப்படும்.

திரு. கே. தவசி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பட்டா வழங்குவதில் வி.ஏ.ஓ., மற்றும் தாசில்தார் ஆகியவர்கள் நகர்ப்புற சொத்துக்களை பினாமியாக பட்டாப்போட்டு தங்களுக்குச் சொந்தமாக்கிக் கொள்கிறார்கள். இதில் பொதுமக்கள் பிரதிநிதிகளாகிய சட்டமன்ற உறுப்பினர்களின் கருத்துக்கள் அங்கே இடம் பெறுமா? இதற்கான செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்வி குடியுரிமை பட்டா வழங்குவதைப் பற்றியதாகும். குடியுரிமை என்றால் முதலிலே விவசாயத் தொழிலாளர்கள் அல்லது விவசாயிகள் எங்கேயாவது குடியிருந்தால், குடியிருந்ததால் அதற்கு அவர்கள் உரிமை பெறுவது என்பதாகும். அந்த உரிமை சம்பந்தமாக வழங்கப்படுவதே ஒழிய அரசு நிலத்தை மாற்றுவது என்பதல்ல, என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. மா. சுந்தரதாஸ்.



1992 மார்ச் 10]

திரு. மா. சுந்தரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் மாவட்டத்தில் பெரிய பணக்காரர்கள் ஆயிரக்கணக்கான ஏக்கர் புறம்போக்குகளை வைத்திருக்கிறார்கள். அந்தப் பகுதிகளை ஏழை அரிசன மக்களுக்கு, வீடு இல்லாதவர்களுக்கு எல்லாம் பட்டா போட்டுக் கொடுக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலிலே சொன்ன பதிலைத் தான் திருப்பிச் சொல்ல வேண்டும். மூலக் கேள்விக்குச் சம்பந்தப்படாத கேள்வியாக இருந்தாலும், பொதுப்படையாக பட்டா என்பதாலும், குடியிருப்பு என்பதாலும், எல்லோருக்கும் பட்டா என்றால் புறம்போக்கு நிலம் என்ற உணர்வு இருப்பதால்தான் இந்தக் கேள்விகளைக் கேட்கிறார்கள் என்று கருதுகிறேன். ஆகவே, இதை நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். தமிழ்நாடு பூராவும் பல இடங்களில் இப்படி அரசு புறம்போக்குகளில், வாரிப் புறம்போக்குகளில் குடியிருந்து கொண்டிருக்கிறார்கள் என்பது அரசுக்குத் தெரியும். இப்போது அரசு என்ன நினைத்துக் கொண்டிருக்கிறது என்றால், குடியிருப்பவர்கள் தகுதியுடையவர்களானால்— தகுதி என்றால் அவர்களுக்கு நிலமே இல்லாமல் தகுதியுடையவர்களாக இருந்தால்— அந்தக் குடியிருப்பு இடம் அரசுக்குத் தேவைப்படாமல் இருந்தால், அவைகளையெல்லாம் தகுதியுடையவர்களுக்குக் கொடுக்க வேண்டும் என்று அரசு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கெல்லாம் இன்றைக்குத் தெரிவித்திருக்கிறது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 9-55

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மூலக் கேள்வி குடியிருக்கிற இடத்தை, அங்கு குடியிருக்கிறவர்களுக்கே பட்டா வழங்குவது பற்றியது. அதையொட்டிய துணைக் கேள்வியாக இருக்க வேண்டும். திரு. வி. கே. சின்னசாமி.

திரு. வி. கே. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் தமிழகத்தைப் பொறுத்த மட்டில் ஏழைகள் பள்ளவாடி மயானம் என்ற இடத்தில் குடி இருந்து வருகிறார்கள். அதாவது 100 ஆண்டுகளுக்கு முன்பு 'மயானம்' என்று அந்த இடம் அங்கீகரிக்கப்பட்டு இருக்கிறது. அரசாங்க கெசட்டிலும் அது இருக்கிறது. 100 ஆண்டுகளுக்கு மேல் அந்த ஏழைகள் வீடுகள் எல்லாம் கட்டி குடி இருந்து வருகிறார்கள். அவர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க வேண்டுமென்று பலமுறை விண்ணப்பித்து இருந்தாலும், நாங்களும் மாவட்ட ஆட்சியரிடத்திலும் மற்றும் அமைச்சரிடத்திலும் மனுக்களைக் கொடுத்துக் கொண்டு இருக்கிறோம். ஆனால் இதுநாள் வரை அதைச் செய்ய முடியாமல் இருக்கிறது. அரசாங்கம்தான் அதற்கு தனியாக உத்திரவு வழங்க வேண்டும்.

மென்று மாவட்ட வருவாய் அலுவலர்கள் சொல்லுகிறார்கள்.
எனவே, அப்படிப்பட்ட நிலங்களை மாண்புமிகு இதய தெய்வம்
டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் முதல்வராக இருக்கின்ற
நேரத்தில், அந்த இடத்திலே குடி இருப்பவர்களுக்கு பட்டா
வழங்குவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை
எடுப்பார்களா என்பதோடு, சில இடங்களிலே முன்பு இருந்த
ஆட்சியாளர்கள் முறையாக பட்டாக்கள் வழங்கி இருக்கிறார்
கள் ; தகுதியற்றவர்களுக்கு, குறிப்பாக புஞ்சைப்புளியம்பட்டி
யில் கூட பட்டா முறையற்ற வகையில் வழங்கி, 2, 3
ஆண்டுகள் ஆகியும்கூட அந்த இடங்களிலே அவர்கள் இன்னும்
குடியிருப்பே ஏற்படுத்தாமல் அதை காலி இடமாக வைத்து
இருக்கிறார்கள். 6 மாதங்களில் ஒருவர் பட்டா வாங்கி
அந்த இடத்திற்கு குடி போகவில்லை என்றால் அதை கேன்சல்
செய்யலாம் என்று ஒரு அறிவிப்பு கூட அரசாங்கத்தில் இருக்
கிறது. அப்படிப்பட்ட இடங்களை ஆய்வு செய்து நடவடிக்கை
எடுக்க அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று அறிய
விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, தகுதியற்றவர்களுக்கு பட்டா
கொடுக்கப்பட்டு இருந்தால், அப்படிக் கொடுக்கப்பட்டவர்
களை எல்லாம் கண்டுபிடித்து அவை நீக்கப்படுகிறது.
அப்படி தகுதியற்றவர்களுக்கு பட்டா கொடுக்கப்பட்டு இருந்
தால் சட்டமன்ற உறுப்பினர்கள் அதுபற்றித் தெரிவிக்கலாம்.
அதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். அதேபோல் தகுதியுடை
யவர்கள்— நான் முதலில் சொன்ன பதிலை திரும்பச் சொல்
கிறேன் அரசுக்கு தேவைப்படாத நிலங்களில் குடி இருந்தால்
அவர்களுக்கு முறைப்படி பட்டா கொடுப்பதற்கு இந்த அரசு
விரைவில் நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்
கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருமதி ஏ. எஸ். பொன்
னம்மாள்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, பல ஆண்டுக்காலமாக பல ஊர்களில்
ஏழைகள் பட்டா இல்லாமல் குடிசைகளில் குடி இருந்து வரு
கிறார்கள். அப்படி குடி இருந்து வருகின்றவர்கள் கூட்டுறவுத்
துறை மூலமாகவோ அல்லது ரூரல் ஹவுசிங் ஸ்கீம் மூல
மாகவோ அல்லது தாட்கோ திட்டத்தின் மூலமாகவோ
வீடு கட்ட வேண்டுமென்றால் அதற்கு பட்டா தேவைப்படு
கிறது. அவர்கள் பட்டா வாங்குவதற்கு மிகவும் சிரமமான
சூழ்நிலை நிலவுகிறது. பல ஆண்டுகள், பல மாதங்களாக
அவர்கள் மனுக்கள் போட்டால் கூட சீக்கிரம் நடவடிக்கை
எடுக்கப்படவில்லை. ஆகையினால், இதற்கென்று ஒரு கால
கட்டத்தை நிர்ணயம் செய்து, ஓராண்டுக்குள்ளாக எங்கெங்



கெல்லாம் பட்டா இல்லாமல் இருக்கிறார்களோ அங்கு அவர்
களுக்கெல்லாம் உடனடியாக பட்டா வழங்குவதற்கு நட
வடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய சட்டமன்றத்தில்
234 சட்டமன்ற உறுப்பினர்கள் இருக்கிறார்கள். அவர்கள்
எல்லோருமே அவரவர்கள் தொகுதியில் எங்கெங்கே யார் பல
ஆண்டுக் காலமாக குடியிருக்கிறார்கள், அவர்கள் பல ஆண்டுக்
காலமாக குடி இருப்பது அரசுக்கு தேவையில்லாத நிலமானால்
—அது புறம்பொக்கு என்றும், வாரிப் புறம்போக்கு என்றும்
இருக்கிறது; இவற்றையெல்லாம் அவர்களே ஆய்வு செய்து
கொடுத்தால் அந்த ஏழைகளுக்கு விரைவில் பட்டா கொடுப்
பதற்கு வாய்ப்பாக இருக்கும். சட்டமன்ற உறுப்பினர்களே
ஆய்வு செய்ய வேண்டுமென்று நான் சொல்லவில்லை; அரசும்
ஆய்வு செய்கிறது நீங்களும் தொகுதி வேலைகளைச் செய்த
மாதிரி இருக்கும்; ஆய்வு செய்த மாதிரி இருக்கும்; ஏழைகளுக்கு
நன்மை செய்த மாதிரி இருக்கும்; காரியமும் விரைவில் முடி
வடையும்; நீங்கள் ஒத்தாசை செய்யலாம் என்று கேட்டுக்
கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. வே. பெரியசாமி:

திரு. வே. பெரியசாமி : மாண்புமிகு தலைவர் அவர்களே,
மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் வாரிப்
புறம்போக்கு, பள்ளம் புறம்போக்கு போன்ற இடங்களை
எல்லாம் சட்டமன்ற உறுப்பினர்கள் ஆய்வு செய்து அதை
அரசுக்குத் தெரியப்படுத்தினால் பட்டா வழங்குவதற்கு ஆவன
செய்வதாக இருக்கும் என்று சொன்னார்கள். ஆனால் ஓடைப்
புறம்போக்கு, பள்ளம் புறம்போக்கு, மேய்ச்சல் புறம்போக்கு
என்று வெள்ளைக்காரன் காலத்திலேயே ரிக்கார்டிலே பதிவு
செய்யப்பட்டு இருக்கிறது. இப்போது அவைகளில் ஓடையும்
இல்லை, பள்ளமும் இல்லை, மேய்ச்சலுக்கு வேண்டிய இடமும்
இல்லை. அங்கே குடிசைகளில் நீண்ட காலமாக தாழ்த்தப்
பட்ட, பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட,
மலைவாழ் மக்கள் குடிசைகளைப் போட்டு, வீடு கட்டி வாழ்ந்து
வருகிறார்கள். அந்தப் பகுதி மக்களுக்கு பட்டா வழங்க
வேண்டுமென்று மாவட்ட ஆட்சியரிடத்திலே சொன்னால்
அதுபற்றி அரசிடத்திலே தான் சொல்ல வேண்டும் என்றும்
அரசு தான் இந்த நிலங்களை கிளாசிபிகேஷன். . . . . . . . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வியாகக் கேளுங்
கள்.

திரு. வே. பெரியசாமி : இந்த நிலத்தை கிளாசிபிகேஷன்
பண்ணி, இன மாற்றம் செய்தால்தான் பட்டா வழங்க முடியும்

என்று சொல்கிறார்கள். ஆகவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்கு ஆவன செய்வார்களா என்று அறிய பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

முற்பகல் 10–00

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல பல இடங்களில் அம்மாதிரியாகத் தான் இருக்கிறது, வாரிப் புறம்போக்கு என்று இருக்கிறது, ஆனால் வாரிப் புறம்போக்கு இல்லை, குட்டைப் புறம்போக்கு என்று இருக்கிறது, ஆனால் குட்டைப் புறம்போக்கு இல்லை, அதையெல்லாம் ஏற்றுக் கொள்கிறேன், அப்படிப்பட்டவைகளை எல்லாம் கிளாசிபிகேஷன் செய்யவேண்டுமென்று மாவட்ட ஆட்சித் தலைவர்களிடமிருந்து வருகிறவைகளுக்கெல்லாம் உடனடியாக உத்தரவு போடப்படுகிறது, இந்த அரசும் அதற்கு வேண்டியவற்றை செய்து வருகிறது, நான் பல மாவட்டங்களுக்கு சுற்றுப்பயணம் செல்கிறபோது மாவட்ட ஆட்சித் தலைவர். மாவட்ட வருவாய்த் துறை அதிகாரிகளை ஒன்றாகக் கூப்பிட்டு வைத்து அவர்களுக்கு நேரிடையாக சொல்லியிருக்கிறேன், அவைகள் எல்லாம் ஆக்கிரமிப்புச் செய்யப்படுகிறபோது வருவாய்த் துறை அதிகாரிகள் தான் அரசுக்கு கண்ணும் காதுமாக இருக்கிறீர்கள், எங்கே என்ன நடந்தாலும் உங்களுக்கு நன்றாகத் தெரியும், அப்படி எங்கே என்ன நடக்கிறது என்று தெரிகிறபோது, தேவையில்லாத இடங்களில் ஆக்கிரமிப்பு செய்வார்களானால். அரசுக்கு தேவையிருந்தால் அவர்களை உடனே அகற்றி விடுங்கள். இல்லையென்றால் ஆக்கிரமிப்பு செய்பவர்கள் தகுதியுடையவர்களாக இருந்தால் அதைக் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யுங்கள், உங்களால் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்ய முடியாவிட்டால் உடனே அரசுக்கு சிபாரிசு செய்யுங்கள் என்று எல்லா மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும் மட்டுமல்ல, வருவாய்த் துறை அதிகாரிகளையும் கூப்பிட்டு பல மாவட்டங்களில் நான் தெரிவித்து இருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. எஸ். திருநாவுக்கரசு.

திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் ஒப்புக் கொண்டதைப் போல ஏற்கெனவே பல ஆண்டுகளாக குடியிருந்து, ரசீதும் பெற்று 20 ஆண்டு, 30 ஆண்டு என்று அந்த இடங்களில் குறிப்பாக ஆதிதிராவிட சமுதாயத்தைச் சார்ந்த மக்கள் தான் வாழ்ந்து வருகிறார்கள், இதற்கு மாவட்ட ஆட்சித் தலைவர்களோ அல்லது ஆர். டி. ஓ.



டி. ஆர். ஓ., நினைத்தாலும் அவர்களால் அந்த இடங்களை அவர்களுக்குப் பட்டா போட்டு கொடுக்க முடியவில்லை, அதற்கு காரணம் ஏற்கெனவே அரசால் ஒரு ஜி. ஓ. வெளியிடப்பட்டிருக்கிறது. அந்த ஜி. ஓ., வின்படி ஏரி புறம்போக்கு, குளம் புறம்போக்கு ஆகியவற்றையெல்லாம் அதிகாரிகள் நினைத்தாலும் பிரித்து கொடுக்க முடியாது, ஆகவே, அந்த ஜி. ஓ.,-வை மாற்றி அரசாங்கம் இன்னொரு ஜி. ஓ., வெளியிட்டால் தான், சட்டமன்ற உறுப்பினர்கள் போகிறபோது அவர்களிடம் கொடுக்கிற கோரிக்கைகளை ஏற்றுக் கொண்டு ஆங்காங்கே இருக்கிற வருவாய்த் துறை அதிகாரிகள் அந்த இடங்களுக்கு பட்டா போட்டு கொடுக்க முடியும். அதை வருவாய்த் துறை பரிசீலிக்குமா என்று கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்,

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னைக்கும் மாவட்டத் தலை நகரங்களுக்கும் இன்றைக்கு வெகுதூரம் இல்லை, அதைப்போல எதையெதை கிளாசிபிகேஷன் செய்ய வேண்டுமென்று வருவாய்த் துறை அதிகாரிகள் செய்தாலும், உடனடியாக அதை மாற்றுவதற்கு அரசு தயாராக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 142, திரு. எம். ஆண்டி அம்பலம். மாண்புமிகு பிற்பட்டோர் நலத் துறை அமைச்சர்.

142—

தம்பிரான் சமூகத்தினரை பிற்பட்டோர் பட்டியலில் சேர்த்தல்,

*5295—திரு. எம். ஆண்டி அம்பலம் :

மாண்புமிகு பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) அரசு இதுவரை வெளியிட்ட மற்றும் திருத்தப்பட்ட சாதிப் பட்டியல்களில் தம்பிரான் என்றழைக்கப்படும் சமூகத்தினர் இடம்பெறவில்லை என்பதை அரசு அறியுமா ?

(ஆ) அது குறித்து அரசுக்கு அந்தச் சமூகத்தினர் ஏதேனும் முறையீடு செய்துள்ளனரா ?

(இ) ஆம் எனில், அந்த சமூகத்தவரை பிற்பட்ட இனத்தவர் பட்டியலில் இடம்பெறத் தகுந்தவர்களா எனக் கண்டறிந்து பட்டியலில் சேர்க்க அரசு முன்வருமா ?

[1992 மார்ச் 10

மாண்புமிகு திரு. இராம வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) 'தம்பிரான்' என்று அழைக்கப்படுபவர்கள் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் இடம் பெறவில்லை என்பதை அரசு அறியும்,

(ஆ) மற்றும் (இ): செங்கல்பட்டு எம். ஜி. ஆர். மாவட்ட வீர சைவர்கள் சங்கம் என்ற அமைப்பு 'தம்பிரான்' என்ற சமூகத்தினரை மிகப் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் உள்ள ஆண்டிப் பண்டாரம், ஜங்கம், யோகிஸ்வரர் ஆகிய வகுப்புகளில் ஏதேனும் ஒன்றில் சேர்த்து ஆணை பிறப்பிக்கக் கோரி 1989-ஆம் ஆண்டு ஜூலை மாதம் அரசுக்குக் கோரிக்கை அனுப்பியிருந்தது, இரண்டாவது பிற்படுத்தப்பட்டோர் நலக் குழு 'தம்பிரான்' என்ற சாதியை பிற்படுத்தப்பட்டோர் பட்டியலிலோ அல்லது மிகப் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் உள்ள ஆண்டிப் பண்டாரம், ஜங்கம், யோகீஸ்வரர் ஆகிய வகுப்புகளில் ஏதேனும் ஒன்றில் சேர்ப்பதற்குப் பரிந்துரை செய்யவில்லையாதலால், இக் கோரிக்கை ஏற்றுக் கொள்ளப் படவில்லை,

திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒருவர் இறந்துபோனால் சங்கு செகண்டி அடித்து மயானம் வரை சென்று அவர்கள் ஈமச்சடங்கு வரை இருக்கிற நிலை இருக்கிறது. அவர்களுக்கு எந்தவிதமான முன்னுரிமையும் இல்லாமல் இருப்பதால் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் தங்களைச் சேர்க்க வேண்டுமென்பது அவர்களுடைய கோரிக்கையாக இருக்கிறது. அந்தக் கோரிக்கை அரசுக்கு வந்துள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்,

மாண்புமிகு திரு. இராம வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசுக்குக் கோரிக்கை வந்திருக்கிறது என்பதையும் சொல்லியிருக்கிறேன், ஏன் சேர்க்க இயலவில்லை என்பதையும் தெரிவித்து இருக்கிறேன், ஏனென்றால் இரண்டாவது பிற்படுத்தப்பட்டோர் நலக்குழு மிகத் தீவிரமாக விவரமாகப் பரிசீலித்து அறிக்கைகளையெல்லாம் பெற்றுத்தான் முடிவை அரசுக்கு அனுப்பியிருக்கிறது, நீங்கள் சொல்வதைப் போல அப்படிப்பட்ட சில பணிகளில் ஈடுபடுகிற ஆண்டிப் பண்டாரம், ஜங்கம், யோகீஸ்வரர் போன்ற வகுப்பினர் மிகப் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளனர், ஆனால் 'தம்பிரான்' என்ற பெயரில் ஒரு பிரிவை அந்தக் குழு விசாரித்து சேர்க்கவும் இல்லை. அல்லது அந்த விசாரணையிலே யாரும் தெரிவித்ததாகவும் இல்லை, ஆகவே அந்தக் குழுவினுடைய முடிவை ஒட்டித்தான் இன்றைக்கு அரசு ஆணை பிறப்பித்து இருக்கிறது, ஆகவே இதை இப்போது மறுபரிசீலனை செய்வதற்கு இயலாது,



மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. இராம. இராமநாதன்.

முற்பகல் 10-05

திரு. இராம. இராமநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. கஷ்டப்படுகின்ற குடும்பங்கள் எல்லாம் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் என்கிற வரிசையிலே சேர்க்கப்பட்டு வருகின்றது, சமுதாயத்திலே மிகவும் பின்தங்கிய நிலையிலே இருக்கின்ற இந்த இனத்திலே, இந்தத் துறையிலே சேர்ந்து இருக்கின்றவர்கள், வாழ்க்கையிலே மேம்பாடு அடையவேண்டும், அவர்கள் முன்னேறவேண்டும் என்கிற அடிப்படையில் இன்றைக்கு காவல் தெய்வம், புரட்சித் தலைவி அவர்களுடைய அரசாங்கம் சீரிய முறையிலே இன்றைக்கு செயல்பட்டுக்கொண்டு இருக்கிறது. ஆனால் ஒன்றை நானும்........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வியாகக் கேளுங்கள்,

திரு. இராம. இராமநாதன் : ஒன்றைக் கேட்கக் கடமைப்பட்டு இருக்கிறேன். எங்களைப் போன்ற பல பேர்கள் இன்றைக்கு மிகவும் பிற்படுத்தப்பட்ட நிலையில் இருந்து வருகிறார்கள், வாழ்க்கையிலே முன்னேறுவதற்கு வழியில்லாமல் திண்டாடிக் கொண்டிருக்கிறார்கள், எனவே, எங்களைப் போன்ற பல பேர்களை பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலிலே சேர்க்க அரசாங்கம் முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன், (மேசையைத் தட்டும் ஒலி).

மாண்புமிகு திரு. இராம வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முன்னாலே வேறு ஒரு குறிப்பிட்ட பிரிவைப் பற்றி கேட்கப்பட்டு இருக்கிற கேள்விக்கு விடை அளித்து இருக்கிறேன், பொதுவாகவே, உச்சநீதிமன்றத்தினுடைய தீர்ப்பையொட்டித்தான் இரண்டாவது குழு அரசினாலே அமைக்கப்பட்டது, அந்தக் குழு விரிவாக ஆராய்ந்து பல்வேறு இடங்களுக்குச் சென்று பல கருத்துக்களைப் பெற்று பல கோரிக்கைகளைப் பெற்று, தமிழ்நாட்டிலே இருக்கிற சூழ்நிலைகள் அனைத்தையும் ஆராய்ந்துதான், அரசுக்கு அறிக்கை அளித்துள்ளது, அதையொட்டித்தான், 1985-வது ஆண்டில் அரசு பிற்படுத்தப்பட்டவர்கள் அல்லது மிகவும் பிற்படுத்தப்பட்டவர்கள் அல்லது சீர்மரபினர் என்று பல்வேறு பிரிவுகளை உள்ளடக்கிய சுமார் 200-க்கும் மேற்பட்ட சாதிப் பிரிவுகளை அறிவித்து வெளியிட்டு இருக்கிறது, இதற்குமேல். ஒவ்வொரு பிரிவினரும் தங்களை இப்படி சேர்க்கவேண்டும்

என்ற கோரிக்கையை வைத்துக் கொண்டேயிருக்கின்றனர். அதற்கு எல்லையே இல்லாமல் போய்விடும், ஆகவே தான் அரசு இப்போது அதைப்பற்றி மறுபரிசீலனை செய்வதற்கு இயலாது என்பதைத் திட்டவட்டமாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 143. டாக்டர் க. கோபால். மாண்புமிகு கல்வி அமைச்சர்.

143—

நன்னிலம் தொகுதியில் கல்லூரி.

*3278 டாக்டர் க. கோபால் :

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

நன்னிலம் தொகுதியில் உயர் கல்வி நிலையங்கள்—தொழிற் கல்லூரியோ அல்லது கலைக் கல்லூரியோ—இல்லையாதலால் உடன் ஏதேனும் ஒரு கல்லூரி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தற்போது இயலாது,

டாக்டர் க. கோபால் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நன்னிலம் தொகுதி பெரும்பாலும் ஏழை நடுத்தர விவசாயிகள் வாழ்கின்ற தொகுதியாகும், அவர்கள் தங்கள் குழந்தைகளை கல்லூரிக்கு அனுப்புவது என்றால், நன்னிலம் தொகுதியில் இருந்து கும்பகோணத்திற்கோ அல்லது மன்னமங்கலத்திற்கோ அனுப்புகிற சூழ்நிலையில் உள்ளனர். அப்படியே கல்லூரிக்கு அனுப்புவதாக இருந்தாலும், அவர்கள் தினந்தோறும் கல்லூரிக்குச் செல்வதற்கும் விடுதியில் தங்குவதற்கும் மிகவும் சிரமமான சூழ்நிலையில் உள்ளனர். எனவே, இந்தக் கல்வி ஆண்டில் இல்லை என்றாலும் வருகிற நிதியாண்டிலாவது அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொகுதிக்குத் தொகுதி கல்லூரிகள் ஆரம்பிக்கிற திட்டம் இப்போது அரசிடம் இல்லை, இரண்டாவது ஒரு இடத்திலே நாம் கல்லூரிகளை அமைத்தால், அது அந்த இடத்திலே இருக்கின்றவர்களுக்கு வேண்டுமானால் சௌகரியமாக இருக்கலாமே தவிர, தொகுதியில் இருக்கிற மற்றவர்கள் போய்த்தான்



படித்துத்தீர வேண்டும். ஆகவே, தொகுதிக்குள்ளே ஒரு இடத்திலே போய் படிக்கின்றவர்கள், பக்கத்திலே இருக்கிற கல்லூரியிலே சேர்ந்து படிக்கலாம். போதுமான அளவிற்கு கல்லூரிகள் இருக்கின்றன: கலைக் கல்லூரிகள் இருக்கின்றன. இந்த நிலையில் இப்போது புதிதாக கல்லூரியை நன்னிலம் தொகுதியில் ஆரம்பிக்கிற திட்டம் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 144, திரு. வ. மு. சுப்பிரமணியம். மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

144—

மணலூர் காகித மற்றும் இராசாயன ஆலைகளின் கழிவுகள்.

*1388 திரு. வ. மு. சுப்பிரமணியம் :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா .

(அ) பசும்பொன் முத்துராமலிங்கதேவர் மாவட்டம், மணலூரில் உள்ள காகித மற்றும் இரசாயன ஆலைகளின் கழிவுகள் முறையாக வெளியேற்றப்படவில்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்தால் நிறுவனத்தார்கள் மீது தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டும், கண்காணிக்கப்பட்டும் வருகிறது.

திரு. வ. மு. சுப்பிரமணியம் : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில்
அளித்ததைப் போல, இந்த இரசாயன மற்றும் காகித ஆலைகள்,
இரசாயனக் கருவிகளை அமைத்து, இரசாயனத் தன்மைகளைக்
குறைப்பதற்கு எந்த ஒரு சுத்திகரிப்பு நடவடிக்கைகளும் செய்
யப்படவில்லை என்பதை அரசின் கவனத்திற்கு கொண்டு
வருவதோடு, இந்த ஆலைகள் வைகை ஆற்றுப் படுகையிலே
அமைந்துள்ளன. ஜனத்தொகை அதிகமாக உள்ள குடியிருப்பு
கள், இந்த ஆலையைச் சுற்றிலும் இருக்கின்றன. இதனால்,
தண்ணீர் கெட்டு, சுற்றுப்புறச் சூழ்நிலைகள் எல்லாம் மாசு
பட்டு, சில கிராமங்களிலே இருக்கிற ஜனங்கள் அந்த இடத்தை

விட்டு குடிபெயரக்கூடிய நிலைமை இருக்கிற காரணத்தால், அந்த ஆலைகளை, மக்களுடைய நலன் கருதி, வேறு இடத்திற்கு மாற்ற அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-10

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆலைகள் அத்தனையையும் அங்கேயிருந்து வேறு இடத்திற்கு மாற்றுவது என்பது இயலாத காரியம், காரணம், ஏற்கனவே அங்கு அமைக்கப்பட்டு எல்லா வசதிகளும் ஏற்படுத்தப்பட்ட காரணத்தால் எல்லா ஆலைகளையும் அங்கேயிருந்து மாற்றுவது என்பது முடியாத காரியம். அப்படி வேறு இடத்திற்கு மாற்றுகிறபோது அங்கேயும் இதே பிரச்சினைகள் வருவதற்கான வாய்ப்புகள் ஏற்படும். ஆனால் அங்கே உள்ள ஆலைகளில் சுத்திகரிப்பு நிலையங்கள் ஒழுங்காக அமைத்து, ஒழுங்குபடுத்துவதற்கான நடவடிக்கைகளை மாசு கட்டுப்பாட்டு வாரியம் முறையாக மேற்கொள்ளும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லிய கருத்துக்களையும் மனதில் வைத்து அதற்கேற்ப தீவிரமான நடவடிக்கையை மாசுக் கட்டுப்பாடு வாரியம் எடுக்கும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. வ. மு. சுப்பிரமணியம் : பேரவைத் தலைவர் அவர்களே, ஒன்று ஆலை இருக்க வேண்டும், இல்லாவிட்டால் அங்கே குடியிருப்புகள் இருக்க வேண்டும். ஏதாவது ஒன்றுதான் அங்கே இருக்க முடியும். இரண்டும் இருப்பது என்பது சாத்தியப்படாது என்பதை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வருகிறேன். அதற்கான ஏற்பாடுகளைச் செய்ய அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, இதை ஆரம்பித்திருக்கிறபோதே யோசித்திருக்க வேண்டும். எனவே ஒரு தொழிற்சாலை என்பது அந்த முதலாளிகளை மட்டும் நாம் மனதில் வைத்துக்கொண்டு, செய்யக்கூடிய காரியம் அல்ல. அதிலே பணியாற்றக்கூடிய ஆயிரக்கணக்கான தொழிலாளிகளை நாம் மனதில் வைத்து அந்தக் காரியத்தை செய்ய வேண்டிய அவசியம் நமக்கு இருக்கிறது. எனவேதான் அதிலேயிருந்து வெளியிலே வருகின்ற கழிவுநீரை முறையாக சுத்திகரிப்பதற்கான நடவடிக்கைகளை அந்த ஆலைகள் எடுத்துவிட்டால், இந்தப் பிரச்சினையே இல்லாமல் போய் விடும் என்று நாங்கள் நம்புகிறோம். எனவே மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொல்லியதற்கிணங்க மாசுக் கட்டுப்பாடு வாரியத்தின் மூலமாக நாங்கள் நேரடியாக தனிக் கவனம் செலுத்தி, அதிலே நடவடிக்கை எடுப்போம் என்பதையும்



அதையும் மீறி அவர்கள் செய்யவிட்டால், அந்த ஆலைகளை மூடுவதற்கான நடவடிக்கையை நாம் மேற்கொள்ளலாம் என்பதையும் இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 145; திரு. டி. சுதர்சனம், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

145—

பேருந்து நிறுத்தங்களில் நடத்துநர்கள்.

*2894 திரு. டி. சுதர்சனம் :

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை நகரில் பல்லவன் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் நெரிசலைத் தவிர்க்க பேருந்து நிறுத்தங்களில் நடத்துனர்களை நியமிக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : பயணிகள் வழியில் காத்திருக்கும் நேரங்களை குறைத்து அவர்கள் துரித பயணத்திற்கு உதவும் வகையில் 19 பெண் பயணச் சீட்டு விற்பனையாளர்கள் அமர்த்தப்பட்டுள்ளனர். இவர்கள் போக்குவரத்து அதிகமாக இருக்கும் 47 பேருந்து நிறுத்தங்களில் பரிட்சார்த்தமாக பணி செய்கின்றனர்.

திரு. டி. சுதர்சனம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகரத்திலே ஒரு கிலோ மீட்டருக்கு இரண்டு பஸ் ஸ்டாப்புகள் இருக்கின்றன. அந்த பஸ் ஸ்டாப்புகளிலிருந்து ஏறுகின்றவர்கள், 'பீக் அவர்ஸ்' என்று சொல்கிறார்களே, அந்த நேரங்களிலே ஏறி, டிக்கெட் வாங்காமலேயே சில பயணிகள் இறங்கிப் போய் விடுகிறார்கள். அதைத் தவிர்க்க வேண்டி ஆங்காங்கே பஸ் கண்டக்டர்களை நியமித்து, அங்கேயே அவர்களுக்கு டிக்கெட் வழங்கி விட்டால் பஸ்ஸில் ஏறியவுடன் டிக்கெட் வாங்குவதில் இந்தப் பிரச்சினை இருக்காது. இதைத் தீர்க்க, பஸ் ஸ்டாப்புகளிலேயே டிக்கெட் வழங்குவதற்கு அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகரில் 47 இடங்களிலே அதிகமான பேருந்துகள் இயக்கப்படுகின்ற இடத்திலே அதே இடத்தில் பயணச் சீட்டுகளை விரைவாக வழங்கி அவர்களுக்கு காலதாமதம் இல்லாமல் பேருந்திலே பயணம் செய்வதற்கு நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறோம். அந்த அடிப்படையிலே 19 இடங்களில் இப்போது அந்த பயணச் சீட்டுகளை வழங்கிக் கொண்டிருக்கிறோம். ஒரு மாத காலத்திற்குள் 47 இடங்களிலும் பயணச் சீட்டுகளை வழங்குவதற்கு நம்முடைய ஒப்பற்ற தலைவியாக இருக்கின்ற தமிழகத்தின் முதல்வர் புரட்சித் தலைவி அவர்களின் ஒப்புதலோடு இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருமதி ஜீனத் சர்புதீன்.

திருமதி ஜீனத் சர்புதீன் : மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை நகரில் ஓடும் பேருந்துகளில் ஜன நெரிசலைக் குறைப்பதற்காக பம்பாயில் ஓடும் மாடி பஸ்களைப் போன்று இங்கே விடுவதற்கு அரசிடம் உத்தேசம் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாடி பஸ்களை விடுகின்ற நோக்கம் இந்த அரசுக்கு இல்லை. காரணம் மாடி பஸ்களில் ஏறி இறங்குவதற்கு காலதாமதம் ஏற்படும் என்பதால், கூடுதலாக பேருந்துகளை விடுவதற்கு உலக வங்கியின் கடன் உதவியோடு மிக விரைவாக 500 புதிய பேருந்துகளை இயக்குவதற்கு அரசு நடவடிக்கை மேற்கொண்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. எஸ். ஜெயக்குமார்.

திரு. எஸ். ஜெயக்குமார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல்லவன் பேருந்துகளில் படிக்கெட்டுகளில் நின்று கொண்டு பயணம் செய்யும் அளவிற்கு நடத்துனர்கள் பயணிகளை ஏற்றுகிறார்கள். அதனால் பல விபத்துக்கள் ஏற்படுகின்றன. அதைத் தவிர்க்க அரசு என்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகரத்தில் பயணிகள் பேருந்துகளின் படிக்கட்டுகளில் நின்று கொண்டு பயணம் செய்கிறார்கள். நடத்துனர்கள் இது போன்ற நிலையினை உருவாக்குகிறார்கள் என்று சொல்கிறார்கள். நடத்துனர்கள், பயணிகளைப் பார்த்து உள்ளே செல்லுங்கள் என்று சொன்னாலும் கூட, அவர்கள் 'புட் போர்டில்' நின்று கொண்டுதான



பயணம் செய்வோம் என்று பிடிவாதமாக சில பேர்கள் சொல்வதால்தான் இது போன்ற விபத்துக்கள் ஏற்படுகின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 10-15

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. எம். கே. பாலன்.

திரு. எம்.கே. பாலன் : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, சென்னை மாநகரில் பேருந்துகள் நிற்கின்ற இடங்
களில் அதிகமான பெண்கள் காத்துக் கொண்டிருக்கிறார்கள்.
நெரிசல் நேரங்களில் அதிகமான ஆண்களும் பெண்களும்
வருகிற காரணத்தாலும் கர்ப்பமாய் இருக்கிற பெண்கள்
அவதிப்படுகின்ற காரணத்தாலும், இடம் கிடைக்காத கார
ணத்தால் ஆண்களும் பெண்களும் முட்டி மோதிக் கொண்டிருக்
கிற காரணத்தாலும், பேருந்து நிலையங்களிலே மகளிர் நடத்து
னர்களை நியமிக்க அரசு பரிசீலிக்குமா என்பதை கேட்டுக் கொள்
கிறேன்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன் : பெண்கள்
பயணம் செய்வதற்கு உதவி செய்வதற்காகத்தான் இப்போது
நெரிசலாக இருக்கும் இடங்களில், பேருந்துகள் நிற்கும் அதே
இடத்தில் ஸ்டேன்டிங் கண்டக்டர்களாக பணியாற்றுவது
கொஞ்சம் கடினமாக இருக்கிறது என்ற அடிப்படையிலேதான்,
முதலிலே 19 பேர்களை நடத்துனர்களாக பணியிலே அமர்த்
தினாலும் கூட, அவர்களால் உள்ளே சென்று பயணச் சீட்டு
களை வழங்கி அங்கே பயணம் செய்பவர்களுக்கு தேவையான
உதவிகளை செய்ய முடியவில்லை. அதிலே கஷ்டங்கள் இருக்
கின்றன என்று குறிப்பிட்ட காரணத்தாலேதான் அவர்கள்
அனைவரும் பயணச் சீட்டுகளை மட்டும் நெரிசலாக இருக்கிற
நேரங்களிலே அதிக பேருந்துகள் நிற்கும் இடத்திலேயே ஸ்டேன்
டிங் கண்டக்டர்களாக அமர்த்தப்பட்டிருக்கிறார்கள் என்பதை
தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 146, திரு. த. ரத்தினவேல், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

146—

சமயபுரம் செல்ல புதிய பேருந்து.

* 5306 திரு. த. ரத்தினவேல் :

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

...லர் தொழிற்சாலையிலிருந்து வேங்கூர் வழியாக சமயபுரம் செல்ல புதிய பேருந்து விடுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா ?

[1992 மார்ச் 10

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தற்போது இயலாது.

திரு. த. ரத்தினவேல் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவெறும்பூர் பாய்லர் தொழிற்சாலையின் பகுதியிலுள்ள மக்களின் நீண்டநாள் கோரிக்கை இது. குக்கிராமங்களுக்கெல்லாம் பஸ் போக்குவரத்தை விரிவுபடுத்தி வரும் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சி தலைவி அவர்களுடைய பொற்கால ஆட்சியில் அந்தப் பகுதியிலுள்ள 15 ஆயிரம் தொழிலாளர்கள் மற்றும் பொது மக்கள் பயன் அடையும் வகையில் சிறப்பு திட்டத்தின் மூலமாகவாவது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அங்கே போக்குவரத்தை புதியதாக உருவாக்கித் தர ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு அங்கீகரிக்கப்படாத பகுதியாக இருக்கிற காரணத்தால் அங்கே டெர்மினஸ்கள் உருவாக்கப்படவில்லை. ஆகவே அந்த பாய்லர் தொழிற்சாலை அருகில் பேருந்துகள் நிறுத்தப்படுகிற சூழ்நிலை இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 147, செல்வி கோ. மல்லிகா, மாண்புமிகு கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர்.

147—

புவனகிரி தொகுதியில் நெசவாளர் சங்கம்

*1380 செல்வி கோ. மல்லிகா :

மாண்புமிகு கைத்தறி மற்றும் நெசவாலைகள் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) புவனகிரி தொகுதி நெசவாளர்கள் கைத்தறித் தொழிலையே நம்பியிருப்பதால் அவர்களின் பொருளாதார நிலை சீரடைய நெசவாளர் சங்கம் அமைத்து விசைத்தறிகள் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : விசைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் ஏற்படுத்த கருத்துரு பெறப்பட்டால், துறை ஆவன செய்யும்.



1992 மார்ச் 10]

செல்வி கோ. மல்லிகா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியாவிலேயே முதன் முதலாக கைத்தறிகளை விசைத் தறிகளாக மாற்றிப் புரட்சிகரமான திட்டத்தை அறிவித்துள்ள நமது இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுக்கு நன்றி தெரிவித்து, புவனகிரி மக்கள் கைத்தறித் தொழிலையே நம்பி வாழ்வதால் அவர்கள் வாழ்வில் ஒளி ஏற்றி வைக்க, வரும் ஆண்டில் திட்டமிடப்பட்டுள்ள 5000 விசைத் தறிகளின் ஒரு பகுதியையாவது புவனகிரியில் நிறுவ அரசு முன் வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏ. டி. ஆபிஸ் மூலமாகவோ அல்லது அந்த சரகத்தினுடைய அதிகாரிகள் மூலமாகவோ கருத்துரு வருமேயானால் அதிலே துறை ஆவன செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 148, டாக்டர் தே. குமாரதாஸ், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர்.

148—

சித்தாறு பட்டணங்கால் வாய்க்கால் செப்பனிடல்.

*149 டாக்டர் தே. குமாரதாஸ் :

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சித்தாறு பட்டணங்கால் கால்வாயிலுள்ள அனைத்து வாய்க்கால்களும் சிமெண்ட் தளம், மதகுகள் இல்லாமல் பழுதடைந்துள்ளது அரசுக்கு தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், இவ்வாண்டிலேயே அவைகளை செப்பனிட அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : சித்தாறு பட்டணங்கால் வாய்க்கால்களில் சிமெண்ட் லைனிங் மற்றும் மதகுகள் சில இடங்களில் பழுதடைந்துள்ளன. தேசிய நீர் மேலாண்மைத் திட்டத்தின் கீழ் தேர்ந்தெடுக்கப்பட்ட இடங்களில் சிமெண்ட் லைனிங் மற்றும் மதகுகள் சீர் செய்யும் பணிகள் நடைபெற்று வருகின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர் தே. குமாரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சித்தாறு பட்டணங்கால்வாயில், அனைத்துக் கால் வாய்களும் ஒட்டு மொத்தமாக, குறிப்பிட்டு இந்த இடம் தான்

நன்றாக இருக்கின்றது என்று சொல்ல முடியாத அளவுக்கு அனைத்தும் பழுதடைந்திருக்கின்றன. அதிலே வரக்கூடிய தண்ணீர் அத்தனையும் வேஸ்ட்டாக போய்க் கொண்டிருக்கிறது. எனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்த சிமெண்ட் தளங்களை எல்லாம் அமைத்துத் தருவார்கள் என்று சொன்னால் அது விவசாயத்திற்கு மிக மிக பயன் உடையதாக இருக்கும். எனவே இந்த ஆண்டில் அதற்கான வேலைகள் ஆரம்பிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பட்டணங்கால்வாயில் பழுது பார்க்கப்பட வேண்டிய மதகுகளின் எண்ணிக்கை 113. இந்த ஆண்டு பழுது பார்க்கப்படுகின்ற மதகுகளின் எண்ணிக்கை 26. மீதம் உள்ள 87 மதகுகள் இந்த நடப்பு நிதி ஆண்டில் செய்வதற்கான வகையில் வேலைகளை எடுத்துக் கொண்டிருக்கிறோம். ஆகவே அந்தப் பணிகள் அடுத்த நிதி ஆண்டில் முடிக்கப்படும் என்பதையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 10-20

டாக்டர் தே. குமாரதாஸ் : பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் அளித்த விளக்கத்திற்கு நன்றி. அந்த சித்தாறு பட்டணங்கால் பகுதியில், சில பகுதிகளில் 60 அடி 70 அடி ஆழத்திற்கு கீழ்ப் பகுதியில் இந்த சானல் செல்கிறது. மேல் பரப்பில் நூற்றுக்கணக்கான ஆயிரக்கணக்கான ஏக்கர் விவசாயத்திற்கு தயாரான நிலையில் இருக்கிறது. முன்பு நம்முடைய தமிழகத்தை பொறுத்தவரைக்கும் சிறு விவசாயிகள் கூட்டுறவுச் சங்கம் ஒன்றை அமைத்து அதன் மூலம் அரசாங்கத்திலிருந்து லிஃப்ட் இரிகேஷனை ஃபிக்ஸ் பண்ணிக் கொடுத்தால் அதற்குரிய பராமரிப்புச் செலவு, அதற்குரிய மின்சாரக் கட்டணங்கள் போன்றவற்றை அந்த சிறு விவசாயிகள் சங்கத்தின் சார்பில் கட்டி வந்தார்கள். இப்படி அதிகமான விவசாயத்திற்கு வாய்ப்புள்ள பகுதிகளில் இந்த லிஃப்ட் இரிகேஷனை சிறு விவசாயிகள் கூட்டுறவுச் சங்கத்தின் மூலமாக நீங்கள் அமைத்துக் கொடுப்பீர்கள் என்று சொன்னால் நூற்றுக்கணக்கான ஏக்கர் விவசாயத்திற்குப் பயன்படும். எனவே அந்த சிறு விவசாயிகள் சங்கத்தின் மூலமாக உங்களிடம் வருகின்றபோது அதை ஃபிக்ஸ் பண்ணி அதனுடைய பராமரிப்புச் செலவை விவசாயிகள் ஏற்றுக்கொள்கின்ற நேரத்தில், அரசு அதை அமல்படுத்த முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே கேட்கப்பட்ட கேள்வி, பட்டணங்கால் கால்வாயை சீர்படுத்துகின்ற கேள்வி. லிஃப்ட் இரிகேஷன் சம்பந்தமான வினாவினைத் தனியாக கொடுத்தால் அதற்கான விவரங்கள் இந்த அவையிலே அளிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கு. லாரன்ஸ்.

திரு. கு. லாரன்ஸ் : அவைத் தலைவர் அவர்களே, சித்தாறு பட்டணங்கால் சானலில் சிமெண்ட் தளம் அமைப்பது சம்பந்த மாக திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின் போது அதிகாரி களும், காண்ட்ராக்டர்களுமாக இணைந்து ஒரு மிகப் பெரிய மோசடி—ஊழல் புரிந்தார்கள், அது இந்த அரசினுடைய கவனத்திற்கு வந்ததா ? அந்த மோசடியின் மூலமாக சிமெண்ட் தளம் அமைப்பது சம்பந்தமான பணிகளில் தடங்கல் ஏற்பட்டது என்பது இந்த அரசுக்குத் தெரியுமா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அரசைப் பொறுத்தமட்டிலே, இன் றைக்குப் பணிகளை எடுத்துக்கொள்கின்ற நேரத்திலே மிகவும் எச்சரிக்கையாக மதிப்பீடு தயாரிக்கப்பட்டு முறையாக டெண்டர்கள் கோரப்பட்டு அந்த வேலைகளைத் தரமான முறையிலே செய்ய வேண்டும் என்று அதிகாரிகளுக்கு உத்திரவிடப் பட்டிருக்கிறது, ஏற்கனவே நடந்த பிரச்சினைகளைப் பற்றி இந்த அரசினுடைய கவனத்திற்கு இதுவரை யாரும் கொண்டு வரவில்லை, ஆனால் பொதுவாக இந்த பட்டணங்கால் கால்வாய் சீரமைக்கப்படுகின்ற பணியை நானே நேரடியாகப் பார்ப்பதாக இருக்கிறேன். அந்த மாதிரி புகார்கள் வரு மானால் மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவிக்கின்ற நேரத்திலே யார் தவறு செய்திருந்தாலும் கடுமையான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்:

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. மா. சுந்தரதாஸ்,

திரு. மா. சுந்தரதாஸ் : பேரவைத் தலைவர் அவர்களே, அந்த சித்தாறு பட்டணங்காலை பொறுத்தவரையில் இருக்கின்றன, டேம் இரண்டும் என்னுடைய தொகுதியில் அந்த டேமிற் அந்த டேம் சைடிலே சென்றுப் பார்த்தால். சாலையை குள்ளேயே பக்கத்து நிலக்காரர்கள் பெண்டுகட்டி செய் எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். டேமை என்க்ரோச் கொண்டிருக் திருக்கிறார்கள், பல்வேறு கட்டிடம் கட்டிக் சொன்னால் கூட கிறார்கள், இதைப் பற்றி பல்வேறிடத்தில் எதையும் செய்யத் அந்த என்ஜ்னியரிடம் புகார் செய்தால் அவர் தெரியுமா ? ஆகவே தயாராக இல்லை, இது அரசுக்குத் நடவடிக்கை எடுக்க தயவு செய்து அத்தகைய அதிகாரிகள் மீது செய்தால் டேமே வேண்டும், அந்த முறையிலே என்க்ரோச் இடங்கள். இருக்காது, அந்த அளவிற்கு விலை கூடின நேரடியாக வந்து அந்தப் பகுதிகளை அமைச்சர் அவர்கள் அகற்றுவதற்கு ஏற் பார்த்து. அத்தகைய என்க்ரோச்சகளை விரும்புகிறேன், பாடு செய்வார்களா என்று அறிய

[1992 மார்ச் 10

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக அந்த எங்க்ரோச்மென்ட் என்று சொல்லப்படுகின்ற ஆக்கிரமிப்புகள் பல்வேறு பகுதிகளில் இருக்கின்றன. அது என்னுடைய கவனத்திற்கு வருகின்ற நேரத்திலே அந்த ஆக்கிரமிப்புகள் எல்லாம் அகற்றப்பட வேண்டும். அது பாசனப் பகுதியாக இருந்தாலும் சரி, அணைக் கட்டினுடைய நீர்த் தேக்கப் பகுதியாக இருந்தாலும் சரி, இவைகளை எல்லாம் உடனடியாக நீக்க வேண்டும் என்ற அந்த உணர்வினை இந்த அரசு பெற்றிருக்கிறது. நாம் அப்படி சில நேரத்திலே, நடவடிக்கை எடுக்கின்ற நேரத்திலே நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் போன்றவர்கள் எல்லாம் கொஞ்சம் குறுக்கீடுகளும் செய்கிறார்கள், அந்த ஆக்கிரமிப்புகளை அகற்றி விடாதீர்கள் என்று, ஆக்கிரமிப்புகளை அகற்றுகின்ற நேரத்திலே நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்களும் ஒத்துழைக்க வேண்டும், ஆகவே ஆக்கிரமிப்பை பொறுத்த வரையிலே இந்த அரசு ஒரு போதும் அனுமதிக்காது என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக் கொள்ள கடமைப் பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 149 திரு. ஆர். பி. பரமசிவம். மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர்.

149—

பெரியேரி அருகில் வெள்ளாற்றின் குறுக்கே அணை.

* 753. திரு. ஆர். பி. பரமசிவம் :

மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

சின்னசேலம் தொகுதியிலுள்ள 30 கிராம நீர்ப்பாசன ஏரிகளுக்கு பயனளிக்கும் வகையில் சேலம் மாவட்டம் பெரியேரி அருகில் வெள்ளாற்றின் குறுக்கே அணை கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

அரசிடம் இல்லை,

திரு. ஆர். பி. பரமசிவம் : பேரவைத் தலைவர் அவர்களே, பாலைவனத்தில் சோலைவனமாக காட்சியளிக்கும் இந்த நிதி நிலையிலேயே 'இருபுனலும் வாய்ந்த மலையும் வருபுனலும் வல்லரணும் நாட்டிற்கு உறுப்பு' என்ற வள்ளுவனின் வாய்ப்பாட்டின்படி மலையிலிருந்து ஆறாக வரும் நீர் வளமும் ஒரு நல்ல நாட்டிற்கு உறுப்புகள் என்ற அடிப்படையில் வறண்டு கிடக்கும் எனது சின்னசேலம்



1992 மார்ச் 10]

தொகுதியில் 30 கிராம நீர்ப்பாசன ஏரிகளுக்கு பயனளிக்கும் வகையில் அமைய இருக்கும் வெள்ளாற்றின் குறுக்கே கட்ட இருக்கும் இந்த அணைக்கட்டு பலன் அளிக்கும் என்ற எண்ணத்தோடு நீண்ட கால கோரிக்கையான சின்னசேலம் தொகுதி விவசாய மக்களின் கனவாக இருக்கும் இந்தத் திட்டத்தை செயற் படுத்த இதய தெய்வம் ஆட்சியில் வழி வகை காண இந்த அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்,

முற்பகல் 10-25.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டம். ஆத்தூர் தாலுக்கா பெரியேரி கிராமத்தின் அருகில் வெள்ளாற்றின் குறுக்கே உள்ள பாழடைந்த பாக்கம்பாடி அணைக் கட்டைத் திரும்ப கட்டுவதற்கான ஒரு திட்டம் இன்றைக்கு அரசுக்கு வரவில்லை என்றாலும் கூட நம்முடைய தலைமைப் பொறியாளர் (பிளானிங் அண்டு டிசைன்) என்று சொல்லப்படுகின்ற திட்டங்கள் மற்றும் வடிவமைப்பு அவர்களால் இன்றைக்கு ஆய்வு மேற்கொள்ளப் பட்டிருக்கிறது, இந்தத் திட்டத்தின் கீழ் அணைக்கட்டி கீழ்ப் புறம் உள்ள 25 தொடர் கண்மாய்களுக்கு கால்வாய் மூலம் தண்ணீர் வசதி செய்து கொடுக்க முடியும், இதனுடைய பாசனப் பரப்பு ஏறத்தாழ 2 ஆயிரம் ஏக்கருக்கு மேல் இருகிறது, இன்றைக்கு இதற்கு ஆகின்ற செலவும் ஏறத்தாழ 3 கோடியே 87 இலட்சம் ரூபாய் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. இதனுடைய பெனிபிட் காஸ்ட் ரேஷியோ என்று சொல்லப்படுகின்ற விகிதாச்சாரமும் இன்றைக்கு கணக்கிடப் பட்டிருக்கிறது. ஆகவே, இந்தத் திட்டத்தை அரசு பரிசீலனையில் வைத்திருக்கிறது. இது சம்பந்தமான முடிவுகளை அரசுப் பரிசீலனைக்குப் பிறகு நிதி ஆதாரத்தினைப் பொறுத்து நடவடிக்கை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாணபுமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 150. திரு. கு. லாரன்ஸ், மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

150—

கன்னியாகுமரி மாவட்டத்தில் கடல் அரிப்பைத் தடுக்க நடவடிக்கை.

*1961 திரு. கு. லாரன்ஸ் :

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கன்னியாகுமரி மாவட்ட கடற்கரைகளில் அடிக்கடி கடல் அரிப்பு ஏற்பட்டு கடற்கரை மீனவர் கிராமங்களுக்கு சேதங்கள் ஏற்படுகிறதா ?

(ஆ) ஆம் எனில், கடல் அரிப்பை நிரந்தரமாகத் தடுக்க அரசிடம் திட்டம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) குமரி மாவட்டத்தில் கடலரிப்பினால் பாதிக்கப்படும் இடங்களுள் 23 இடங்களில் கற்குவியற் கடற் சுவர்கள் கட்டப்பட்டு அவை வருடந்தோறும் பராமரிக்கப்பட்டும் வருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கு. லாரன்ஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குமரி மாவட்டத்தின் கடற்கரைப் பகுதிகளான முட்டம், கோடிமுனை, குறும்பனை, இணையம், முள்ளூர்துறை போன்ற இடங்கள் இந்தத் திட்டத்தில் அடங்குகிறதா என்பதோடு, இந்தப் பகுதிகளைப் பொறுத்த வரையில் மீனவர்கள், நிலமற்ற ஏழைகள், கடல் அரிப்பால் பாதிக்கப்படுகின்ற கால கட்டத்தில் அவர்கள் வீடு அற்றுப் போகிற ஒரு சூழ்நிலை மட்டும் அல்ல, கடல் பகுதியில் தன்னுடைய தொழில்களைச் செய்வதற்குத் தோணி, வலை போன்ற உடைமைகளை வைத்து இருப்பதால் கடல் அரிப்பின் மூலமாக அவர்களுடைய உடைமைகளும் பாதிக்கப்படுகின்றன. எனவே, அவர்கள் தங்களுடைய உயிர், உடைமை இவைகளை விட்டுவிட்டு இதனால் பாதிக்கப்படுகிற விதமாக இருக்கிறது. அதை மாற்றி, அவர்கள் தங்களுடைய தொழிலைச் செய்வதற்கு, இணையம் போன்ற பகுதிகளில் மீன் தூண்டில் வளைவுகள் போன்றவற்றை ஏற்படுத்துவதற்கு இந்த அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் கடல் அரிப்பைத் தடுக்க கற்குவியற் கடற் சுவர்கள் தேவைக்கு ஏற்ப பாதிக்கப்பட்டுள்ள இடங்களில் கட்டப்பட்டு வருகின்றன. எனினும் வேலை நடைபெறும் நேரத்தில் உள்ளூர் மீனவர்கள் எதிர்ப்புத் தெரிவிக்கின்ற காரணத்தால், தடுப்புச் சுவர் கட்டுவதால், தன்னுடைய மீன் பிடித் தொழில் பாதிக்கப்படுகிறது என்ற காரணத்தைச் சொல்லுகின்ற காரணத்தால் சில வேலைகள் தடைப்பட்டு போய் இருக்கின்றன. இருந்தாலும் அந்தப் பணிகளை அரசு தொய்வின்றி செய்து வருகிறது. நம்முடைய கன்னியாகுமரி மாவட்டத்தில் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப் போல இணையம், புத்தந்துறை, முட்டம், கன்னியாகுமரி காந்தி மண்டபத்திற்கும், நீச்சல் குளத்திற்கும் இடையில் பள்ளி வாய்க்கால், இணையம், முண்டந்துறை, பள்ளம்துறை, ராமன்துறை, நீரோடிதுறை, சின்னவனைத்துறை, கன்னியாகுமரி நீச்சல் குளத்திற்கு மேற்கே மேல்படாளம், புத்தன்துறை, கோடிக்கரை, கீழ்மணக்குடி, தேங்காய்ப்பட்டிணம், கீழ்விடாளம், மார்த்தாண்டம்துறை, குறும்பனை, ரய்மான்துறை, வி. புரம், 'ரட்சகர்தெரு ஆகியவற்றில் பகுதி-2 திட்டத்தின்கீழ்



இன்றைக்குப் பணிகள் செய்து முடிக்கப்பட்டு இருக்கின்றன.
இன்னும் பல்வேறு பணிகள் இன்றைக்கு கடல் அரிப்பு தடுப்புத்
திட்டத்தின் கீழ் எடுத்துக்கொள்ளப்பட இருக்கின்றன. அதன்
பட்டியலைப் படித்தால் கொஞ்சம் காலதாமதம் ஆகும்.
ஆகவே, பல்வேறு பணிகள் கன்னியாகுமரி மாவட்டத்தில் எடுக்
கப்பட இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.
மீன்பிடி வலை சம்பந்தமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்
இங்கே கேட்டார்கள். இது சம்பந்தமாக மாண்புமிகு உறுப்
பினர் திரு. குமாரதாஸ் அவர்கள் ஏற்கனவே சட்டமன்றத்தில்
கேட்டிருக்கிறார்கள். அதற்கான விரிவான விளக்கத்தை ஏற்
கனவே தந்திருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 151,
திரு. ச. காந்திராஜன், மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர்.

151—

அழகாபுரி அணைக்கட்டிலிருந்து குடிநீர் வழங்கும் திட்டம்.

*2787—திரு. ச. காந்திராஜன் : வினாக்
மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட
களுக்கு விடையளிப்பாரா :

(அ) வேடசந்தூர் தொகுதி, அழகாபுரி அணைக்கட்டில்
இருந்து காசிபாளையம், கல்வார்பட்டி மற்றும் அதனைச் சார்ந்த
கிராமங்களுக்கு கிராமப்புற குடிநீர் வழங்கும் திட்டம் அரசின்
பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், இத்திட்டம் வேடசந்தூரின் மற்ற பகுதி
களுக்கும் விஸ்தரிக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேர
வைத் தலைவர் அவர்களே,

(அ) பரிசீலனையில் இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

திரு. ச. காந்திராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, ஏற்கெனவே இந்த அழகாபுரி அணைக்கட்டிலிருந்து
வேடசந்தூர் தொகுதியில் உள்ளடங்கிய வேடசந்தூர் ஒன்றியம்
மற்றும் குஜிலியம்பாறை ஒன்றியங்களுக்குக் குடிநீர் வழங்குவதற்
கான திட்டங்கள் குடிநீர் வடிகால் வாரியத்தால் அனுப்பப்பட்டு
இருப்பதாக அதிகாரிகள் சொல்லியிருக்கிறார்கள். மிகுந்த மோச
மான சூழ்நிலையில் குடிநீர்ப் பிரச்சினை உள்ள இப்பகுதிக்கு
விரைவில், அடுத்த ஆண்டிலாவது, கருணை உள்ளத்தோடு
மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்து, மாண்புமிகு

புரட்சித் தலைவியினுடைய ஆட்சியிலாவது எங்களுடைய குடிநீர் பஞ்சத்தை நீக்குவார்களா? அதற்கான நடவடிக்கையை அரசு எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10–30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவையின் முன் அனுமதியோடு வினாக்கள்—விடைகள் நேரம் சிறிது நீட்டிக்கப்படுகிறது.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு பரிசீலனை செய்து முடிவு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 152, திரு. பி. வி. இராஜேந்திரன். மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

152—

கிராமக் கூட்டுறவு வங்கி.

*5150 திரு. பி. வி. இராஜேந்திரன்: மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

கிராமக் கூட்டுறவு வங்கிகளை ஏற்படுத்தும்போது 2,000 மக்களுக்கு ஒரு கூட்டுறவு வங்கி என்று செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2,000 மக்கட் தொகையை மட்டுமே அடிப்படையாக வைத்துக் கொண்டு ஒரு கிராமக் கூட்டுறவு வங்கியை அமைக்க இயலாது. அந்த ஒரு அடிப்படையை மட்டும் வைத்துக்கொண்டு பார்த்தால் சங்கம் தன்னிறைவுடன் செயல்படும் சாத்தியமில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

திரு. பி. வி. இராஜேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொடக்கக் கூட்டுறவு வங்கிகள் அனைத்தும் லாபகரமாக இயங்கிக்கொண்டு இருக்கின்ற ஒன்று. நான் இந்தக் கேள்வியிலே 2,000 என்று குறிப்பிட்டிருந்தாலும் 30 ஆயிரம் மக்கள் தொகைக்கு ஒரு வங்கி என்ற வீதத்தில்கூட என்னுடைய தொகுதியிலே கூட்டுறவு வங்கிகள் இயங்கிக் கொண்டு இருக்கின்றன. அதில், 30,000 என்கின்ற அடிப்படையை உடனடியாகக் குறைத்து, குறைப்பது என்று சொன்னால், துரதிஷ்டவசமாக கூட்டுறவுச் சங்கங்களுக்குள்ளே கட்சி அரசியல் நுழைந்து இருப்பதால் அவர்கள் ஜெனரல் பாடியிலே ரெசல்யூஷன் போட்டு [illegible] மறுக்கின்றார்கள். அதனால் பிரிக்கப்படாமலேயே,



கிராமங்களுக்கு இப்படிப்பட்ட நிலைமைகள் இருந்து கொண்டு இருக்கின்றன. உடனடியாகப் பிரிப்பதற்கு இந்த 2,000 என்பதை விதிவிலக்காக விட்டுவிட்டுக்கூட 5 ஆயிரம்என்ற அடிப்படையிலாவது தொடக்க வங்கிகளை பிரிப்பதற்கு ஆவன செய்வார்களா என்பதை உங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது தமிழ்நாட்டில் 4,655 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. இவைகள் மக்கள் தொகையை மட்டுமே அடிப்படையாக இல்லாமல், இலாபகரமாக இயங்க வேண்டும்; குறைந்த பட்சம் நஷ்டம் இல்லாமலாவது தன்னிறைவுடன் இயங்கவேண்டும் என்ற கருத்தில் இவைகள் நடத்தப்பட்டு வருகின்றன. ஒரு காலத்தில் 2 இலட்சம் ரூபாய்க்கு அவர்கள் லேவாதேவி செய்தால் போதும் என்று இருந்தது. அது, பிறகு ''நபார்டு'' வங்கியாலே மாற்றப்பட்டு 10 இலட்சம் ரூபாய்க்காவது கடன் கொடுத்து, வாங்க வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டது. ஆனாலும் இப்போது பல வங்கிகள் டெபாசிட் இல்லாத காரணத்தினாலும் அவர்கள் செய்கின்ற நான்-கிரிடிட் பிசினஸ், கடன் சாராத வாணிபம் இந்த வங்கியில் அவர்கள் செய்கின்ற பிசினஸில் அவர்களுக்கு லாபம் இல்லாத காரணத்தினாலும், டெபாசிட் இல்லாத காரணத்தினாலும் இன்றைக்கு வங்கிகள் லாபகரமாக இயங்கவில்லை. ஆகவே, இப்போதுள்ள சூழ்நிலையில் குறைந்த பட்சம் 1 இலட்சம் ரூபாய் செலவழிக்கின்ற ஒரு கிராமக் கூட்டுறவு வங்கியில் 40 இலட்சம் ரூபாய்க்கு கடன் லேவாதேவி செய்ய வேண்டும் என்கின்ற நிலைமை இருக்கிறது. அதை கருத்திலே கொண்டு புதிய வங்கிகள் தொடங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. பி. வி. இராஜேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கிராமக் கூட்டுறவு வங்கிகள் மிகவும் அர்த்தமுள்ளவை. தமிழகத்தைவிட கேரள மாநிலத்திலே கிராமக் கூட்டுறவு வங்கிகள் கிரிடிட் கார்டைக்கூட கொடுக்கின்றன. குறிப்பாகச் சொல்லப் போனால் வடமாநிலத்திலே மெடிக்கல் சீட் பெற்ற ஒரு மாணவனுக்குக்கூட கேரள மாநிலத்திலே இருக்கின்ற ஒரு கிராமக் கூட்டுறவு வங்கியினுடைய உறுப்பினர் ஒருவருடைய மகனுக்கு உடனடியாக, அட்வான்ஸாக 75 ஆயிரம் ரூபாய் வழங்கியிருப்பதாகக்கூட நான் அறிகிறேன். அந்த அளவிற்கு இன்றைய பொருளாதாரச் சூழ்நிலைகள், மாறுபட்ட சூழ்நிலைகளையெல்லாம் இன்றைக்கு நாம் கணக்கில் கொண்டு பல்வேறு நடவடிக்கைகளை எடுக்கவேண்டியிருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் லயோலா கல்லூரியிலே பொருளாதாரம் பயின்றவர்கள். (மணியடிக்கப் பெற்றது).

[1992 மார்ச் 10

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. இராஜேந்திரன், துணைக் கேள்வி போட வேண்டும். நீங்கள் இப்போது உரை நிகழ்த்துகிற நேரம் அல்ல. ஏற்கெனவே வினாக்கள்-விடைகள் நேரத்தை நீட்டித்துக் கொடுத்துக் கொண்டு இருக்கிறேன்.

திரு. பி. வி. இராஜேந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது முக்கியமானது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : முக்கியமானதாக இருந் தாலும நீங்கள் கேள்வியாகத்தான் கேட்கவேண்டும். முக்கிய மான கேள்வியை மட்டும் கேளுங்கள். மாண்புமிகு அமைச்சர் லயோலா கல்லூரியில் படித்ததையெல்லாம் கேள்வி நேரத்திலே பேசிக்கொண்டிருந்தால் முடியுமா ?

திரு. பி. வி. இராஜேந்திரன் : ஒரு புதிய பார்வையில் இவற்றையெல்லாம் அவர்கள், சீர்திருத்தி, சீர் திருத்தங்களைக் கொண்டு வருவதற்கு தகுதி படைத்தவர்கள் என்ற நம்பிக்கை இருக்கிறது. அதனால், அதனைச் செய்வார்களா என்பதை உங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன். குறிப்பாக, என்னுடைய தொகுதி யில், ஆயக்காரம்பலம் தொடக்க கூட்டுறவு வங்கி, 30 ஆயிரம் மக்கள்தொகைக்கு, 5 கிராமங்களுக்கு ஒரு வங்கியாக இருக் கிறது. அதனையும் உடனடியாகப் பிரிப்பதற்கு ஆவன செய் வார்களா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வங்கிகளில் எல்லாமே நஷ்டத்திலே இயங்க வில்லை. சில வங்கிகள் நல்லமுறையிலே செயல்பட்டு வருகின்றன. 30 இலட்சம், 40 இலட்சம் ரூபாய்கூட அங்கே டெபாசிட்டுகள் சேர்க்கப்பட்டு நல்லமுறையிலே நடத்தப்படுகின்றன. கேரளா வைப்பற்றிக் குறிப்பிட்டார்கள். நான் அதைப்பற்றி இன்னும் அறிந்திருக்கவில்லை. அவைகளை நான் தெரிந்து , அவைகளிலே நம்மைவிட சிறந்த கருத்துக்கள் இருக்குமானால், அவைகளை யும் மேற்கொள்வதற்கு இந்த அரசு தயாராக இருக்கிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். அவர் தன்னுடைய தொகுதியைப் பற்றிய ஒரு கேள்வியைக் கேட்டிருக்கிறார்கள். அதை அரசு பரிவோடு பரிசீலனை செய்யும் என்பதைத் தெரி வித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 10-35

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. நா. சா. பழனிசாமி.

திரு. நா. சா. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சில தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள், அவைகள் செயல்பாட்டிலே தவறுகள் இழைத்த காரணத்தினால் அவை சில நேரங்களில் கலைக்கப்பட்டிருக்கின்றன. அப்படி



1992 மார்ச் 10]

கலைக்கப்பட்ட கூட்டுறவு வங்கிகள் அருகிலே இருக்கின்ற இன் னொரு வங்கியோடு சிலயிடங்களிலே இணைக்கப்பட்டிருக்கின் றன. ஆனால், கலைக்கப்பட்டும், அருகிலே இருக்கின்ற கூட்டுறவு வங்கியோடு இணைக்கப்படாமல் சில கிராமங்களில் கூட்டுறவு வங்கியே இல்லாமல் இருக்கிறது. அப்படிப்பட்ட இடத்திலே புதிதாகக் கூட்டுறவு வங்கி தொடங்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படி பொதுமக்கள் சிரமத்திற்கு ஆளாகின்ற சூழ்நிலை இருக்கின்ற இடங்களில், உடனடியாக வங்கிகள் தொடங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்படும் என் பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 153 திரு. சி. இராமசுவாமி, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

## 153—சங்கராபுரத்தில் வேளாண்மைக் கல்லூரி.

*4317 திரு. சி. இராமசுவாமி : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட விடையளிப்பாரா :

(அ) சங்கராபுரத்தில் ஒரு வேளாண்மைக் கல்லூரி அமைக் கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விபரம் என்ன ?

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : சங்கராபுரம் பகுதியில் வேளாண்மைக் கல்லூரி அமைக்கும் குறிப்பு அரசின் ஆய்வில் இல்லை.

திரு. சி. இராமசுவாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சங்கராபுரம் தொகுதி விவசாயப் பெருமக்கள் அதிகம் உள்ள தொகுதி. கல்வராயன் மலைப் பகுதியும் சங்கரா புரம் தொகுதியில் உள்ளது. மலைவாழ் மக்கள் அதிகமாக வசிக்கின்ற தொகுதி. மலைவாழ் மக்கள் நலனை முன்னிட்டு அரசு மீண்டும் வேளாண்மைக் கல்லூரி அமைக்க மறுபரிசீலனை செய்யுமா என்றும், இல்லையென்றால் விவசாயப் பெருமக்கள் புதிய புதிய உத்திகளைக் கையாள Agricultural Training Centre வேளாண்மைப் பயிற்சி மையத்தை உருவாக்க முன்வருமா என்றும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெஞ்சுக்கு நீதியும், தோளுக்கு வாளும் நிறைந்த சுடர் மாமணியாம் எங்கள் டாக்டர் புரட்சித் தலைவி ஆட்சிக் காலத்தில் புதிய பயிற்சிப் பள்ளி ...கே உருவாவதற்கு அரசு பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 154 திருமதி க. பழனியம்மாள், மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்.

**154—**

இராசிபுரம் நகரில் அரசுப் பணியாளர்களுக்கு குடியிருப்பு,

*4219 திருமதி க, பழனியம்மாள் :

மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) இராசிபுரம் நகரில் அரசுப் பணியாளர்களுக்கு அரசுக் குடியிருப்பு அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

மாண்புமிகு திரு. டி, எம், செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

(அ) மற்றும் (ஆ) : தற்போது இல்லை,

திருமதி க, பழனியம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. இராசிபுரமானது மிகவும் பின்தங்கிய. வசதி ஏதும் இல்லாமல் ஒரு சிறிய நகரமாக விளங்கிக் கொண்டிருக்கிறது, அங்கே அரசுப் பணியாளர்கள் வாடகைக்கு வீடு கிடைக்காமல் கஷ்டப்படுகின்ற சூழ்நிலை இருக்கின்ற காரணத்தால் அங்கு ஒரு குடியிருப்பு கட்டித் தர, வருகிற ஆண்டிலேயே அரசு முயற்சி எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. எம், செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு ஆணைப்படி. அரசு அலுவலர்களுக்குக் குடியிருப்பு கட்டித் தர வேண்டுமென்று சொன்னால், அது மாவட்டத் தலைமையிடமாகவோ அல்லது வருவாய்க் கோட்டத் தலைமையிடமாகவோ இருக்கவேண்டும், அந்த அடிப்படையிலே. மாவட்ட ஆட்சியாளருடைய பரிந்துரை இருக்குமாயின். அங்கு அரசுக்குப் போதிய நிலம் இருக்குமாயின், குடியிருப்புகளுக்குத் தேவையான அரசு அலுவலர்களிடமிருந்து டிமாண்ட் கிடைக்கப்படுமாயின் அரசு ஆவன செய்யும் என்று அறிவிக்கின்றேன்.



மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 155. டாக்டர் அ, ஸ்ரீதரன். திரு, எம். ஆண்டி அம்பலம். மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர்,

**155—**

கலப்புத் திருமணத் தம்பதிகளின் குழந்தைகளுக்கு பணியமர்த்துவதில் முன்னுரிமை,

*1037 டாக்டர் அ. ஸ்ரீதரன் ;
திரு. எம். ஆண்டி அம்பலம் :

மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கலப்புத் திருமண தம்பதிகளுக்கு பிறக்கும் குழந்தைகளுக்கு பணியமர்த்துவதில் ஒரு சிறிய சதவீதம் ஒதுக்கி முன்னுரிமை வழங்கப்படுமா ?

(ஆ) ஆம் எனில். ஐ,ஏ,எஸ், ஐ,பி,எஸ், மருத்துவ பட்டமேற்படிப்பு பொறியியல் ஆகியவற்றிலும் அவர்களுக்கு தனியாக இடங்கள் ஒதுக்கீடு செய்ய அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

(அ) மற்றும் (ஆ) : அரசு ஒதுக்கீடு அடிப்படையில் முன்னுரிமை வழங்கப்படுகிறது.

டாக்டர் அ. ஸ்ரீதரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திராவிடப் பாரம்பரியத்தைக் காப்பாற்றி. சமத்துவமும். சமுதாய மறு மலர்ச்சியும் சீர் தூக்கி நல்லாட்சி செய்கின்ற நமது தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி ஆட்சியில் கலப்புத் திருமண தம்பதிகளுக்கும் அவர்களுக்குப் பிறக்கும் குழந்தைகளுக்கும் ஒரு குறிப்பிட்ட சதவிகிதத்தை யாவது வேலைவாய்ப்பிலும், பட்ட மேற்படிப்பிலும் நிரந்தரமாக ஒவ்வொரு தேர்விலும் அமைத்துத் தர வேண்டுமென்று. ஒரு குறிப்பிட்ட பர்சென்டேஜை அமைத்துத் தர வேண்டுமென்று கட்டாயமாக ஒரு ஆணை பிறப்பிக்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கலப்புத் திருமணம் செய்து கொண்ட தம்பதிகளுக்குப் பிறக்கும் குழந்தைகளுக்கு தாயின் ஜாதியையோ அல்லது தந்தையின் ஜாதியையோ சார்ந்தவர்களாகக் கருதப்பட ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. இதனால்

[1992 மார்ச் 10

தாயோ அல்லது தந்தையோ தாழ்த்தப்பட்ட பிரிவைச் சார்ந்திருந்தால் அவர்களின் குழந்தைகளுக்கும், தாழ்த்தப்பட்டவர்களுக்கும், மலைஜாதியினரைச் சார்ந்திருந்தால் மலைஜாதியினருக்குக் கிடைக்கின்ற அனைத்துச் சலுகைகளும், முன்னுரிமைகளும் பணி அமர்த்துவதிலே கொடுக்கப்படும். அதைப்போல, கலப்புத் திருமணம் செய்துகொண்ட தம்பதிகளுக்கு பிறக்கும் குழந்தைகளுக்கு, எம்.பி.பி.எஸ். படிப்பிற்கு 12 இடங்களும், சித்த மருத்துவப் படிப்பிற்கு 2 இடங்களும், ஹோமியோபதி மருத்துவப் படிப்பிற்கு 1 இடமும், யுனானி மருத்துவப் படிப்பிற்கு 1 இடமும், பி.ஈ. பட்டப் படிப்பிற்கு 5 இடங்களும் அரசால் கொடுக்கப்பட்டுள்ளன.

முற்பகல் 10-40

திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களைப் போன்றவர்கள் இந்த மைக்கில் பேசுகிறபோது, மென்னியே கட்டிக் கொள்கிறது ; சடார் என்று வரவில்லை. (சிரிப்பு) ஆம் வரவில்லை ; பேசமுடியவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இன்று மாலையே உங்களை மருத்துவரை விட்டு, பரிசோதிக்கச் செய்யலாம். (சிரிப்பு).

திரு. எம். ஆண்டி அம்பலம் : கலப்புத் திருமணம் என்பது பெரிய விஷயம். அவர்களுக்கு மிகவும் முன்னுரிமை தர வேண்டும். அதிலும் குறிப்பாக, அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். 1 இடம், 2 இடம், 12 இடங்கள் என்று. அது போதுமானதாக இல்லை. ஏனென்றால், ஆண் பெண் இரண்டுதான் ஜாதி என்று சொல்லக்கூடிய அளவிலே கலப்புத் திருமணம் செய்கிறவர்களுக்கு ஒரு நல்ல முன்னுரிமையை இந்த அரசாங்கம் தர வேண்டும். அதற்கு அமைச்சர் அவர்கள் ஒரு நல்ல முடிவை எடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு வேலைவாய்ப்பு அலுவலகங்களைக் கேட்டு, கலப்புத் திருமணம் செய்து கொண்ட தம்பதிகள் பதிவு செய்திருந்தால், அங்கிருந்து அரசு வேலைகளுக்கு பட்டியல் அனுப்பப்படுகிறபோது, அவர்களுக்குத்தான் முன்னுரிமை அளிக்க வேண்டுமென்கிற ஆணை வழங்கப்பட்டிருக்கிறது. கலப்புத் திருமணத்தை ஊக்குவிக்கிற மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவியினுடைய அரசு, வேறெந்த கோரிக்கைகளைக் கொடுத்தாலும், அவை சரியானதாக இருந்தால், நிச்சயமாக பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. வ. சத்தியமூர்த்தி.



1992 மார்ச் 10]

திரு. வ. சத்தியமூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, ஆதி திராவிட வகுப்பைச் சார்ந்த ஒருவரும், இதர
ஜாதியைச் சார்ந்த ஒருவரும் திருமணம் செய்து கொண்டால்
மட்டும் அது கலப்புத் திருமணம் என்று கருதப்படுகிறதா ?
இரண்டு வெவ்வேறு ஜாதியைச் சேர்ந்தவராக இருந்தால், அவர்
கள் திருமணம் செய்து கொண்டால், அது கலப்புத் திருமணம்
ஆகாதா ? இரண்டு பேர்களில் ஒருவருடைய ஜாதியை வைத்துக்
கொள்ளலாம் என்று சொன்னால், ஜாதிகள் ஒழிவதற்கு மார்க்
கம் இல்லாமல் இருக்கிறது. கலப்புத் திருமணம் செய்து
கொண்ட தம்பதிகளுக்குப் பிறக்கும் குழந்தைகளுக்கு தமிழன்
என்று பெயர் சூட்டி, அவர்களுக்கு முழுச் சலுகையை, படிப்பு,
வேலைவாய்ப்பின் மூலம் ஊக்குவித்தால், ஜாதி ஒழிய மார்க்கம்
இருக்கிறது. ஆகவே, மீண்டும் ஆதி திராவிடர் அல்லது இதர
ஜாதி என்று உருவாக்காமல் தமிழன் என்ற ஒரே ஜாதியை
உருவாக்க அரசு நடவடிக்கை எடுக்க முன்வருமா என அறிய
விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி: மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, ஜாதியை ஒழிக்க வேண்டும் என்கிற அடிப்
படையிலேதான், முற்பட்ட ஜாதி, பிற்பட்ட ஜாதி என்று இருக்கக்
கூடாது என்கிற அடிப்படையிலேதான், இந்த முன்னுரிமைகள்
எந்த ஜாதியைச் சார்ந்தவர்களும் திருமணம் செய்து கொண்டா
லும் அரசால் வழங்கப்படுகின்றன. தம்பதியரில் ஒருவர் தாழ்த்தப்
பட்டவராகவும், மற்றவர் முற்பட்ட வகுப்பினராகவோ அல்லது
பிற்பட்ட வகுப்பினராகவோ இருந்தாலும் இந்த முன்னுரிமை
கள் வழங்கப்படுகின்றன. தம்பதியரில் ஒருவர் முற்பட்ட
வகுப்பினராகவும், மற்றவர் பிற்பட்ட வகுப்பினராகவும் இருந்
தாலும் இந்த முன்னுரிமைகள் வழங்கப்படுகின்றன என்பதைத்
தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 156, திரு.
கி. தர்மலிங்கம், மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை
அமைச்சர்.

156—

ஜவ்வாது மலை அடிவாரத்தில் கால்நடை வளர்ப்புப் பண்ணை.

4174 திரு. கி. தர்மலிங்கம் :

மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

அணைக்கட்டு தொகுதி, ஜவ்வாது மலை அடிவாரத்தில் உள்ள அத்திக்குப்பம் கிராம புல எண். 136-ல் 219 ஏக்கர் அரசு நிலம் உள்ளதால் அந்த இடத்தில் கால்நடை வளர்ப்புப் பண்ணை ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவை தலைவர் அவர்களே,

[1992 மார்ச் 10

அணைக்கட்டுத் தொகுதியில் அத்திக்குப்பம் கிராமத்தில் கால்நடைப் பண்ணை அமைக்க அரசிடம் செயற் குறிப்பு இல்லை.

<u>திரு. கி. தருமலிங்கம் :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அணைக்கட்டு, ஜவ்வாது மலை அடிவாரத்தில், குறிப்பாக, ஒடுகத்தூர் பகுதியில் தாழ்த்தப்பட்ட சமூகத்தினரும், மிகப் பிற்படுத்தப்பட்ட சமூகத்தினரும் வாழும் அந்தப் பகுதியில் எந்த அரசு தொழிற்சாலையும் இல்லாததினால் அத்திக்குப்பம் கிராமத்தில் புலன் எண் 136 இல், மேய்க்கால் 219 ஏக்கர் நிலம் உள்ளதால், அந்த இடத்தில் கால் நடை வளர்ப்பு செய்வதற்கு ஏற்ற இயற்கையான சூழ்நிலை இருப்பதால், அரசு அங்கு கால் நடைகளை வளர்ப்பதற்கு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதியதாக ஒரு பண்ணை ஏற்படுத்தவேண்டுமானால், நல்ல நீர் வசதியுள்ள அதிக அளவிலான நிலங்கள் தேவைப்படும். தவிர, தேர்ந்தெடுக்கப்படும் இடம், தபால் தந்தி நிலையங்கள், இரயில் மற்றும் பேருந்து நிலையங்கள் ஆகியவற்றிற்கு அருகாமையில் இருக்க வேண்டும். மேலும், பண்ணை அமைத்திட மிக அதிகச் செலவும் ஆகும். மேற்கூறிய காரணங்களினால், அணைக்கட்டுத் தொகுதி, அத்திக்குப்பம் கிராமத்தில் கால் நடைப் பண்ணை அமைத்திட அரசிடம் செயற் குறிப்பு இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> வினா எண் 157. திரு. வி.கே. சின்னசாமி. மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்.

157—

<u>கால்நடை துணை நிலையங்கள்.</u>

<u>4722 திரு. வி. கே. சின்னசாமி :</u>

மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

கால் நடைகளுக்கு மருத்துவ உதவி அளிக்கும் வகையில் கால் நடை துணை நிலையங்கள் புதியதாக திறக்கும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா ?

<u>மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

[illegible]



1992 மார்ச் 10]

முற்பகல் 10-45

<u>திரு. வி.கே. சின்னசாமி :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் அவர்கள் இல்லை என்று சொல்லியிருக்கிறார்கள். நான் அவர்களுக்குப் பணிவோடு தெரிவித்துக் கொள்வது, இந்த மனித சமுதாயம் நல்ல நலமோடு, வளமோடு வாழ வேண்டுமென்றால், கால் நடைகள் நன்கு பராமரிக்கப்பட வேண்டும். ஏனென்றால், அன்றாட உணவாகப் பயன் படுத்துகின்ற பால், மாமிசம் போன்ற அனைத்துப் பொருள்களையும் இன்றைய தினம் கால் நடைகளிடமிருந்து தான் நாம் பெருகின்றோம். இன்று அசைவம் சாப்பிடாதவர்கள் எல்லாம் அதைச் சாப்பிடக் கூடிய நிலை உள்ளது. கிராமப் பகுதியில் ஐ.ஆர்.டி.பி. லோன் போன்ற கடன்கள் கொடுத்து அதிக அளவில் கால் நடைகள் பெருகிவருகின்ற சூழ்நிலையில் இருக்கின்ற காட்சிகளை நாம் பார்த்துக் கொண்டிருக்கிறோம். 15, 20 ஆண்டுகளுக்கு முன்பு தான் கால் நடை கிளை நிலையங்களைத் திறந்தார்கள். இப்போது திறக்காத சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களுடன் கலந்து பேசி, கால் நடை கிளை நிலையங்களைத் திறக்க நடவடிக்கை எடுப்பதற்கு முன் வருவாரா என்று அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கால் நடைகளுக்கு மருத்துவ உதவி அளிக்கும் வகையில் கால் நடைத் துணை நிலையங்கள் புதியதாக திறக்கும் செயற் குறிப்பு இப்போது அரசிடம் எதுவும் இல்லை. புதிதாக பதவிகள் தோற்றுவிக்க அரசு தடை விதித்துள்ளது. புதிதாக கால் நடை கிளை நிலையங்கள் ஏற்படுத்த சாத்தியக் கூறும் இல்லை. மேலும், ஓரிடத்தில் கால் நடை கிளை நிலையம் ஏற்படுத்த வேண்டி மனு பெறப்படின் அந்த மனு சம்பந்தமாக துறை அலுவலர்களுக்கு அனுப்பப்பட்டு, கால் நடை கிளை மருந்தகங்கள் ஏற்படுத்த சாத்தியக் கூறு இருப்பின், அந்த இடத்தில் கிளை நிலையத்திற்குப் பதில் பார்வை நிலையம் ஏற்படுத்தி செயல்பட்டு வருகிறது. மேலும் ஒவ்வோர் ஆண்டும் புதிதாகக் கால் நடை மருந்தகங்கள் ஏற்படுத்தும் போது, அங்கு ஏற்கனவே கிளை நிலையம் இருப்பின், ஒரே இடத்தில் கால் நடை மருந்தகம் மற்றும் கிளை நிலையம் இயங்க, அடிப்படை நோக்கத்துடன் மேற்படி கிளை நிலையம் தேவையின் அடிப்படையில் வேறொரு இடத்திற்கு மாற்றப் படுகிறது.

<u>திரு. வி.கே. சின்னசாமி :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இருக்கின்ற கிளை நிலையங்களைப் பற்றிச் சொல்லுகிறார்கள். நான் கேட்பது புதிய கிளை நிலையங்கள். எப்படி ஆரம்பச் சுகாதார நிலையம் என்றால் சிறிய கிராமங்களில் கூட நர்சுகள் இருந்து கவனித்து

வருகிறார்களோ, அது போல், கிளை நிலையங்களைத் துவங்கி, நல்ல முறையில் கிராம மக்களுக்கு, கால் நடைகளுக்கு மருத்துவ உதவி கிடைக்க வேண்டுமென்ற காரணத்தால் அதை மீண்டும் திறக்க பரிசீலனை செய்வார்களா என்பதோடு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்கள் என்பதோடு நடமாடும் கால் நடை மருந்தகங்கள் ஒவ்வொரு இடத்திலும் செயல்பட்டு வந்தது, கடந்த கால ஆட்சியில் அது கொஞ்சம் தடை பட்டுள்ளது. அதை அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்து, அதையும் மீண்டும் இயங்கச் செய்வதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்று அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதி நிலையைக் கருத்திற் கொண்டு இது பரிசீலனை செய்யப்படும்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> வினா எண் 158. திரு. எஸ். டேனியல்ராஜ். மாண்புமிகு மீனளத்துறை அமைச்சர்.

158—

## <u>மீனவர்களுக்குச் சலுகைகள்.</u>

<u>4361 திரு. எஸ். டேனியல்ராஜ் :</u>

மாண்புமிகு மீனளத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

கடல்புற பகுதி மீனவர்களுக்கு வழங்கும் சலுகைகள் ஆறு, குளம், ஏரிப்பகுதியில் வசிக்கும் மீனவர்களுக்கும் வழங்க அரசு முன்வருமா ?

<u>மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார் :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மீனவர் விபத்து காப்புறுதித் திட்டத்தின்கீழ், கடல்புற மற்றும் உள்நாட்டு மீனவர்களுக்கும் பொருந்தும், கடல் மீனவர் சேமிப்பு மற்றும் நிவாரண திட்டம், இலவச வீடுகட்டும் திட்டம் ஆகியவைகளை உள்நாட்டு மீனவர்களுக்கு விரிவுபடுத்தப்படவில்லை.

<u>திரு. எஸ். டேனியல்ராஜ் :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடற்புறத்தில் வாழ்கின்ற மீனவர்களும், உள்நாட்டு மீனவர்களும் ஒரே இடத்தில் சேர்ந்திருக்கின்ற காரணத்தால், கடற்புறத்திலே வாழுகின்ற மீனவர்கள் இலவச வீடுகள் கட்டித் தருகின்ற திட்டத்தின் கீழ் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். ஆகவே, அந்தத் திட்டத்தின் கீழ் உள்நாட்டு மீனவர்களையும் சேர்ப்பதற்கு அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.



<u>மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார் :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடற்புற மீனவர்கள் இயற்கைச் சீற்றத்திற்கு உள்ளாகும் நிலையில் உள்ளனர். உள்நாட்டு மீனவர்கள் கடற்புற மீனவர்களை விட பாதுகாப்பான இடங்களில் வசிக்கின்றனர். இருப்பினும், நிதி நிலைமை சீரடைந்தவுடன் உள்நாட்டு மீனவர்களும் இச்சலுகையைப் பெறக்கூடிய வகையில் ஆய்வு செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> வினாக்கள்-விடைகள் நேரம் முடிவுற்றது.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (†) உடுக்குறி இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெறது என்பதைக் குறிக்கும்.]

## <u>2. சிறப்புக் குறிப்புகள்.</u>

### <u>(அ) வினா நேரம் முடிவுற்றவுடன் பிரச்சினைகளை எழுப்பும் முறை குறித்து.</u>

<u>திரு. எஸ். திருநாவுக்கரசு :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே......

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> நீங்கள் என் கவனத்திற்கு எதுவுமே கொண்டு வராமல் இப்போது சொல்வதற்கு எந்த விதியிலும் இடம் இல்லை. என்னிடத்திலே ஏதாவது அனுமதி பெற்றிருக்க வேண்டும். அல்லது என் கவனத்திற்கு ஏதாவது எழுதிக் கொடுத்து இருக்க வேண்டும். இப்போது அனுமதி இல்லை இல்லை. உட்காருங்கள். (குறுக்கீடு) இப்போது அனுமதி இல்லை தயவுசெய்து உட்காருங்கள். (குறுக்கீடு) என் கவனத்திற்கு நீங்கள் எதுவும் கொண்டு வரவில்லை. நான் இப்போது இதை அனுமதிக்கவில்லை என்கிறபோது என்ன செய்ய முடியும் ? (குறுக்கீடு). என் கவனத்திற்கு கொண்டுவரவில்லை. எனவே. நான் வேறு பிரச்சினைகளை எடுக்க வேண்டும்.

முற்பகல் 10-50

<u>திரு. இரா. தாமரைக்கனி :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, . . . .

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> திரு. தாமரைக்கனி, நான் நிற்கிறேன். நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) நான் வேறு பிரச்சினைகளை எடுக்கவேண்டும். (குறுக்கீடு) திரு திருநாவுக்கரசு நீங்கள் என்கவனத்திற்கு எதுவும் கொண்டுவராமல் திடீரென்று எழுந்தால் நான் என்ன செய்ய முடியும் ? நான் இப்போது வேறு பிரச்சினைகளை எடுக்கவேண்டும். (குறுக்கீடு) நீங்கள் என் கவனத்திற்கு

எதுவுமே கொடுக்காமல் திடீரென்று எழுந்து சொல்லக்கூடாது. என்ன பிரச்சினை, எதற்காக என்பது எனக்குத் தெரியவில்லை. (குறுக்கீடு) நான் நிற்கிறேன், தயவுசெய்து அதற்காகவாவது உட்காருங்கள். (குறுக்கீடு) திரு. தாமரைக்கனி உட்கார வேண்டும்.

திரு. திருநாவுக்கரசு, எதுவாக இருந்தாலும் என்னிடத்தில் முன்கூட்டியே எழுதிக் கொடுத்து விட்டு எழுப்புங்கள். (குறுக்கீடு) 'சீரோ அவர்'-இல் எழுப்ப வேண்டுமென்றால் பேரவைத் தலைவருக்கு முன் அறிவிப்புக் கொடுத்துவிட்டு எழுப்புங்கள். (குறுக்கீடு) நான் இப்போது அனுமதிக்கவில்லை, தங்களை நான் அனுமதிக்கவில்லை (குறுக்கீடு) நான் அனுமதிக்காதபோது நீங்கள் பேசுவதற்கு வாய்ப்பில்லை. எந்த உறுப்பினர் எழுந்து பேச வேண்டுமானாலும் பேரவைத் தலைவருடைய அனுமதி இருக்க வேண்டும். வேறு வகையில் எதுவும் விதி இல்லை.

(ஆ) மேல்நிலைப்பள்ளிகளில் பணியாற்றும் தொழிற்கல்வி பகுதி நேர ஆசிரியர்களை நிரந்தரமாக்க வேண்டுமென்ற கோரிக்கையை வலியுறுத்தி அவர்கள் நடத்திவரும் போராட்டம் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சில மேல்நிலைப்பள்ளிகளில் பணியாற்றும் தொழிற்கல்வி ஆசிரியர்கள் பலர் தங்கள் போராட்டத்தின் காரணமாக கைது செய்யப்பட்டு இப்போது சிறையில் அடைக்கப்பட்டிருக்கிறார்கள். அது பற்றிய பிரச்சினையை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவர வேண்டுமென்று திரு. ஜி. பழனிசாமி, டாக்டர் தே. குமாரதாஸ், திரு. ஆர். சிங்காரம், திரு. சி. ஞானசேகரன், திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் ஆகியோர் என்னுடைய அனுமதியைக் கேட்டிருக்கிறார்கள். அந்தப் பிரச்சினையை அரசின் கவனத்திற்குக் கொண்டுவர அனுமதிக்கிறேன். திரு. ஜி. பழனிசாமி.

திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு மேல்நிலைப்பள்ளி பகுதி நேர தொழிற்கல்வி ஆசிரியர்கள் அரசாணை 714, நாள் 28–5–1990-ன்படி ஒரு ஒப்பந்தத்தோடு அதாவது 1–4–1991 முதல் 1,037 இரு பகுதி நேர ஆசிரியர்களை அடிப்படையான ஊதியங்களோடு பணி நிரந்தரம் செய்ய வேண்டும் என்ற ஒப்பந்தத்தோடு பணியாற்றிக் கொண்டிருந்தார்கள். குறிப்பாக 1,737 இரு பகுதி நேர ஆசிரியர்களில் 1–4–1990 முதல் 800 ஆசிரியர்களுக்கு அடிப்படையான ஊதியங்கள் அரசாணையின்படி வழங்கப்பட்டது. அதிலே பணி மூப்பு புறக்கணிக்கப்பட்டுள்ளதன் காரணமாக அரசாணையின்படி நிரந்தரம் செய்யப்பட வேண்டும் என்பதற்காக 1,037 இரு பகுதி நேர ஆசிரியர்களுக்கு அடிப்



படையான ஊதியம் வழங்க வேண்டும் என்பதற்காக 1,037 படையான ஊதியம் வழங்க வேண்டும் என்பதற்காக [illegible]
ஆசிரியர்களுக்கு அடிப்படையான ஊதியங்களோடு [illegible]
நிரந்தரம் செய்ய வேண்டும் என்று சொல்லி தொடர்ந்து வலி
யுறுத்திக் கொண்டு வருகிறார்கள். தற்போது அவர்கள்
400 ரூபாய் சம்பளத்தில் ஆசிரியர்களாகப் பணியாற்றிக்
கொண்டிருக்கிறார்கள். ஆறு ஆண்டு காலமாக, 500
ஆசிரியர்கள் ஊதியம் இல்லாமல், அவர்களுடைய பணியும்
நிரந்தரம் செய்யப்படாமல் பணி செய்துகொண்டிருக்கிறார்கள்.
அவர்கள் தொடர்ந்து 1991 ஏப்ரல் 24 முதல் ஆசிரியர்
களும், பெண் ஆசிரியைகளும் அரசினுடைய கவனத்திற்குக்
கொண்டு வர வேண்டும் என்பதற்காக மறியல், உண்ணாவிரதம்
போன்ற இயக்கங்களில் ஈடுபட்டு இன்றைக்கு கைது செய்யப்
பட்டு 60-க்கும் மேற்பட்ட பெண்களோடு 500-க்கும் மேற்
பட்டவர்கள் இன்றைக்கு சிறையில் இருக்கிறார்கள். அவர்
களை உடனடியாக விடுதலை செய்வதோடு, அவர்களுக்கு
பணி நிரந்தரமும் செய்து அடிப்படையான ஊதியங்களை
வழங்க அரசு முன் வர வேண்டும். அவர்களை அவல நிலையிலி
ருந்து மீட்டு அவர்களுடைய வாழ்க்கைக்கு வழிகாண
வேண்டுமென்று சொல்லி, தங்கள் மூலமாக நான் அரசினுடைய
கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு கல்வி
அமைச்சர். முற்பகல் 10-55

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, மேல் நிலைப் பள்ளிகளில்
இப்போது தொழிற் கல்வி போதிக்கப்பட்டு வருகிறது. ஏறக்
குறைய 1,375 பள்ளிகளில் தொழிற் கல்வி நடைபெற்று வரு
கிறது. அதிலே நிரந்தரமாக ஏற்கெனவே 398 ஆசிரியர்கள்
ரூபாய் 1,400—2,600 என்ற சம்பள விகிதத்தில் பணியாற்றிக்
கொண்டிருக்கிறார்கள். அதிலே டபுள் பார்ட் டைம் டீச்சர்ஸ்—ஆக
ஆக 1,037 பேர்களும், சிங்கிள் பார்ட் டைம் டீச்சர்ஸ்—ஆக
1,270 பேர்களும் இருந்து கொண்டு இருக்கின்றார்கள். டபுள்
பார்ட் டைம் டீச்சர்ஸ் 900 ரூபாய் ஊதியத்தையும்,
சிங்கிள் பார்ட் டைம் டீச்சர்ஸ் 400 ரூபாய்
ஊதியத்தையும் பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். ஏற்கெனவே
800 பேர்கள் ரெகுலரைஸ் ஆகி இன்றைய தினம் அவர்கள்
நிரந்தரமான சம்பளத்தைப் பெற்றுக் கொண்டிருக்கிறார்கள்
இந்த நிலையில், 28–5–1990 தேதியிட்ட அரசு ஆணையி[illegible]
[illegible] 800 பேர்களை நிரந்தரம் ஆக்குகின்றபோது மீதி [illegible]
களை நிரந்தரம் ஆக்குவதாக அவர்கள் உறுதி மொழியை [illegible]
இருக்கிறார்கள். அதற்காக ஒரு கமிட்டி நியமிக்கப்பட்டு [illegible]
பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது. இப்போதுள்ள [illegible]
[illegible] பகுதி நேர ஆசிரியர்கள் போராட்டத்தி[illegible]
[illegible] அரசு சட்டம் ஒழுங்கைப் பாதுகாக்[illegible]
[illegible] செய்ய, அ[illegible]
[illegible]

சிறைக்குச் சென்றிருக்கிறார்கள். இந்தச் சூழ்நிலையில் நான் இந்தப் பிரச்சினை நம் முன்னாலே வந்திருக்கிறது. இந்த ஆசிரியர்களுக்கு நான் சொல்லிக் கொள்வேன். 600 பேர்களை, நிரந்தரம் ஆக்குகின்ற முயற்சியில் அரசு உடனடியாக ஈடுபடும். சிங்கிள் பார்ட் டைம் டீச்சர்ஸ், அவர்களில் 1,276 பேர்களில் பெரும் பகுதி பேர்கள் செகண்டரி கிரேட் தகுதி பெற்றிருக்கிறார்கள். அவர்கள் செகண்டரி கிரேட் டீச்சர்ஸ் ஆக ஏற்றுக் கொள்ளப்படுவார்கள். மீதி இருக்கிறவர்கள், அதிலே தகுதி பெறாத ஆசிரியர்கள் இருக்கின்றார்கள். தகுதி பெறாத ஆசிரியர்கள் நிலை பற்றி பரிசீலனை செய்து அவர்களுக்கு ஏதாவது பயிற்சி தந்து அவர்களை நிரந்தரம் ஆக்க முடியுமா என்பதைப் பற்றி அரசு உடனடியாகப் பரிசீலிக்கும். ஆகவே எப்படியும் படிப்படியாக எல்லோரையும் நிரந்தரம் ஆக்குகின்ற திட்டத்தை உடனடியாக நாங்கள் நடைமுறைப்படுத்த இருக்கிறோம். இந்த உறுதிமொழியை ஏற்றுக் கொண்டு ஆசிரியர்கள் தங்களுடைய போராட்டத்தை வாபஸ் வாங்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

## 3. வரவு செலவுத் திட்டம், 1992–93—பொது விவாதம்—தொடர்ச்சி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1992–93-ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தின் மீது பொது விவாதம்—தொடர்ச்சி. திரு. மா. சுந்தரதாஸ்.

திரு. மா. சுந்தரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நிதிநிலை அறிக்கையிலே விவாதிப்பதற்கு வாய்ப்பு அளித்த தங்களுக்கு நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

நேற்றைய தினம் டெல்லி பாராளுமன்றத்திலே நடந்த வோட்டெடுப்பிலே அனைத்து இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அனைவரும் எங்களுக்கு வாக்களித்து மகத்தான வெற்றியைத் தந்து, அதற்காக ஆணையிட்ட நம்முடைய தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்களைப் பாராட்டி, எங்களுடைய மனமார்ந்த நன்றியையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி.)

இந்த நிதி நிலை அறிக்கையிலே பல்வேறு நல்ல அம்சங்கள் இருக்கின்றன. வரவேற்கிறோம். ஆனால் குறைகளைச் சுட்டிக் காட்டுகின்ற பொறுப்பு தோழமைக் கட்சி என்ற முறையிலே இருக்கின்ற காரணத்தினால் நான் அதைச் சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன். இந்த நிதி நிலை அறிக்கையிலே வேலை வாய்ப்பு பற்றி எந்த ஒரு குறிப்பும் கூட சொல்லப்படவில்லை. வேலை வாய்ப்பு என்று சொல்வது படித்த இளைஞர்கள் மிகவும் கஷ்டப்படுகின்ற காலத்திலே இந்த பட்ஜெட்டிலே அதற்காக எந்தத் திட்டத்தையும் அறிவிக்கவில்லை என்பது மேலும் வருந்தத்தக்க ஒரு நிலையாகும்.



மேலும் இந்தப் பகுதியைப் பொறுத்த வரையிலே முன்னாள் முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அவர்கள் ஆட்சிக் காலத்திலே 12,000 பேர்களுக்கு, டெம்பரரியாக இருந்தவர்களுக்கு நிரந்தரம் ஆக்கிக் கொடுத்தார்கள். இன்றும் டெம்பரரியாக இருப்பவர்கள் இருக்கிறார்கள். 10ஏ (1)-ல் போடக் கூடாது என்று ஆணையிருக்கிறது. இப்படிப்பட்டவர்களிலே ஏறத்தாழ 4 ஆயிரம் அல்லது 5 ஆயிரம் பேர்கள் இருந்துகொண்டு இருக்கிறார்கள். அவர்களுக்காவது நிரந்தரப்படுத்துகின்ற ஒரு திட்டத்தை வகுத்து இப்போது டெம்பரரியாக இருப்பவர்களையாவது நிரந்தரப்படுத்தி வேலை வாய்ப்பு கொடுக்கின்ற ஒரு நிலையை உருவாக்கித் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் இந்தப் பகுதியைப் பொறுத்த வரையிலே வேலை வாய்ப்புக்கு முக்கியமாக இருக்கின்ற தொழில் கூடம், இண்டஸ்ட்ரிஸ், வரவில்லை. அதற்காக ஒரு புதிய தொழிற்சாலை தொடங்குகின்ற அளவுக்கு புதிய பாலிசி இன்றைய தினம் அறிவிக்கப்பட்டிருக்கிறதே தவிர, ஒரு பேக்டரி கட்டுவதற்காக சொல்லப்படவில்லை. பேக்டரி கட்டினால்தான், தொழில் கூடங்கள் கூடினால்தான் வேலை வாய்ப்பு கிடைக்கும். வேலை வாய்ப்பு கிடைத்தால் தான் மக்களுடைய வாழ்க்கை வளப்படும். அதற்காக எந்தத் திட்டமும் இதிலே தீட்டப்படவில்லை. ஆனால் இந்தப் பகுதியிலே கடந்த முறை ஸ்டேன்டர்ட் மோட்டார்ஸ் பேக்டரியை திறந்து வைத்தற்கு மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவிக்கக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

ஆனால் ஏகப்பட்ட பேக்டரிகள், சிக் இண்டஸ்ட்ரீஸ் ஆக இருக்கின்றன. அந்த சிக் இண்டஸ்ட்ரீஸ்-ஐ நாங்கள் திறப்போம் என்று சொல்கின்ற எந்த உத்தரவாதமும் எந்த அறிக்கையும் இங்கே இந்த நிதி நிலை அறிக்கையிலே அறிவிக்கப்படவில்லை. அதே போன்று கடந்த நிதி நிலை அறிக்கையிலே நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் 420 கோடியில் கன்னியாகுமரி மாவட்டத்திலே இரண்டு தொழிற்சாலைகளைக் கூடுதலாகக் கட்டுவதாகச் சொன்னார்கள். அதற்கான ஆக்கப்பூர்வமான பணி எதுவும் நடை பெறவில்லை. அதற்கான நில ஆர்ஜிதமும் செய்யப்படவில்லை. தொழிற்சாலையும் தொடங்கப்படவில்லை என்பதை மிக வருத்தத்தோடு சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மேலும் நம்முடைய 'சிக் இண்டஸ்ட்ரிஸ்' பொறுத்த வரையிலே இன்றைக்கு டிக்-கிலே லோன் வாங்கியவர்களுக்கெல்லாம் ஏலம் போடப்படுகின்ற அட்வர்ட்டைஸ்மென்ட் தான் பத்திரிகைகளிலே பார்க்கிறோமே தவிர, அந்த சிக் இண்டஸ்ட்ரீஸ் எதனால் அந்த நிலைக்கு வந்தது ? அதை நிவர்த்திப்பதற்கு அங்கே வேலை செய்கின்றவர்கள் அந்த தொழிலாளர்கள்

நலன் கருதி அந்த சிக் இண்டஸ்ட்ரீஸ்-ஐ திரும்பவும் வேலை செய்கின்ற அளவிற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11-00

அதேபோன்று கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்த வரையில் இன்றைக்கு பல்வேறு சலுகைகளை, பல்வேறு வரிச் சலுகைககளை அறிவித்திருக்கிறீர்கள். குறிப்பாகச் சொல்ல வேண்டுமானால், கிராம்பு. கிராம்பைப் பொறுத்த வரையில் கன்னியாகுமரி மாவட்டத்தில்தான் உலகத்தில் சிறந்த கிராம்பு கிடைக்கிறது. அந்தக் கிராம்பைப் பொறுத்த வரையில் 'கிராம்பு ஆயில்' செய்கின்ற எக்ஸ்போர்ட் ஐட்டம் அது. அதனை உற்பத்தி செய்கின்ற விவசாயிகளுக்கு டாக்ஸ் போடவில்லை. அந்தக் கிராம்பை உபயோகிப்பவர்கள் ராஜஸ்தான் சேட்டுகள்தான். அவர்கள் தான் அதை வாங்கிப்போகிறார்கள். ஏறத்தாழ 5 ஆயிரம் டன் வரை எங்கள் மாவட்டத்தில் கிராம்பு உற்பத்தி ஆகிறது. ஆனால் சரியான கணக்கு எனக்குத் தெரியாது. அங்கே கிடைக்கிற கிராம்பை வைத்து ஒரு தொழிற்சாலை உருவாக்கினால் வேலைவாய்ப்பு கிடைக்கும். 'டாமின்'னில் கிடைப்பதுபோல நமக்கு நவீனப்பட்ட முறையில் அன்னியச் செலவாணியும் வரும். அதை விட்டு விட்டு அவர்களுக்கு வரி இல்லை என்று சொல்லுவதை விட அரசு அந்தக் கொள்கையை மாற்றிக்கொண்டு வரி விதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதனால் நமக்கு அதிகமாக பணம் வரும். தமிழகத்தில் இருககின்ற யாரும் அதை வாங்கி பிசினஸ் செய்யவில்லை. வட இந்தியாவைச் சேர்ந்த, ராஜஸ்தானில் உள்ளவர்கள்தான் அந்தத் தொழிலை செய்துகொண்டிருக்கிறார்கள். ஆகவே, தயவுசெய்து இத்தகைய பொருளாதார சிக்கலான சமயத்தில் அவர்கள் வியாபாரம் செய்கின்ற அந்த கிராம்பிலே வரி போடுவதிலே தவறு எதுவும் இல்லை என்று நான் சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுபோல நம்முடைய டிரான்ஸ்போர்ட்டைப் பொறுத்த வரையில் ஒன்றைச் சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன். கேரளாவிலேகூட ஆமனி பஸ்களைப் பொறுத்தவரையில் ஒரு சீட்டுக்கு 2,500 ரூபாய், 3,000 ரூபாய் என்று வரி போடுகிறார்கள். முந்தைய அரசு 2 ஆயிரம் ரூபாய் ஒரு சீட்டுக்கு வரி போட்டது. அது 1,500 ரூபாயாக குறைக்கப்பட்டது. அதாவது ரிட் போட்டு கோர்ட்டில் சென்று அதற்கான உத்தரவை வாங்கினார்கள். இந்த அரசு அதை மேலும் குறைத்திருப்பதாகச் சொல்கிறார்கள். அது சரியானது அல்ல. ஆம்னி பஸ்களைப் பொறுத்தவரையில் ஒரு சீட்டுக்கு 3 ஆயிரம் ரூபாய் கேட்டால் கூட அவர்களால் கட்ட முடியும். ஒரு ஆம்னி பஸ் வைத்திருந்தவர்கள் இப்போது 10 ஆம்னி பஸ்கள் வைத்திருக்கிறார்கள். ஏன் அவர்களுக்கு வரி போடக்கூடாது? போட்



டிருந்தால், நிச்சயமாக 500 ரூபாயை 3 ஆயிரம் ரூபாயாக ஆக்கினால் பல கோடி ரூபாய் அரசுக்கு வருமானம் வரும். அதுபற்றி இன்னொன்று கூட சொன்னார்கள். அதாவது ரெட்ராஸ்பெக்டிவ் எபெக்ட் என்று போட்டு வாங்கிய பணத்தை திருப்பிக் கொடுத்ததாக கூடச் சொல்கிறார்கள். அது எந்த அளவுக்கு உண்மை என்று எனக்குத் தெரியவில்லை. காரணம் நான் 'பைல்' பார்க்கவில்லை. என்னிடம் சொன்னதைச் சொல்கிறேன். இந்த அளவுக்கு நம்முடைய வருவாயை மேலும் ஈட்டுகின்ற வகையில் நம்முடைய கொள்கைகள் இருக்க வேண்டும்.

அடுத்து, நம்முடைய வனத் துறையை நல்ல முறையிலே நவீனப்படுத்தி செம்மைப்படுத்துவதாகக் கூறியிருக்கிறீர்கள். வீரப்பன் போன்றவர்களை கர்நாடகமும் நாமும் சேர்ந்து கூட பிடிக்க முடியாத நிலைமை இருக்கிறது. நேற்றைய தினம்கூட ஒரு செய்தி பத்திரிகையில் வந்திருக்கிறது. Smuggling of Sandalwood என்று சொல்லி 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' பத்திரிகையில் வந்திருக்கிறது. இந்த அளவுக்கு ஒரு கட்டுரை வந்திருக்கிறது என்று சொன்னால், நம்மால் வீரப்பன் போன்றவர்களை ஒடுக்க முடியவில்லை என்று சொல்லும் நிலைமை இருக்கிறது என்றால் எப்படி நல்லவைகளைச் செய்யப் போகிறோம் என்று தெரியவில்லை. மேலும், வனங்களில் படம், 'சூட்டிங்' பிடிக்கிறார்கள். அதற்கு முன்பு நாள் ஒன்றுக்கு ஆயிரம் ரூபாய் கட்டணம் இருந்தது. இப்போது 200 ரூபாயாக அதை ஆக்கியிருக்கிறார்கள். நான் சொல்கிறேன், அதனை 1 லட்சம் ரூபாய் ஆக்கலாம். ஏன் என்றால் வன விலங்குகளுக்கு நாசம் உருவாக்குகிறார்கள். நஷ்டம் உண்டாக்குகிறார்கள். அவர்களிடம் கோடிக்கணக்கில் ரூபாய் இருக்கிறது. நாள் ஒன்றுக்கு படம் பிடிக்க 1 லட்சம் ரூபாய் கட்டணம் வாங்கினால் கூட அவர்களுக்கு நஷ்டம் இல்லை. அப்படி வாங்கினால்தான் நம்முடைய ஏழையெளிய மக்களுக்கு நல்ல காரியம் செய்ய முடியும் என்று நான் சொல்லிக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். அப்படிச் செய்தால் இன்னும் அதிகமாக பணம் நம் நாட்டுக்கு வரும்.

ஆனால் அதற்கு மேலாக நாம் 3 லட்சம் வருமானம் உள்ள கடைகளுக்கு டாக்ஸ் போடுவது சரியல்ல. சாதாரண 'டீ' கடைகளில் கூட தினமும் ஆயிரம் ரூபாய்க்கு வியாபாரம் நடக்கிறது. அவர்களிடம் டாக்ஸ் போடுவது என்று சொன்னால் விலைவாசி உயரத்தான் செய்யும், அதேபோன்று விவசாயிகள் மீது, வரிகளைச் சுமத்தியிருக்கிறோம். இந்த வரிகளை எல்லாம் குறைத்துவிட்டு, பணக்காரர்கள் உபயோகிக்கின்ற கிராம்புக்கு வரி போட வேண்டும். ஆம்னி பஸ்களுக்கு வரிகளை அதிகப்படுத்தி மக்களுக்கு நன்மை செய்ய வேண்டும்.

அடுத்து, இந்த பட்ஜெட்டில் ஒருபோதும் இல்லாத அளவுக்கு மத்திய அரசை பல இடங்களில் தாக்கிக் கூறப்பட்டிருக்கிறது. தமிழக அரசைப் பொறுத்தவரையில் எந்த அளவுக்கு மத்திய அரசு நல்ல உறவை வைத்திருக்கிறது என்பதை நாம் அறிவோம். மத்திய அரசு, மாநில அரசு கேட்பதை செய்து கொண்டிருக்கிறது. எந்தப்பகுதியிலும் மத்திய அரசு தமிழக அரசை ஒதுக்கவில்லை. குறிப்பாகச் சொன்னால், பாமாயில் கேட்டோம். தனிப்பட்ட முறையில் பாமாயில் இம்போர்ட் செய்வதற்கு மத்திய அரசு நமக்கு அனுமதி தந்தது.

காவிரிப் பிரச்சினையில் நாங்கள் ஆளுகின்ற கர்நாடக அரசுக்கு எதிரான தீர்ப்பைக் கூட, இந்த கெசட் பப்ளிகேசனை செய்ய வேண்டுமென்று சொன்னதற்கு உடனடியாக மத்திய அரசு செய்து கொடுத்தது. அப்போது நான் பாராளுமன்றத்தில் இருந்தேன். லாபியில் நான் இருக்கின்றபோது கர்நாடக பிரதேஸ் காங்கிரஸ் பிரசிடென்ட் உட்பட எல்லோரும் எந்த அளவுக்கு தகராறு செய்து கொண்டு இருந்தார்கள் என்பதை நான் பார்த்துக் கொண்டிருந்தேன். அதைக் கூட மாற்றி விட்டு நம்முடைய பாரதப் பிரதமர் நல்ல மனதுடன் தமிழக மக்களுடைய பிரச்சினைக்கு நல்லமுறையில் அதை கெசட் பப்ளிகேசனில் வரச் செய்தார்கள். மேலும் உங்களுக்கு பணம் குறைவு என்று சொன்னபோது, ஆளுநர் உரை மீதான விவாதம் நடந்துகொண்டிருக்கும்போது 800 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டது. அதுபோல போலீஸை நவீனப்படுத்த 10 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டது. எதை மத்திய அரசு செய்யவில்லை? அதை எல்லாம் பாராட்ட வேண்டுமே தவிர பல இடங்களில் தாக்கப்பட்டிருக்கிறது. நிச்சயமாக எங்களைப் பொறுத்தவரையில், அதனைப் பொறுத்தவரையில், வேதனைக்குரிய ஒரு காரியமாக அது இருக்கிறது.

முற்பகல் 11-05

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> மாண்புமிகு அவை முன்னவர்.

<u>மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் மத்திய அரசைத் தாக்கிப் பல இடங்களில் பேசப்பட்டிருக்கிறதென்று குறிப்பிட்டார்கள். ஒன்றை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் உணர்தல் வேண்டும். மாண்புமிகு பாரதப் பிரதமர் திரு. நரசிம்ம ராவ் அவர்களிடத்திலோ அல்லது ஆளும் கட்சி இடத்திலோ கொள்கை அடிப்படையிலே எந்த விவாதமும் எழுப்பப்படவில்லை. அரசு அமைப்பு முறைகளிலே, மத்திய அரசுக்கு இருக்கிற அதிகாரம், மாநில அரசுக்கு இருக்கிற அதிகாரம் என்ற அடிப்படையிலே, அந்த அதிகாரங்களின் கீழே மாநில அரசு



செயல்படுவதில் எவ்வளவு கஷ்டங்கள் இருக்கின்றன என்பதையும், அதைப் பார்த்து, அதை ஈடுகட்டும் வகையில் சிலபல வசதிகளைச் செய்யவேண்டும்; அவற்றை செய்யத் தவறிவிட்டது மத்திய அரசு என்று அரசு அமைப்பு முறையிலே உள்ள குறைபாடுகள் எடுத்துச் சொல்லப்படுகிறதே தவிர தனிப்பட்ட முறையிலே பிரதமர் அவர்களுடைய கொள்கை இப்படி இருக்கிறது என்று சொல்லியோ, ஆளும் கட்சியினுடைய கொள்கை இப்படி இருக்கிறது என்றோ சொல்லவில்லை. பல இடங்களிலே பாராட்டி இருக்கிறேன். இந்த ஆண்டு மத்திய அரசு கொண்டு வந்த நிதிநிலை அறிக்கை எவ்வளவு எதிர்பார்க்கக்கூடிய அளவுக்குப் பாராட்டத்தக்கதாக அமைந்திருக்கிறது என்பதையும் சொல்லியிருக்கிறேன். அதையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பார்த்திருப்பார்கள் என்று கருதுகிறேன். இங்கேகூட பிரச்சினைகளை எடுத்துச் சொல்வதில் தப்பில்லை. காழ்ப்பு உணர்ச்சியின் அடிப்படையில் இல்லை. அரசு அமைப்பு முறையிலே இருக்கின்ற சிக்கல்கள்தான் மாநில அரசுக்குப் பல கேடுகளை உண்டாக்குகின்றன என்று எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது.

<u>திரு. மா. சுந்தரதாஸ் :</u> மாண்புமிகு தலைவர் அவர்களே, விளக்கத்திற்கு நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். குறிப்பாக எங்கள் கட்சியினர் ஆளுகின்ற மாநிலங்களுக்குக் கொடுக்கும் சலுகைகளைவிட, இந்த அரசுக்கு நல்ல முறையிலே, இணக்கமான முறையிலே எதைக் கேட்டாலும் கொடுக்கும் அரசாக மத்திய அரசு இருக்கிறதென்று சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். எதையும் இல்லை என்று எப்போதும் சொன்னது இல்லை. அந்த அளவுக்கு மத்திய அரசு இருக்கிறதென்பதைத்தான் கோடிட்டுக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அமைப்பு முறையிலே சில பிரச்சினைகள் இருக்கின்றன என்பது எங்களுக்கும் தெரியும், காங்கிரஸ் கட்சி ஆளும் மாநில அரசுகள் கூட சில பிரச்சினைகளைச் சொல்வதுண்டு.

அடுத்து வளர்ச்சி மன்றக் கூட்டத்தை வரலாறு காணாத அளவுக்கு பாய்காட் செய்யும் நிலைமை உருவாகியது. என்னைப் பொறுத்தவரையில், அந்தந்த இடங்களில் உள்ள சட்டமன்ற உறுப்பினர்களுக்குச் சரியான மரியாதை கொடுக்கப்படவில்லை என்பதுதான் என்னுடைய குறையே தவிர, அரசுக்கு எதிராக அதைச் செய்யவில்லை என்று சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில் எஸ். பி., கலெக்டரைத் தவிர மற்ற அதிகாரிகளைப் பொறுத்தவரையில், வேண்டாத அதிகாரிகளையே நீங்கள் அங்கே அனுப்புகிறீர்கள். எந்த மாவட்டத்தில் வேண்டாம் என்று சொன்னாலும் அவர்களை அனுப்பும் இடம் கன்னியாகுமரி மாவட்டம்தான். அந்த அளவுக்கு தவறுகளை நாங்களும் செயயவில்லை, மக்களும் செய்யவில்லை.

ஒரு தொகுதியைப் பொறுத்தவரையில், ஜே.வி.வி.டி., ஓர்க் கானாலும் சரி, ஐ.ஆர்.டி.பி. லோன் ஆனாலும் சரி, விஜிலன்ஸ் கமிட்டியானாலும் சரி, அதில் அந்தந் தொகுதி எம்.எல்.ஏ.விற்கு —அவர் எந்தக் கட்சி எம்.எல்.ஏ-வாக வேண்டுமானாலும் இருக் கட்டும்—பொறுப்பு கொடுத்தால்தான் ஆட்சி நன்றாக இருக்கும். அப்போதுதான் மாவட்டத்திலுள்ள அதிகாரிகளோடு நல்ல இணக் கமான உறவு இருக்க முடியும். எங்கள் மாவட்டத்தைப் பொறுத்தவரையில்ஜே.வி.வி.டி. ஓர்க்குக்கு எங்கெங்கே இருந்தோ வருகிறார்கள். நாங்கள் சொல்லும் ஆலோசனைகளைக் கேட்பது இல்லை. வெளி ஊர்களிலிருந்து பெரிய பெரிய காண்ட்ராக்டர்கள் வந்து, அதிகாரிகளை அணுகி, 30, 40 சதவிகிதம் கமிஷன் கொடுத்து வேலைகளை வாங்கிக் கொள்கிறார்கள். இது அரசுக் குத் தெரியாது. இதற்காகத்தான் கலெக்டரைப் பார்த்துக் கேட்டோம். நீங்கள் பீகாரிலிருந்து வந்திருக்கிறீர்கள், நேர்மை யாக நடந்துகொள்ள வேண்டாமா ? இப்படிப்பட்ட வேலைகளை எடுக்கும்போது தொகுதி எம்.எல்.ஏ.-வைக் கேட்டுச் செய்ய வேண்டாமா என்று. மிக விநோதமான செய்தி என்னவென்றால், ஒரு வேலையைச் செய்ய எடுக்கும்போது, எங்களைக் கேட்ப தில்லை. காண்ட்ராக்டர்கள் எந்த இடத்தில் வேலை எடுத்தால் 20 சதவிகிதம் கமிஷன் தங்களுக்குக் கிடைக்கும் என்று பார்க்கி றார்கள். 10, 20 வருடங்களாக மக்கள் கேட்பதை லிஸ்டில் சேர்ப்பதில்லை. கேட்டால் லிஸ்டில் சேர்க்கவில்லை என்று சொல்கிறார்கள். அந்த வேலைகளை லிஸ்டில் சேர்க்க அவர்கள் தயாராக இல்லை. காண்ட்ராக்டர்களைக் கேட்டு, ஓர்க்கை எடுப்பார்கள். அவர்களுக்கு கிராவல், ஜல்லி பக்கத்திலேயே கிடைக்கும் இடமாகப் பார்த்து எடுப்பார்கள். இப்படி காண்ட் ராக்டர்களுக்கு அதிக லாபம் கிடைக்கும் இடமாகப் பார்த்து எடுக்கும்போது, பொது மக்களுக்கு அந்தப் பலன் போய்ச் சேர வில்லை. அடுத்து ஐ.ஆர்.டி.பி. லோன் கொடுக்கும்போது, தொகுதி எம்.எல்.ஏ. இருக்கிறார்—எலக்டட் ரெப்ரசென்டேட்டிவ் அவரைக் கேட்பதில்லை. அவரைக் கன்சல்ட் பண்ணுவதில்லை. அதிலும் அதிகாரிகள் கமிஷன் வாங்குகிறார்கள். இதிலே ஆளுங் கட்சி குறுக்கீடு எதுவும் இல்லை. எங்கள் மாவட்டத்தில் அந்தப் பிரச்சினை இல்லை. இதைவிட முக்கியமான பிரச்சினை, விஜிலன்ஸ் கமிட்டி பற்றிப் பேச மாண்புமிகு அமைச்சரவர்கள் அழைத்தார்கள். நான் போயிருந்தேன். அப்போது, அந்தக் கமிட்டியில் எம்.எல்.ஏ.-வைப் போட வேண்டுமென்று சொன் னேன் என்று சொன்னார்கள். அங்கே 2, 3 எம்.எல்.ஏக்கள் இருந்தோம். அது பற்றி எங்கள் மாவட்டத்தில் எங்களை யாரும் கேட்கவில்லை என்று சொன்னோம். எங்களைக் கேட்கவில்லை என்பதில் பிரச்சினை இல்லை. நல்லவர்களைப் போட்டால் பரவாயில்லை. யாரைக் கேட்டு உறுப்பினர்களைப் போட்டீர்கள் என்று அமைச்சரவர்கள் கேட்டார்கள்.



தங்கையா என்பவர் எங்கள் மாவட்டத்தைச் சேர்ந்தவரே இல்லை. ஏதோ ஒரு தங்கையாவைக் கேட்டு போட்டோம் என்று ஐ.ஏ.எஸ். அதிகாரி - கலெக்டர் தகவல் சொல்கிறார். அங்கே இருக்கிற அரசு அதிகாரிகள் இப்படி நடக்கிறார்கள் என்று அமைச்சர் அவர்கள் ரொம்ப வருத்தப்பட்டார்கள். என்ன இப்படி பண்ணுகிறார்களே என்று, எங்கள் மாவட்டத்திற்கு வந்தபோது அமைச்சரிடம் சொன்னோம். அமைச்சர் என்ன செய்ய முடியும் ? எம்.எல்.ஏ.வை கன்சல்ட் பண்ணச் சொல்லி யிருக்கிறோம் என்று சொன்னார்கள். ஆளும் கட்சி என்று போட்டால் கூட பிரச்சினை இல்லை. அவர்களும் எங்களிடம் தான் இருப்பார்கள். விஜிலன்ஸ் கமிட்டியில் யாரும் எடுக்கப் போவதில்லை.

முற்பகல் 11-10

__மாண்புமிகு பேரவைத் தலைவர் :__ மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

__*மாண்புமிகு திரு. ஜி, விசுவநாதன் :__ மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சிறு குறைபாடு கன்னியாகுமரி மாவட்டத்தில் இருந்தது. அதில் சட்டமன்ற உறுப்பினர்களையும் கலந்து ஆலோசித்து அந்தக் கமிட்டியை மாற்றி அமைக்கவேண் டும் என்று உத்தரவு இடப்பட்டிருக்கிறது. அதற்கு ஆவன செய்யப்படும் என்பதை உங்கள் மூலமாக மாண்புமிகு உறுப் பினர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

__மாண்புமிகு பேரவைத் தலைவர் :__ மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர்.

__திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் :__ மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் குறைபாடு கன்னியாகுமரி மாவட் டத்தில் மட்டும் இருந்தது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார் கள். கன்னியாகுமரி மாவட்டத்தில் மட்டுமல்ல, பெரும்பாலான மாவட்டங்களில் இந்தக் குறைபாடு இருக்கிறது. சம்பந்தமே யில்லாதவர்கள் அந்தக் கடைகளில் இருக்கும் விற்பனையாளர் களுக்கு வேண்டியவர்கள் மட்டுமே அந்த கமிட்டியில் உறுப்பினர் களாக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள் என்ற குற்றச்சாட்டு ஒவ் வொரு மாவட்டத்திலும் இருக்கிறது. எனவே அமைச்சர் அவர்கள் அதிலே கவனம் செலுத்தி, சட்டப் பேரவை உறுப் பினர்களின் கருத்தையறிந்து அதன் அடிப்படையில் விழிப்புக் குழுக்களை அமைக்கவேண்டுமென்று நான் கேட்டுக் கொள் கிறேன்.

__மாண்புமிகு பேரவைத் தலைவர் :__ மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்ற உறுப்பினர்களை கலந்தாலோசித்து அவர்களிடத்திலே பெயர்களைப் பெற்று அதற்குப் பின்னர் விழிப்புக் குழுக்களை அமைக்க வேண்டுமென்று எல்லா மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும் அறிவுரை வழங்கப்பட்டிருக்கிறது. இருந்தாலும் அங்கே தவறுகள் நடந்திருந்தாலும் அது மாற்றப்பட்டு ஒழுங்குபடுத்தப் படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. மா. சுந்தரதாஸ் : பேரவைத் தலைவர் அவர்களே, மேலும் எங்களுடைய பகுதிதான் மிக மிக பார்டரில் உள்ள பகுதி. இப்போது நம்முடைய மாண்புமிகு முதல்வரும், நம்முடைய உணவுத் துறை அமைச்சர் அவர்களும் நல்லதொரு திட்டத்தை எடுத்திருக்கிறார்கள். லெவி பாயிண்டை எடுத்து விட்டு, பார்டரில் சீல் செய்யவேண்டுமென்பது திட்டம். ஆனால் எங்களுக்கு அரிசி கொண்டு போகமுடியாது. எங்களுக்குக் கிடைப்பது 12 கிலோ அரிசிதான். எங்கள் பக்கத்தில் இருப்பது கேரளா. எங்கள் மாவட்டம் வழியாகப் போவதைத் தடுப்பது நியாயமான காரியம் தான். ஆனால் நாங்கள் நம்பியிருப்பது 12 கிலோ ரேஷன் அரிசியைத்தான். எந்த அளவுக்கு வாழ முடியும்? 12 கிலோ அரிசி போதாது என்று அன்றைக்குக் கூட நாங்கள் சொன்னோம். 20 கிலோ அரிசியையாவது தரவேண்டும். 20 கிலோவுக்கு மேல் சப்சிடியில் தரமுடியாது. மேலும் நாங்கள் கேட்டுக் கொள்வது, நாகர்கோவிலில் ஒரு கிலோ அரிசி விற்கிற விலைக்கும் எங்கள் தொகுதி விளவன்கோட்டில் விற்பதற்கும் 2 ரூபாய் வித்தியாசம் இருக்கிறது. நாகர்கோவிலில் விற்கிற விலைக்கு, மீதி 30 கிலோ அரிசியை நீங்கள் கோவாபரேடிவ் சொஸைட்டி மூலம் கொடுத்தால் அரசுக்கும் நஷ்டம் கிடையாது. அப்படி 30 கிலோ அரிசியை நாகர்கோவிலில் விற்கும் விலைக்கு எங்கள் பகுதிக்கு கொடுத்துவிட்டு பார்டரை சீல் செய்தால் நன்றாக இருக்கும்.

30 கிலோ அரிசியை நார்கோவிலில் விற்கும் விலைக்கு எங்களுக்கு கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இப்போது அரிசி விலை குறைந்து அங்கே 5, 6 ரூபாய்க்கு கிடைக்கிறது. ஆனால் எங்கள் பகுதியில் ரூ. 7, 8-க்கு இன்னும் விற்றுக் கொண்டிருக்கிறது. ஆகவே நம்முடைய அரசின் மேலான கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். நம்முடைய அரசுக்கு நஷ்டம் வராது. ரேஷனில் அரிசி சப்சிடியில் கொடுத்தால் அரசின் பணம் அதிகமாகச் செலவாகாது என்ற காரணத்தால் நமக்கு இருக்கிற 12 கிலோ அரிசியை 20 கிலோவாகத் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். எங்களுக்கு 30 கிலோ அரிசி நாகர்கோவிலில் விற்கிற விலைக்கு கோவாபரேட்டிவ் சொஸைட்டி மூலமாக ஸ்பெஷல் ஆர்டர், போட்டு, விளவன் கோடு தாலுகாவில் இருக்கும் என்னுடைய தொகுதி. திரு. குமாரதாஸ் அவர்களின் தொகுதி, நம்முடைய திரு. அப்பு



தொகுதி ஆகிய 3 தொகுதிகளுக்கும்
நடேசன் அவர்களுடைய
கேட்டுக்கொள்கிறேன். விளவன்கோடு தாலுக்
கொடுக்குமாறு
காவில் இருக்கிற தொகுதிகளுக்கு நீங்கள் அப்படிக் கொடுக்க
ஒரு தனி ஆணை பிறப்பிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்
கிறேன்.

ஏறத்தாழ 4,800 ரேஷன்
மேலும் எங்களுடைய பகுதியில்
இருப்பதாகச் சொல்கிறார்கள். முதல்
கார்டுகள் ரெடியாக
நம்முடைய முதல்வர் அவர்கள்
முதல் இந்த சட்டமன்றத்தில்
கார்டு தரப்படும் என்று சொன்
சொன்னார்கள். நிச்சயமாக
அன்று இருந்த உணவுத் துறை அமைச்சரை உடனே
னார்கள். அவர்கள் வந்து விசாரித்தார்கள்.
அங்கே அனுப்பி வைத்தார்கள். இருக்கிறது என்று சொன்
4,800 ரேஷன் கார்டு ரெடியாக
எம்.எல்.ஏ.க்கள் ல்க
சொன்னது, எங்களிடத்தில்
னார்கள். கொடுப்பதாக. அது நல்ல
போட்டுக்கொடுத்தால்
யெழுத்துப் உணவுத் துறை அமைச்சர் அவர்கள்
ஆணை. மாண்புமிகு கலெக்டரிடம் கேட்டேன்,
அனுப்பியிருக்கிறார்கள். நான்
எத்தனை பேருக்குக்கொடுப்பீர்கள் என்று. 4,000 ரேஷன் கார்டுகள்
இருக்கின்றன. எம்.எல்.ஏ. சொன்னால் நீங்கள் எத்
ரெடியாக என்று கேட்டால் கலெக்டர்
தனை கார்டு கொடுப்பீர்கள் இல்லை. மாண்புமிகு அமைச்சர்
பதில் சொல்லத் தயாராக 4,800 கார்டுகள் கொடுக்கப்
மூலமாக கேட்டுக்கொள்கிறேன். நாங்கள்—எம். எல். ஏ.க்கள்
படுமா? இல்லையென்றால் கார்டுகள் கொடுக்க நீங்கள் ஆணை
சொன்னால், எத்தனை
பிறப்பிப்பீர்கள் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் : மாண்புமிகு பேர
ரேஷன் கார்டுகள்-நியாய விலைக்
வைத் தலைவர் அவர்களே, குடும்ப அட்டைகள்
கடைகளில் பெறக்கூடிய பொருட்களுக்கு இருக்கின்றன.
கிடைக்கப் பெறவில்லையென்று புகார்கள் தெரிந்து,
அவற்றில் சட்டமன்ற உறுப்பினர்கள் நேரடியாக குடியிருக்
இவரை எனக்குத் தெரியும், இவர் இந்த இடத்தில் சொன்
கிறார், இவருக்கு கார்டு வழங்கப் படவேண்டுமென்று கொடுத்தால்
னால், பர்சனல் நாலேட்ஜ் இருந்து எழுதிக் என்று அறி
அவற்றை விசாரிக்காமலேயே கொடுத்து விடலாம் பரிந்துரை
வுரை வழங்கப்பட்டிருக்கிறது. மற்றவைகளை வழங்கப்படும்
செய்து அனுப்பினால் அவைகள் ஆராயப்பட்டு
என்று தெரிவித்துக் கொள்கிறேன். (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினர்கள்
கேள்வி நேரத்தைப்போல் அவ்வப்போது அமைச்சரிடத்
தில் பதில் கேட்டுக் கொண்டு இருக்கக்கூடாது. நீங்கள் பேசு
கிறபோது சில குறிப்புகள் தரவேண்டுமென்று அவர்களாகவே

எழுந்து சொன்னால் பரவாயில்லை. மாண்புமிகு அமைச்சர் அறிவாரா என்று கேட்பது சரியல்ல. (குறுக்கீடு) திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்.

முற்பகல் 11-15

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது மாண்புமிகு உணவு அமைச்சர் சட்டமன்ற உறுப்பினர்கள் சிபார்சு செய்தால் ரேஷன் கார்டு வழங்கிவிடலாம் என்று ஒரு இடத்திலே சொல்லி அது பத்திரிகையிலே பெரிதாக வந்துவிட்டது. அதனால் நாங்கள் எல்லோரும் வீட்டிலே இருக்க முடியவில்லை. தின சரி காலையிலே ஐநூறு, ஆயிரம் பேர் மனுக்களோடு வரி சையில் வந்து நிற்கிறார்கள். நாங்கள் கையெழுத்துப் போட்டு அவற்றை தாலுக்கா விநியோக அதிகாரியிடம் அனுப்பி வைத்தால், தாலுக்கா விநியோக அதிகாரி, எங் களுக்கு அதைப் போன்ற உத்தரவு ஒன்றும் வரவில்லை என்று சொல்லிவிடுகிறார். அவர்கள் மீண்டும் எங்கள் வீட்டுக்கு வந்து எங்களைக் கேரோ செய்வதைப் போல பண்ணுகிறார்கள். ஆகவே ஒரு உறுதியான அறிவிப்பை, அல்லது உத்தரவை உடனே அந்த தாலுக்கா விநியோக அதிகாரிகளுக்கு அனுப்பி, சட்ட மன்ற உறுப்பினர்கள் சிபார்சு செய்தால் உடனே ரேஷன் கார்டு வழங்க வேண்டும் என்ற உத்தரவினை எழுத்து மூலமாக அனுப்பிவிட்டு நீங்கள் சொன்னால் நாங்கள் வீட் டில் நிம்மதியாக இருக்க முடியும்.

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிறைய கத்தை கத்தையாக நூற்றுக் கணக்கில் மனுக்களை சட்டமன்ற உறுப்பினர்களி டத்திலே கொடுக்கிறார்கள் என்றால் அவைகளை ஃபார்வேர்டு செய்து அனுப்ப வேண்டும் என்று சட்டமன்ற உறுப்பினர் களைக் கேட்டுக் கொள்கிறேன். தனிப்பட்ட முறையில் சில பேர் சில பேரை நன்கு தெரிந்தவர்கள், முக்கியமான வர்கள் அல்லது வருகின்ற அதிகாரிகள் சட்டமன்ற உறுப் பினர்களுக்கே நேரிடையாகத் தெரிந்தவர்கள், நன்கு அறி முகமானவர்கள் ஆகியவர்களுக்கு மட்டும் நேரிடையாகக் கொடுக்கலாம், இவரை எனக்குத் தெரியும் என்று அனுப் பினால் அதை மட்டும் விசாரிக்காமல் கொடுக்கலாம் என்று தான் நான் சொல்லியிருக்கிறேன் என்பதை மட்டும் தெரி வித்துக் கொள்கிறேன். அதற்கு சட்டமன்ற உறுப்பினர்கள் பொறுப்பேற்றுக் கொள்ள வேண்டும். அவருக்குக் கார்டு இல்லை, அவரை எனக்குத் தெரியும், கொடுக்கலாம் என்று சொன்னால் அவருக்கு உடனடியாகக் கொடுத்து விட லாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. மா. சுந்தர எஸ். இதெல்லாம் உங்கள் நேரத்திலேதான் போகும் முடியுங்கள்.



திரு. மா. சுந்தரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுதான் நான் கேட்கிறேன். நிறைய பேர் வருகிறார்கள். நாங்கள் பழைய ஆட்கள். மக்களை கடந்த பத்துப் பதினைந்து வருடங்களாக நன்றாகத் தெரியும். ஆகவே வருகின்ற எல்லோரும் தெரிந்தவர்களாகவே வரு கிறார்கள். ஆகவே என்ன செய்வது என்று தெரியவில்லை. ஜெனியூனாகத்தான் வருகிறார்கள். பரிந்துரை செய்கிறோம். எல்லோருக்கும் கொடுக்க முடியாதுதான். ஓரளவிற்காவது கொடுக்க ஆணை பிறப்பிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

எங்களுடைய பகுதியைப் பொறுத்தவரையில் மிக முக் கியமான பிரச்சினையாக இருப்பது மடிச்சல் கால்வாய். நம்முடைய அமைச்சரைப் பார்த்து நான் சட்டமன்ற உறுப் பினராக ஆனதிலேயிருந்தே சொல்லிக் கொண்டிருக்கிறேன். இப்போதைய அமைச்சரிடம் கூட சொல்லியிருக்கிறேன். மடிச்சல் கால்வாய்க்கு ரூ. 15 இலட்சம் தேவைப்படுகிறது. மக்கள் தாங்களாகவே மூன்று கோடி ரூபாய் செலவு செய்து ஒரு கால்வாயை வெட்டியிருக்கிறார்கள். அதை நவீனப்படுத்த ‘டெக்னிக்கல் நோ-ஹவ்’ இல்லாமல் இருக்கிறது. அதற்காக ரூ. 12 இலட்சம் தேவை என்று சொன்னால் நம்முடைய என்ஜினியர்கள் ஒருபோதும் அந்தப் பணத்தை ஒதுக்கு வதில்லை. மூன்று, நான்கு தடவை அமைச்சரிடமும் மனு கொடுத்திருக்கிறேன். ஆகவே நிச்சயமாக பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் இந்த நிதியாண்டிலேயாவது ரூ. 15 இலட்சம் ஒதுக்கி அந்தக் கால்வாயை சீர் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். நாம் எது எதற்காகவோ எவ் வளவோ செலவு செய்கிறோம். இந்தக் கால்வாயைப் பொறுத்த வரையில் மக்களாகவே 3 கோடி ரூபாயை செலவழித் தப்பின்னால் அதனுடைய ‘டெக்னிக்கல் நோ-ஹவுக்காக’ 12 இலட்சம் ரூபாய் தேவைப்படுகிறது என்று சொல்லுகிறார்கள். இப்போது அது 15 இலட்சம் ரூபாயாக இருக்கலாம். இதை நம் முடைய சீப் என்ஜினியரிடம் பலமுறை சொன்னதற்குப் பிறகும் அதை அவர்கள் கொடுக்கத் தயாராக இல்லை. ஆகவே நம் முடைய மாண்புமிகு அமைச்சரிடம் நான் கேட்டுக்கொள்வது தயவு செய்து இந்த நிதியாண்டிலாவது 12 இலட்சம் ரூபாயை ஒதுக்கித் தந்து இந்தப் பிரச்சினையைத் தீர்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தைப் பொறுத்த வரை யில் குழித்துறை காம்ப்ரஹென்சிவ் வாட்டர் சப்ளை ஸ்கீம் தொடங்கப்பட்டு பல வருடமாக முடிவு பெறாத நிலையிலே

இருக்கிறது. அதைப் போலவே களியக்காவிளை கூட்டுக் குடி
நீர்த் திட்டத்திற்கு 1989 ஆம் ஆண்டிலேயே அடிக்கல் நாட்டப்
பட்டு, பணம் ஒதுக்கப்பபட்டுகூட எந்தவிதமான வேலையும்
இதுவரையிலும் செய்யப்படவில்லை. இந்த வாட்டர் போர்டில்
இருக்கிறவர்கள் என்ன செய்து கொண்டிருக்கிறார்கள் என்று
தெரியவில்லை. டெவலப்மெண்ட் கவுன்சிலிலே கேட்டால்
ஒரு ரேட்டைச் சொல்லுகிறார்கள். ஆனால் வாட்டர் போர்ட்
அத்தாரிட்டியைக் கேட்டால் ஒன்றைச் சொல்லுகிறார்கள்.
நான் திட்டத்தைக் குறை சொல்லுவதாக நினைக்காதீர்கள்.
பல்வேறு இடங்களில் சரியான முறையில் இல்லை. அவர்கள்
வாங்கும் கமிஷனில் பிரச்சினையோ என்னவோ தெரிய
வில்லை என்னுடைய பகுதியில் 14 இலட்சம் ரூபாயில் ஒரு
திட்டத்தை முடித்தார்கள். ஆனால் அங்கே ஒரு சொட்டுத் தண்
ணீர் கூட வரவில்லை. அடுத்தபடியாக 18 இலட்சம் ரூபாய்க்கு
ஒரு வர்ட்டர் சப்ளை ஸ்கீம் முடிந்திருக்கிறது. அந்த அளவிற்கு
வாட்டர் போர்ட் அத்தார்ட்டீஸ் ட்வார்ட் போர்ட் பொறுத்த
வரையில் பல பிரச்சினைகளை அதிகாரிகளே செய்து கொண்
டிருக்கிறார்கள் என்று தெரிகிறது. ஆகவே தயவு செய்து
இந்தப் பிரச்சினையை முடிவிற்குக் கொண்டு வர வேண்டும்
என்று தங்கள் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய காவல் துறையை 'மாடர்னைசேஷன்' செய்த
பிறகுகூட சட்டம் ஒழுங்கு, ஒழுங்காக இருக்கிறதா? நம்முடைய
முதலமைச்சர் அவர்கள், விடுதலைப் புலிகள் இயக்கத்தை ஒழிப்
பதற்காக நல்ல நடவடிக்கையை எடுத்திருக்கிறார்கள். அதற்
குப் பாராட்டுக்கள். ஒரு வார பத்திரிகையில் பார்த்
தேன். சென்னை மாநகரத்திலே கூட கீழ்ப்பாக்கம் மெடிக்
கல் காலெஜுக்குப் பக்கத்திலே ஒரு மாணவியை ஆட்டோவிலே
தூக்கிச் சென்றதாகப் படித்தேன். காவல் துறையினர்
என்னஎன்ன செய்தார்கள் என்று தெரியவில்லை. இவ்வளவு
தூரம் காவல் துறையை நவீனப்படுத்திய பிறகும் மக்கள் நிம்மதி
யாக இருக்க முடியவில்லை. அதுவும் சிட்டியிலேயே வாழ முடிய
வில்லை என்ற நிலை இருக்கக் கூடாது. அதை நிச்சயமாக நம்
முடைய அரசு கவனிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

அதே போன்று நம்முடைய பல திட்டங்கள் உலக வங்கி
யையும், மத்திய அரசையும் நம்பியிருப்பதைப் போல
இருக்கிறது. உலக வங்கியிடம் பணம் வாங்க வேண்டியது
தான். குறிப்பாக நெல்லை மாவட்டத்திலே கூட தாமிர
பரணி மாடர்னைசேஷன் ஸ்கீமுக்கு ரூபாய் ஏழரை கோடி
ஒதுக்கப்பட்டது.

முற்பகல் 11-20

அந்த வேலை, அந்த திட்டத்திற்காகச் பணத்தைச் செலவு
செய்யாமல், ரோட்டுக்கு ஏறத்தாழ 1½ கோடி ஒதுக்கிய



தாகச் சொன்னார்கள். அந்த ரோடு நல்ல முறையிலே செய்
யப்படவில்லை. அதிலே பல பிரச்சினைகள் இருப்பதாகச்
சொல்கிறார்கள். நான், அமைச்சர் அவர்களை தங்கள் மூல
மாகக் கேட்டுக்கொள்வது, நீங்கள் உலக வங்கியிடம் வாங்கிய
கடனாக இருந்தாலும்சரி, நம்முடைய பணமாக இருந்தாலும்
சரி, நீங்கள் இரிகேஷனுக்காகவோ டேம் கட்டுவதற்காகவோ
ஒதுக்கிய பணத்தை அதற்கு செலவு செய்யுங்கள். ஆனால் சாலை
போட அந்தப் பணத்தை செலவு செய்யக்கூடாது. அத்திட்டத்
திற்காக அந்தப் பணத்தை வீணடிக்கக் கூடாது. குறிப்பாகச்
சொன்னால், அதிலே பல்வேறு பிரச்சினைகள் இருக்கின்றன.
நான் அதைச் சொல்ல விரும்பவில்லை. அது அமைச்சர் அவர்
களுக்குத் தெரியும் என்று நினைக்கிறேன். பல்வேறு நோட்டீஸ்
களிலே நான் பார்த்தேன். இதைப் பார்த்து, உலக வங்கி,
ஏதோ தமிழகத்திலே உலக வங்கி கடனிலே செலவிடுகிற பணம்
சரியான முறையில் செலவு செய்யப்படவில்லை என்று கருதி
அதை அவர்கள் நிறுத்தி விடுவார்கள். அந்த அளவுக்கு ஒரு சூழ்
நிலை உருவாகக் கூடாது. உலக வங்கியின் பணம் என்றால்,
அவர்கள் வந்து பார்ப்பார்கள் அங்கே ஒரு ரோடு போட டெண்டர்
போட்டதிலே ஒரு பிரச்சினை. டெண்டரிலை பிரச்சினை என்
றெல்லாம். நோட்டீஸிலே பார்த்தேன். நான் அதைச் சொல்வது
சரியாக இருக்காது. மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு அது
புரியும் என்று நினைக்கிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :</u> மாண்புமிகு
பொதுப்பணித்துறை அமைச்சர்.

<u>மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் :</u> மாண்புமிகு
பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு திரு.
சுந்தரதாஸ் அவர்கள் சில பிரச்சினைகளை இங்கே சொன்
னார்கள். அது, உலக வங்கி உதவியோடு நடத்தப்படுகிற
திட்டமானாலும் சரி, நம்முடைய தமிழக அரசு சார்
பிலே எடுத்து நிறைவேற்றப்படுகிற திட்டமானாலும் சரி
அல்லது மத்திய அரசின் நிதி உதவியோடு நடத்தப்படுகிற
திட்டமானாலும் சரி, வேலைகளை எடுக்கின்ற நேரத்திலே
பல்வேறு பிரிவுகளாக நாம் எடுக்கின்றோம். கட்டடங்கள்,
சாலைகள், கால்வாய்களைச் சீரமைத்தல், அணைக்கட்டுகளைப்
பழுதுபார்த்தல், ஏரிகளைத் தூர்வாருதல்—இப்படிப் பல்
வேறு வேலைகளை பொதுப் பணித் துறை மூலம் எடுத்துக்
கொண்டு இருக்கிறோம். ஒவ்வொரு வேலைக்கும் நிதியை
ஒதுக்குகின்றோம். அந்த நிதியைத்தான் அந்தந்தப் பகுதி
களுக்கு செலவழிக்கின்றோமே தவிர, சாலைக்கு என்று ஒரு
நிதியை ஒதுக்குகின்ற நேரத்திலே அந்தச் சாலைகள் அமைக்
கின்ற பணிக்குத்தான் அந்த நிதியை செலவழிக்க முடியும்.
ஆகவே ஒவ்வொரு திட்டத்திற்கும் தனி அலாட்மெண்ட்
கொடுக்கின்ற நேரத்திலே அதை நாம் வேறு எதற்கும் மாற்ற
முடியாது. அப்படி ஏதாவது குறைகள் இருக்கின்ற நேரத்திலே-

டெண்டர் என்று சொன்னாலே நம்முடைய நண்பர்களுக்கு
ஒரு ஆதங்கம் இருக்கின்றது : ஏதோ காண்ட்ராக்ட் என்று
சொன்னாலே தவறு நடக்கும் என்று நினைக்கின்றார்கள்.
அதை மாற்றிக்கொள்ள வேண்டும். காலங்காலமாக, நம்
நாடு சுதந்திரம் அடைந்ததிலிருந்து காண்ட்ராக்ட் முறை
இருந்துகொண்டு வருகிறது. அது இன்றைக்கு புதிதாக வந்த
முறை அல்ல. சில நேரங்களிலே தவறு நடக்காது என்று
நான் சொல்லவில்லை. தவறுகள் நடக்கும் நேரத்திலே
அந்தந்தப் பகுதியிலே இருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்கள்
அந்தந்தப் பகுதிகளில் குறைகள் இருக்கின்றன என்று சுட்டிக்
காட்ட வேண்டும். அதற்காக காண்ட்ராக்ட் முறையே கூடாது
என்பதை நாம் ஏற்றுக் கொள்ள முடியாது. அந்தப் பகுதியிலே
நாம் டெண்டர் விடுகின்ற நேரத்திலே, நீங்கள் தான் டெண்ட
ருக்கும் சொல்லிக் கொண்டு இருக்கிறீர்கள். அங்கு குற்றங்கள்
இருக்கின்ற நேரத்திலே, சாலை சரியாகப் போடப்படவில்லை
என்றால், அங்கே இருக்கின்ற கால்வாய்கள் ஒழுங்காக
வெட்டப்படவில்லை என்றால், ஏரிகள் ஒழுங்காக தூர் வாரப்
படவில்லை என்றால், அவைபற்றி உடனடியாக என்னுடைய
கவனத்திற்குக் கொண்டு வந்தபோது கடுமையான நடவடிக்கை
கடந்த பல காலங்களிலே எடுக்கப்பட்டு இருக்கின்றது. இன்
றைக்குக் கூட நீங்கள் பார்ப்பீர்கள். இன்றைக்கு போடுகின்ற
தார் சாலையை கடந்த காலத்தோடு ஒப்பிட்டுப் பார்க்க
வேண்டும். இன்றைக்கு மெஷினரி வைத்து போட வேண்டு
மென்று புதிய திட்டத்தைக் கொண்டு வந்து இருக்கிறோம்.
ஆகவே இந்த அரசு வந்ததற்குப் பின்னாலே இந்த காண்ட்
ராக்ட் முறையிலே ஒரு சீரமைப்பு முறை வந்து இருக்கிறது
என்பதை நண்பர்கள் உணர்ந்து கொள்ள வேண்டும். மன்
னிக்க வேண்டும், உறுப்பினர்கள் உணர்ந்து கொள்ள வேண்டும்.
குறிப்பாக எந்தத் திட்டத்தில் குறைபாடு இருக்கிறது என்று
தெரிவிப்பார்களேயானால் அதை உடனடியாகக் களைவதற்கு
நான் ஏற்பாடு செய்கிறேன் என்பதைச் சொல்லக் கடமைப்
பட்டு இருக்கிறேன். ஆகவே, மொத்தத்திலே அவர்களைப்
பற்றி குற்றச்சாட்டு சொல்வது சாலப் பொருந்தாது என்பதை
யும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்</u> : திரு. மா.
சுந்தரதாஸ், விரைவில் முடிக்கவும்.

<u>திரு. மா. சுந்தரதாஸ் :</u> தலைவர் அவர்களே, கோதை
யாறு ஸ்கீம் என்று இருக்கிறது. அதைப்பற்றி நான் சொல்லும்
போது அங்கே சாலை வேண்டாம் என்று சொல்கிறேன். வேறு
ஒன்றும் இல்லை. அவ்வளவு பணத்தையும் இரிகேஷனுக்காக
செலவு செய்தால் நன்றாக இருக்கும். அதைத்தான் என்
னுடைய கருத்தாகச் சொல்லக் கடமைப்பட்டு இருக்கிறேன்,
குறை சொல்வதாக அல்ல.



பல பிரச்சினைகளை நான் உங்களுடைய நோட்டீசுக்கு
கொண்டுவந்து சொல்லக் கடமைப்பட்டு இருக்கிறேன். உலக
வங்கி பணம் வாங்கும்போது, அதை வைத்து சாலை போட
தேவை இல்லை. இருக்கின்ற பணம் முழுவதையும் சேனலுக்
காகவோ, டாம் கட்டுவதற்காகவோ, செலவு செய்தால்
நன்றாக இருக்கும் என்று சொல்லக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

மேலும் பல்வேறு திட்டங்களுக்கு மத்திய அரசின் நிதியை
எதிர் பார்த்து இருப்பதாகச் சொல்லி இருக்கிறார்கள். நிச்சய
மாக நிதியை மத்திய அரசு தரும் என்பதை நான் சொல்லிக்
கொண்டு, பல்வேறு திட்டங்களுக்காக ஒதுக்கப்படும் பணத்தை
அந்தந்தத் திட்டங்களைச் செயல்படுத்துவதற்காக செலவழிப்
பதில் நாம் முனைப்புடன் கவனித்துக் கொள்ள வேண்டு
மென்று கேட்டுக் கொள்கிறேன். (மணி அடிக்கப் பெற்றது.)

மேலும் தாமிரபரணி ஆற்றைப் பொறுத்தவரையில் தாரங்க
தாரா கெமிக்கல்லினுடைய கழிவுநீர் தாமிரபரணி ஆற்றில்
வந்து தண்ணீர் 'பொல்லூட்' ஆவதாகச் சொல்கிறார்கள்.
அதை அரசு கண்காணிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்
கிறேன். என்னுடைய தொகுதியில் 'ஏ' விங் கால்வாயில்
வாட்டர் பொல்லூஷன் இருக்கிறது. அதை பொல்லூஷன்
கன்ட்ரோல் போர்டு கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன்.

அதேபோல் என்னுடைய தொகுதியில் மீனவப் பகுதியில்
தூதூரில் ஒரு பாலம் இருக்கிறது. அது பல ஆண்டுக்காலமாக
பழுதடைந்த நிலையில் இருக்கிறது. ஏறத்தாழ 5 இலட்சம்
மக்கள் வாழ்கிற பகுதிக்கு போகிற சாலையில் அந்தப் பாலம்
இருக்கிறது. அது மிக மிக மோசமாக இருக்கிறது ; பழு
தடைந்து இருக்கிறது. அது விழுந்துவிட்டால் நிச்சயமாக
இரண்டு ஊர்களுக்கு மக்கள் போக முடியாத சூழ்நிலை வரும்.
ஆகவே, அந்தப் பாலத்தைச் சீரமைப்பதற்கு பணம் ஒதுக்கித்
தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்த முறை என்னுடைய பகுதியிலே சாலைகள் நல்ல
முறையில் செப்பனிடப்பட்டு இருக்கின்றன. இன்னும் அதிக
பணம் என்னுடைய தொகுதிக்கு ஒதுக்கி சாலைகளை
செப்பனிட்டுத் தர வேண்டுமென்று கேட்டு, எனக்கு பேச
வாய்ப்பு கொடுத்தற்காக நன்றி சொல்லி அமைகிறேன். நன்றி.
வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. காஞ்சி பன்னீர்செல்வம்.

முற்பகல் 11–25

திரு. காஞ்சி பன்னீர்செல்வம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த நிதிநிலை அறிக்கையில் நடைபெறும் பொது விவாதத்தில் கலந்துகொண்டு என்னுடைய கருத்துக்களைச் சொல்வதற்கு என்னை ஆளாக்கி இருக்கிற இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கும், என்னுடைய உத்திரமேரூர் தொகுதி மக்களுக்கும் நன்றியைத் தெரிவித்து உரையைத் தொடங்குகிறேன். நாட்டினுடைய பொருளாதாரப் பிரச்சினைகளை மனதிற் கொண்டு அனைத்து தரப்பினருக்கும் குறிப்பாக நடுத்தர மக்கள், ஏழையெளிய தாய்மார்களுக்கு உதவிடும் வகையில் நிதிநிலை அறிக்கையை அளித்திருப்பதற்கு மக்கள் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய அரசை மனதார வாழ்த்திக் கொண்டிருக்கிறார்கள்.

இந்தப் புரட்சிகரமான பட்ஜெட்டில் எல்லாவிதமான மக்கள் நல்வாழ்வுத் திட்டங்களுக்கும் கூடுதல் நிதியாதாரங்களை திரட்ட எடுத்துள்ள அரசின் முயற்சிகளை வரவேற்கிறேன். இதுவரையில் முதியோர், விதவைகள், ஆதரவற்ற மகளிர், உடல் ஊனமுற்றோர் ஆகியோருக்கு வழங்கப்பட்ட ஓய்வூதியத்தை உயர்த்தி பட்ஜெட்டில் அறிவித்திருப்பது ஏழைகளின் மேல் இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் கொண்டிருக்கும் தாய்ப்பாசத்தைக் காட்டுகிறது. ஏழை மக்களுக்கு பயன்படும் வகையில் விரிவுபடுத்தப்பட்ட மருத்துவ நலத் திட்டத்தின் மூலம் அறுவை சிகிச்சை செய்ய வேண்டியிருப்பின் ஏழையெளிய மக்களுக்கு ரூ. 15,000 உதவித் தொகை அளிக்கும் வழிவகை இந்த பட்ஜெட்டின் மூலம் அறிவித்திருப்பது மக்களிடையே பெரும் மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

மகளிர் சுயவேலை வாய்ப்பின் மூலம் சுமார் ஒரு லட்சம் பெண்கள் பயனடையும் விதத்தில் இந்த பட்ஜெட்டில் அறிவித்திருப்பது தாய்மார்களிடையே பெரும் வரவேற்பை பெற்றுள்ளது. மேலும், இந்நாட்டில் புறக்கணிக்கப்பட்டு வருகின்ற பெண் குழந்தைகளின் நலனுக்கென்றே புதியதொரு திட்டம் அறிவிக்கப்பட்டு சுமார் நான்கு கோடி ரூபாய் நிதியொதுக்கீடு செய்யப்பட்டுள்ளது வரவேற்கத்தக்கதாக அமைந்திருக்கிறது.

எங்கள் மாவட்டத்தில் அமைந்துள்ள ஸ்ரீ இராமச்சந்திரா மெடிக்கல் காலேஜில் ஜப்பான் நாட்டு உதவியுடன் நவீனப்படுத்த 80 கோடி ரூபாயும், கண் பார்வையின்மையைக் கட்டுப்படுத்த 44 கோடி ரூபாயும் நிதி ஒதுக்கியிருப்பது மருத்துவத் துறையில் இதயதெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் ஏற்படுத்தியுள்ள புதிய சாதனையாக அமைந்துள்ளது.



கோடைக்காலங்களில் குடிநீர்த் தட்டுப்பாடே இல்லாமல்
இருக்க உலக வங்கி உதவியுடன் 474 கோடி ரூபாய் கடனைப்
பெற்று சுமார் 9,000 குடியிருப்புகளுக்கு குடிநீர் வழங்கப்படு
மென்று அறிவித்திருப்பது உண்மையிலேயே வரலாற்று
சிறப்புமிக்க சாதனையாக அமைந்திருக்கிறது.

நகர மக்களும் மகிழ்ச்சியுறும் வகையில் சென்னை
நகருக்கு 1,250 கோடி ரூபாய் செலவில் எழில்மிகு சென்னை
யாக்கி, கிருஷ்ணா நதிநீரைக் கொண்டு வர முயற்சி மேற்
கொள்ளப்பட்டிருப்பது வரவேற்கத்தக்கதொன்றாகும்.

தாயுள்ளம் கொண்ட இதய தெய்வம் புரட்சித் தலைவி
அவர்கள் தமிழகத்தின் புதிய தொழில் திட்டங்களை அறிவித்து
தொழில் புரட்சி ஏற்படுத்தும் வகையில் பட்ஜெட்டில் அறிவித்
திருப்பது தமிழகத்தை தொழில் துறையில் தலைநிமிர வைக்கும்.
இவைகளில் ஒரு தொழில் கூடத்தை இதயதெய்வம் புரட்சித்
தலைவி அவர்கள் எனது உத்திரமேரூர் தொகுதியில் ஏற்படுத்
தித்தர வேண்டுமென்று பணிவாகக் கேட்டுக் கொள்கிறேன்.

கைத்தறிகளை படிப்படியாக நீக்கிவிட்டு அனைத்தையும்
விசைத் தறிகளாக மாற்றுவோம் என பட்ஜெட்டில் அறிவித்
திருப்பது எண்ணிக்கையில் அதிகமான விசைத்தறிகளைக் கொண்
டுள்ள எனது தொகுதி மக்களிடையே பெரும் மகிழ்ச்சியை
ஏற்படுத்தியுள்ளது.

அரசு ஊழியர்கள் பிரச்சினை எதுவாக இருப்பினும் பேசி
தீர்வு காணப்படும் என அறிவித்திருப்பது அரசு ஊழியர்
களிடையே பெரும் வரவேற்பை ஏற்படுத்தியுள்ளது.

கைத்தறித் துறையில் பல்வேறு நல்ல திட்டங்கள் இன்றைக்கு
இந்த நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டுள்ளது.
நமது நாட்டில் விவசாயத்திற்கு அடுத்தபடியாக இடம் பெறுவது
நெசவுத் தொழில் தான். அந்த நெசவாளர்கள் நலன்கருதி
அவர்களுடைய குடும்பங்களுக்கு மாதம் 250 ரூபாய் ஓய்வூதியம்
வழங்கும் திட்டம் வரவேற்கத்தக்கதாகும்.

கட்டுப்படியாகாத கைத்தறிகளை விசைத்தறியாக்கும்
அதே வேளையில் விசைத்தறிக்கு பயன்படுத்தப்படும் மின்
சாரத்திற்கு சலுகை விலையில் கட்டணம் விதிக்க வேண்டும்.
விவசாயத்திற்கு இலவச மின்சாரம் வழங்கும்போது விசைத்
தறிக்கு சலுகைக் கட்டணம் வழங்கினால் நெசவாளர்கள்
வாழ்வு வளம் பெற உதவும் என்பதைப் பணிவன்போடு தெரிவித்
துக் கொள்கிறேன்.

காஞ்சிபுரத்தில் பட்டுத் துணி விற்பனை வளாகம் அமைத்
திருப்பது உள்ளபடியே அந்தக் கைத்தறி குடும்பங்கள் அத்தனை
யும் மனதார இதயதெய்வம் அவர்களை பாராட்டுகின்றன.

மரணம் அடையும் நெசவாளர்களுக்கு ரூபாய் 15 ஆயிரம்
குடும்ப நிதி உதவி வழங்குவதை உள்ளபடியே நான் வரவேற்
கிறேன். தறிக்கூடம் இணைந்த இரண்டு ஆயிரம் வீடுகள்
கட்டப்படும் என்று இந்த நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்
பட்டு உள்ளதை, நெசவாளர் குடும்பத்தைச் சேர்ந்தவன்
என்ற முறையில் நான் மனதார இதய தெய்வத்திற்கு நன்றி
யைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 11—30

அதேபோல் என்னுடைய தொகுதி மிகவும் பின்தங்கிய
தொகுதியாக இருக்கிறது. தமிழகத்தில் இருக்கின்ற ஊராட்சி
ஒன்றியங்களைவிட என்னுடைய தொகுதியில் இருக்கின்ற
உத்திரமேரூர் ஊராட்சி ஒன்றியம் மிக அதிகமான ஊராட்சி
மன்றங்களை உள்ளடக்கிய ஒன்றியமாகும். நான் ஏற்கெனவே
இதைப்பற்றி இந்த அவையிலே குறிப்பிட்டு இருக்கிறேன்.
நம்முடைய இதய தெய்வம், புரட்சித் தலைவி அவர்களிடத்
திலே பேசி, உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் அதைப்
பிரித்துத் தருவதாகச் சொல்லியிருக்கிறார்கள். நான் அவர்
களுக்குப் பணிவன்போடு தெரிவித்துக் கொள்கிறேன் , சமீபத்
திலே சிங்கம்புணரி ஒன்றியத்தை இரண்டாகப் பிரிப்பதாக, நம்
முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் அறிவித்
திருக்கிறார்கள். அதேபோல், 73 ஊராட்சி மன்றங்களை
உள்ளடக்கிய உத்திரமேரூர் ஒன்றியத்தை இரண்டாகப்
பிரித்து, ஒன்றை சாலவாக்கம் ஒன்றியம் என்றும், மற்றொன்றை
உத்திரமேரூர் ஒன்றியம் என்றும், இரண்டாகப் பிரிக்க வேண்டும்
என்று நான் இந்த அவையிலே பணிவன்போடு கேட்டுக்
கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் உள்ள மக்கள் வாலாஜாபாத்தில்
இருந்து காஞ்சிபுரத்திற்கு மருத்துவமனைக்குப் போகவேண்டும்,
அல்லது செங்கற்பட்டுக்கு வரவேண்டும். எனவே, இந்த நிலை
யினை மாற்றி, அங்கே ஒரு மருத்துவமனையை ஏற்படுத்தித்
தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதே நேரத்தில், அங்கே தீயணைப்பு நிலையம்
ஒன்றையும் அமைந்துத் தரவேண்டும் என்று பணிவன்போடு
கேட்டுக் கொள்கிறேன்.



இந்த நிதிநிலை அறிக்கையிலே, டாக்சி ஓட்டுகின்ற மோட்டார்
வாகன விதியிலே வரிவிலக்கு 5 சதவீதம் அறிவித்து இருப்பதை
உள்ளபடியே—15 சதவீதத்திலிருந்து தற்போது 5 சதவீத
மாக குறைத்து இருப்பதை—அங்கே இருக்கிற மக்கள் எல்லோரும்
பாராட்டுகிறார்கள். அதையும் நான் இந்த நேரத்திலே
மனதாரப் பாராட்டுகிறேன்.

நம்முடைய தேவைக்கு ஏற்ற வகையிலே மின் உற்பத்தியைப்
பெருக்குவதில் இதய தெய்வம், புரட்சித் தலைவி அவர்களுடைய
அரசு தீவிர முயற்சி எடுத்ததை வரவேற்கிறேன். ரஷ்யாவில்
ஏற்பட்ட அரசியல் மாற்றம் காரணமாக, கூடங்குளம் அணு
மின் திட்டம் கைவிடப்பட்டதாக அறிகிறேன். இந்தத்திட்
டத்தை அமுல்படுத்த, மத்திய அரசை மாநில அரசு வற்புறுத்த
வேண்டும் என்று நான் பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கையிலே எனக்கு பேசுவதற்கு வாய்ப்
பினை அளித்த மரியாதைக்குரிய மாண்புமிகு பேரவைத்
துணைத் தலைவர் அவர்களுக்கு என்னுடைய நன்றியை இந்த
நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன். வணக்கம்.

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :</u> திரு. எஸ்.
அண்ணாமலை.

<u>திரு. எஸ். அண்ணாமலை :</u> மாண்புமிகு பேரவைத்
துணைத்தலைவர் அவர்களே, 1992—93 ஆம் ஆண்டு நிதிநிலை
அறிக்கையின் பொது விவாதத்திலே பேசுவதற்கு வாய்ப்பினை
எனக்குத் தந்திருக்கின்ற அன்னை ஆதி பராசக்தியின் மறுவுடிவ
மாய் இருக்கின்ற மாண்புமிகு தமிழகத்தின் முதல்வர் டாக்டர்
புரட்சித் தலைவியின் பாதங்களுக்கு என்னுடைய முதற்கண்
வணக்கத்தை தெரிவித்துக் கொள்கிறேன்.

1992-93 ஆம் ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கையில்
அறிவித்து இருக்கிற திட்டங்கள் அனைத்தும் ஏழை எளிய
மக்களின் உணர்வுகளையும், தொழிலாளர்களின் கஷ்டங்களை
யும், அரசு ஊழியர்களின் குறைகளையும், போக்குகின்ற
வகையில், மீனவர்களின் இன்னல்களை நீக்குகின்ற வகையில்
அமைந்துள்ளதால், இந்த ஆண்டுக்கான அத்தனை திட்டங்
களையும் தமிழகத்தில் இருக்கின்ற அனைத்து மக்களும்
பாராட்டுகின்றனர். இவை மட்டுமல்லாமல், தமிழக அரசின்
கண்ணாக விளங்குகின்ற காவல் துறையை நவீனப் படுத்தும்
திட்டம் பாராட்டுக்குரியது. புரட்சித் தலைவி மருத்துவ
நலத்திட்டம் என்கிற நல்வாழ்வுத் திட்டத்தை, தமிழகத்தில்
இருக்கின்ற மக்கள் அனைவரும் உடம்பில் இருக்
கின்ற நோய்களைத் தெரிந்து அதற்கு சிகிச்சை பெற்று,
உடல் நலத்தோடு இருக்க வேண்டும் என்று, தாய்
உள்ளத்தோடு அறிவித்திருக்கிற அந்த திட்டத்தை
வரவேற்று என் தொகுதியின் சார்பாக எங்கள் தாய்க்கு நன்றி
யைச் சொல்லக் கடமைப்பட்டு இருக்கிறோம். இப்படி

தாய் உள்ளத்தோடு அறிவித்த அனைத்து திட்டங் களையும், புரட்சித்தலைவி அவர்கள் அறிவிக்கின்ற அனைத்து திட்டங்களையும் அமைச்சர் பெருமக்கள் சிறப்பான முறையிலே செயல்படுத்தி வருகிறார்கள். ஆனால், அந்தந் துறைகளில் இருக்கின்ற அரசு அதிகாரிகளில் சில பேர்கள் புரட்சித்தலைவி அறிவித்த திட்டங்கள் மக்களிடம் போய்ச் சேர காலதாமதம் ஏற்படுத்தி அரசுக்கு கெட்ட பெயரை உண்டாக்கும் வகையில் நடந்து கொள்கிறார்கள். அந்த அதிகாரிகளை, அந்தத் துறையைச் சார்ந்த அமைச்சர்கள், கடுமையாகக் கண்டித்து, அரசு அறிவிக்கின்ற திட்டங்கள் அத்தனையும் மக்களுக்கு சேர நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் மூலம் கேட்டுக் கொள்கிறேன்.

முற்பகல் 11-53

இதற்கு உதாரணமாக நடந்த சில சம்பவங்களைப் பற்றி கூற விரும்புகிறேன். மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள், புயல், மழை, வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணத் தொகை வழங்கியதில். எங்களுடைய தொகுதியில் இந்த நாள் வரையில் சரிவர கொடுக்கப்படவில்லை. கிராம நிர்வாக அதிகாரிகளிடத் திலும், வட்டாட்சியரிடத்திலும் புகார் கூறியும், அவர்கள் நிதி, அதாவது எங்களுக்குப் பணம் வரவில்லை என்று சொல்கிறார்கள். சம்பந்தப்பட்ட அமைச்சரிடத்திலே அந்தக் குறைகளைத் தீர்ப்பதற்காக எடுத்துச் சொன்னாலும், அந்தக் குறைபாடுகள் நீங்கவில்லை.

அதுபோன்று புரட்சித் தலைவி அவர்கள் ஏழை, எளிய மக்கள், வறுமைக் கோட்டிற்குக் கீழே இருக்கின்ற மக்கள் பொங்கல் பண்டிகையை கோலாகலமாகக் கொண்டாட வேண்டுமென்பதற்காக வேட்டி, சேலைகளை 1.20 கோடி பேருக்கு வழங்கியிருக்கிறார்கள். அந்த வேட்டி, சேலைகள் கொடுப்பதைப் பற்றி எங்களுடைய தொகுதியில இருக்கின்ற கிராம நிர்வாக அதிகாரிகளைக் கேட்டால், கொடுத்து விட்டோம் என்று சொல்கிறார்கள். அந்தப் பகுதியிலே இருக்கின்ற மக்களிலே பாதி பேருக்கும் மேலாக ரேஷன் கார்டுகளை எடுத்து வந்து எங்களுக்கு வேட்டி, சேலை கொடுக்கவில்லை என்கிறார்கள். வட்டாட்சியரைக் கேட்டால் கிராம நிர்வாக அதிகாரிகளிடத்திலே கொடுத்து விட்டோம் என்று சொல்கிறார்கள். இப்படிப்பட்ட நிலையினை வருவாய்த் துறை அமைச்சரிடத்திலே பலமுறை நேரடியாகவே, அவர் அமைச்சர் பொறுப்பை ஏற்ற பிறகு, கிட்டத்தட்ட 30 தடவை அந்த அதிகாரிகளைப் பற்றி சொல்லியிருப்பேன். அவரே கண்டித்து, அல்லது அவர்களை மாற்றித் தரவேண்டுமென்று கூட நேரடியாக அமைச்சரிடத்திலே சொன்னேன். இந்த வி. ஏ. ஓ. க்களை பட்ரோடு, ஆதம்பாக்கம், பழவந்தாங்கல், பல்லாவரம் இப்படிப்பட்ட இடங்களிலே, முந்தைய ஆட்சி யிலே இருந்த அந்த சட்டமன்றத் தொகுதி உறுப்பினருக்கு



சாதகமாகக் கொண்டு வந்து போட்டுக்கொண்டார்கள். அந்த வி. ஏ. ஓ. தினசரி காலை முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் வீட்டிற்குச் சென்று, அவர் சொல்கின்றபடிதான் நடக்கின்றார்கள். இதையும் எடுத்து அமைச்சரிடத்திலே சொன்னேன். மாண்பு மிகு சட்டமன்ற உறுப்பினர்கள், திருவாளர்கள் ரங்கராஜன், ஜெயக்குமார் போன்றவர்கள் எல்லாம் பட்ரோடில் ஒரு நிகழ்ச்சி யிலே கலந்து கொண்டு விட்டு வந்தபிறகு, அங்கே புரட்சித்தலைவி அவர்களால் அறிவிக்கப்பட்ட அந்த வேட்டி சேலை வழங்கு கின்றபோது, அந்தக் கிராம நிர்வாக அதிகாரி, ஒரு தி.மு.க. நபர் அங்கே அதையெல்லாம் கொடுக்கக்கூடாது என்று சொன்ன தும். அவன் இழுத்து பூட்டிக் கொண்டு சென்றுவிட்டான். அவனை அழைத்து நானும் அங்கேயிருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர் களும், தமிழக அரசு எங்களது இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித்தலைவி அவர்கள் அறிவித்தத்திட்டம், இது ஒழுங்காக மக்களுக்குச் சேரவேண்டும், நீ கொடு நாங்கள் நிற்கிறோம் என்று சொன்னாலும், அவன் நாங்கள் சொல்வதை காதில் வாங்காமல், அவன் பூட்டிக் கொண்டு போய்விட்டான். இப்படி அந்தக்கிராம நிர்வாக அதிகாரிகள் இருக்கிறார்கள்.

தமிழகத்திலே இருக்கின்ற அமைச்சர் பெருமக்களையும், புரட்சித் தலைவியையும் தவிர, இருக்கின்ற எம்.எல்.ஏ.-க்களில் நாங்கள் இரண்டு பேரும் ' டிரேட் மார்க் ' ஒன்று கும்பகோணம் குடுமி, இன்னொன்று ஆலந்தூர் பட்டை. இப்படி எல்லோருக் கும் அறிமுகமாகின்ற வகையிலே இருக்கின்றோம். பழவந் தாங்கல், பரங்கிமலை சுரங்கப் பாதைகள் சம்பந்தமாக, பரங்கிமலையைப் பொறுத்த வரையில் அங்கே தனியார் வீடு களிலே சில பேர் 'ஸ்டே' வாங்கி வைத்திருக்கிறார்கள். அவர் களை அணுகி பேசுவதற்காக அந்தப் பகுதியில் அவர்களை அழைத்துப் பேசுவதற்காக சென்றேன். அப்போது அங்கே அமர்ந்து பேசுவதற்கு இடமில்லை. பழவந்தாங்கல் கிராம நிர்வாக அதிகாரி அலுவலகத்திற்குச் சென்றோம். அப்படி செல்கின்றபோது நாங்கள் 10 பேரோடு சென்றோம். அவர் என்னிடம் கேட்கிறார். உட்கார்ந்து கொண்டு, நீ யார், எதற்காக வந்தாய் என்று கேட்கிறார். நான் சொன்னேன். நீ ஏதாவது பேப்பர் பார்க்கிற பழக்கம் உண்டா என்று அவரிடத்திலே நேரடியாகவே கேட்டேன். பார்த்தேன் என்றார். ஏன் ஐயா, எனது இந்த பட்டை கூடவா உனக்குத் தெரியாது என்று கிண்டலாகவே கூட கேட்டேன். அப்படிப் பட்ட கிராம நிர்வாக அதிகாரிகள் எங்களுடைய தொகுதியிலே இருக்கிறார்கள். அதைப்பற்றி பலமுறை அமைச்சரிடம் சொல்லியாகிவிட்டது. அமைச்சரவர்கள் கிராம நிர்வாக அதிகாரிகளை மாற்றி, புரட்சித் தலைவி அவர்கள் அறிவிக்கின்ற அத்தனை நல்ல திட்டங்களும் மக்களுக்கு போய் சேரவேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களின் வாயிலாக கேட்டுக் கொள்கிறேன்.

முற்பகல் 11.40

அதே போல என்னுடைய தொகுதியிலே குடியிருக்கின்ற வர்கள் கிட்டத்தட்ட 2 ஆயிரம் 3 ஆயிரம் பேர்களுக்கு பட்டாக் கள் வழங்கப்படவில்லை, அந்த மக்களின் குழந்தைகள் படிப்

பதற்கு மின் இணைப்பு கிடையாது. மின் இணைப்புக் கேட்டால் பட்டா அல்லது என்.சி.ஓ. வேண்டும் என்று சொல்லுகிறார்கள். இந்த முறையை மாற்றி அங்கே குடியிருக்கின்றவர்களுக்கு, ஆற்று புறம்போக்கு, குட்டை புறம்போக்கு, வண்டி புறம்போக்கு பகுதிகளில் 40, 50, ஆண்டுக் காலமாக குடியிருப்பவர்களுக்கு நிரந்தரமாக பட்டா வழங்கி அவர்களுடைய பிள்ளைகள் படிப்பதற்கு ஒரு வாய்ப்பாக மின் இணைப்புகளும் தரவேண்டும் என்று மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களை கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்,

அதே போல என்னுடைய தொகுதியிலே இருக்கிற பல்லாவரம், ஆலந்தூர், மீனம்பாக்கம், நந்தம்பாக்கம, திரிசூலம். மூவரசம்பேடு போன்ற இடங்களுக்கு பாலாற்றுத் தண்ணீர் கிடைப்பதற்கு வழி வகை செய்யவேண்டும். இப்போது கொடுக்கப்படுகிற பாலாற்றுத் தண்ணீர் பல்லாவரம், ஆலந்தூர் போன்ற நகராட்சிகளுக்கே போதுமானதாக இல்லை, மீனம்பாக்கம் பேரூராட்சியில் ஒரு மேல் நிலை நீர்த் தேக்கத் தொட்டி கட்டப்பட்டு கிட்டத்தட்ட 6 மாதம் அல்லது 1 வருட காலம் ஆகியிருக்கிறது. அதற்குத்தண்ணீர் கொடுப்பதற்கு மெட்ரோ வாட்டர் துறையிடம் சென்று கேட்டால் நகராட்சியிலே அனுமதி கோருங்கள் என்று சொல்லுகிறார்கள். நகராட்சியிலே சென்று கேட்டால் எங்களுக்கு வருகிற தண்ணீர் எங்களுக்கே போதவில்லை. இந்தப் பகுதியிலே இருக்கிற மக்களுக்கே போதவில்லை. அதனால் நீங்கள் அமைச்சரிடத்திலே சொல்லுங்கள் என்று சொல்லுகிறார்கள், நான் அமைச்சரிடத்திலேயும் சொல்லியிருக்கிறேன். ஆகவே. நந்தம்பாக்கம். மீனம்பாக்கம் போன்ற இடங்களுக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உடனடியாக அந்த மக்களுக்கு பாலாற்றுத் தண்ணீர் கிடைக்க ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். சாலிக்கிராமம். எம்.ஜி.ஆர். நகர் போன்ற இடங்களில் எல்லாம் சாலை வசதிகள் இல்லை. பாதாள சாக்கடை போட்டுக் கொண்டிருக்கிறார்கள், அந்தத் திட்டத்தில் பாதாள சாக்கடைகளை வீட்டுக்கு இணைப்பு கொடுக்கவும். குடி தண்ணீருக்கும் வீட்டுக்கு இணைப்புக் கொடுக்கவும் வசதிகள் செய்து தருவதோடு மட்டுமல்லாமல் சாலைகளை செம்மைப் படுத்துவதற்கு ஆவன செய்ய வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டு செயின்ட் தாமஸ் மவுண்ட்டிலே இருக்கிற காவல் துறையினர் பழைய குடியிருப்பில் குடியிருக்கிறார்கள், கிட்டத்தட்ட 40, 50 ஆண்டுக் காலமாக அங்கே குடியிருந்து வருகிறார்கள், அது கிட்டத்தட்ட 8-க்கு பத்தாக ஓரே ரூமாக இருக்கிறது, அந்த ரூமிலேயே அவர்கள் எல்லாம் செய்ய வேண்டும். சமை



யல் அறை உபயோகத்திலிருந்து படுக்கை அறை வரை எல்லாமும் அங்கேயேசெய்ய வேண்டும். அதிலே ஒருவருக்குத்தான் தங்க தாராளமாக இடம் கிடைக்கும், காவல் துறையினருக்கு குடும்பத்தில் ஏகப்பட்ட நபர்கள். அதனால் அந்த இடம் அவர்கள் வாழ வசதியற்றதாக இருக்கிறது. அதனால் அதற்குப் பக்கத்திலே இருக்கிற காலி இடங்களில் அடுக்கு மாடி வீடுகளை கட்டித் தந்து, அவர்களுக்கு வசதியாக கொடுக்க வேண்டும், என்று தமிழகத்தினுடைய முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்களுடைய பாதங்களில் வணங்கி கேட்டுக் கொள்கிறேன்.

அதே போல அங்கேயிருக்கிற காவல் நிலையங்களில் போதுமான காவலர்கள் இல்லாத காரணத்தாலே—அதுவும் என்னுடைய தொகுதியிலே யார் வந்தாலும் பிரதமர் ஆனாலும் சரி, எங்களுடைய முதல்வர் ஆனாலும் சரி அல்லது மத்திய அமைச்சர்கள் ஆனாலும் சரி, யார் வந்தாலும் அங்கே இருக்கிற காவல் துறையினர் அத்தனை பேரும் படை எடுத்துக் கொண்டு மீனம்பாக்கம் சென்று விடுகிறார்கள், அப்படிச் செல்லுகிற போது எந்த ஒரு பிரச்சினை வந்தாலும் ஆய்வாளர்களை அணுகுகிறபோது நாங்கள் மீனம்பாக்கத்திற்கு பாதுகாப்புக்கு சென்று விடுகிறோம் என்று சொல்லுகிறார்கள், அதனால் அங்கே நடக்கின்ற தவறுகளை கண்டித்து உடனுக்குடன் தவறு செய்தவர்களைக் கைது செய்வதற்கு வாய்ப்பாக அதிக மான காவலர்களை நியமிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு எனக்கு வாய்ப்பளித்த பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கும் எங்களுடைய இதய தெய்வம் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்களுக்கும் நன்றி தெரிவித்து விடை பெறுகிறேன். வணக்கம்,

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :</u> திரு. இளம் வழுதி, என்ன வேண்டும் உங்களுக்கு ?

<u>திரு. இளம்வழுதி :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகிற நேரத்தில் அவர்களுடைய பேச்சுக்கு இடையூறு செய்யும் வகையில் குறுக் கிடக்கூடாது என்பதற்காக நான் அமைதியாக அமர்ந்திருந் தேன். அவர்கள் பேசுகிற நேரத்திலே வேட்டி சேலைகள் வழங்குகிறபோது திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் தடுத்தார்கள் என்று குறிப்பிட்டார், அது எந்த நேரத்திலே வழங்கப்பட்டது. எதற்காகத் தடுத்தார்கள். ஏன் தடுத்தார்கள் என்பதை அவர்கள் தெரிவிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :</u> இங்கே கேள்வி பதில் மாதிரி வேண்டாம், அவர் குறிப்பிட்டுச் சொன்னால் நடவடிக்கை எடுக்கப்படும் என்பது அவருக்கே தெரியும் அவர் அப்படி எழுதிக் கொடுக்கத் தயாராக இருக்கிறார், அடுத்து, திரு. உ. பலராமன் அவர்கள்.

முற்பகல் 11·45

<u>திரு. உ. பலராமன் :</u> பேரவைத் துணைத் தலைவர் அவர்களே. 1992–93 ஆண்டினுடைய நிதி நிலை அறிக்கையின் மீது . . . . . . . . . . .

<u>திரு. இளம்வழுதி :</u> பேரவைத் துணைத் தலைவர் அவர்களே . . . . . . . . . . . . . .

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :</u> திரு, இளம்வழுதி அவர்களுக்குப் பேசுகின்ற வாய்ப்பு வரும்போது. இதைப் பேசிக் கொள்ளலாம், இது அவர்களுக்கே தெரியும், முன்பே உறுப்பினராக இருந்திருக்கிறார்கள், தயவு செய்து அவையின் நடவடிக்கைகளில் அனாவசியமான குறுக்கீடுகளைத் தவிர்த்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். திரு, உ, பலராமன் அவர்கள் தொடர்ந்து பேசலாம்,

<u>திரு. உ. பலராமன் :</u> பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த நிதிநிலை அறிக்கையின் மீது பேசுகின்ற வாய்ப்பினை அளித்தமைக்காக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். சென்ற நிதிநிலை அறிக்கையிலிருந்து, இந்த நிதிநிலை அறிக்கை மிக முன்னேற்றமானது. துணிவான நடவடிக்கைகள் மூலம் பற்றாக்குறையை முடிந்த அளவு குறைத்துள்ளீர்கள். பல புதிய திட்டங்களுக்கு நிதியும் ஒதுக்கியுள்ளீர்கள் பாராட்டுகிறேன். பல திட்டங்களுக்கு மத்திய அரசை, உலக வங்கியை, ஆசிய வங்கியை எதிர்பார்த்து உள்ளீர்கள். உணவுப் பொருள்களுக்கு வரியை குறைத்துள்ளீர்கள்.. உணவுப் பொருள்களுக்கு முழுமையாக வரி விலக்கு அளிக்க வேண்டும் என்று பேரறிஞர் அண்ணா அவர்களே சொல்லியிருக்கிறார்கள்.

வேலைவாய்ப்பிற்கு சரியான திட்டங்கள் இருப்பதாக முழுமையாகத் தெரியவில்லை. வேலைவாய்ப்பு நிறுவனத்தில் பதிவு செய்து 30 இலட்சம் பேர்களுக்கு மேல் காத்திருக்கிறார்கள். வேலை கிடைக்காத இளைஞர்கள் பல குற்றங்களுக்கு உந்தப்படுகிறார்கள், அவர்களுக்கு வேலைவாய்ப்பு ஏற்படுத்த இந்த அரசு முயற்சிக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இந்த சேதுசமுத்திர திட்டம், காங்கிரஸ், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் இரண்டு கட்சிகளும் தேர்தல் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டதாகும். ஆனால் அந்தத்



திட்டத்திற்கு ஒரு முழு முனைப்போடு இந்த ஆட்சி செயல்பட, மத்திய அரசிலிருந்து அனுமதியைப் பெற காங்கிரஸ் கட்சி அதற்கு துணையாக இருக்கும். அந்தத் திட்டம் செயல்படுத்தப்படுமேயானால் கடலோர பல நகரங்கள் விருத்தி அடையவும் புதிய தொழிற் பேட்டைகள் ஏற்படவும் வாய்ப்பு ஏற்படும். அதன்மூலம் வேலையில்லாத் திண்டாட்டம் குறைக்கப்படும். மத்திய அரசு பெரிதாக உதவவில்லை என்ற மனக்குறையைத் தெரிவித்துள்ளீர்கள்.

நெய்வேலி நிலக்கரி முதல் சுரங்கத்தை விரிவுபடுத்துகின்ற திட்டம் பல கோடி ரூபாயில் இன்று நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. நாளை அரக்கோணம் கடற்படை விமான தளம் 100 கோடி ரூபாய் செலவில் மத்திய அரசு ஏற்படுத்தி, குடியரசு தலைவர் அவர்கள் திறந்து வைக்கிறார்கள். மத்திய அரசு உதவியை முறைப்படி கேட்டுப் பெறுகின்ற வழியைப் பெற வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். தமிழகத்தில் விடுதலைப் புலிகள் மீண்டும் தலை தூக்கும் நிலையுள்ளது. முழுமையாக களை எடுங்கள் என நான் கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ் கம்பராமாயணம் ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்படுவதை வரவேற்கிறேன். பாராட்டுகிறேன். காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் உயர்நீதி மன்றம் தமிழில் நடத்தப்பட வேண்டும் என்று சொன்னார்கள். அதற்கு சட்ட நூல்கள் மொழிபெயர்க்கப்பட்டதா என்பதை அறிய விரும்புகிறேன். இதுவரை சட்ட நூல்கள் சரியாக தமிழில் வரவில்லை என்றே கருதுகிறேன். அதற்குத் தடையாக இருப்பதை அகற்றி உயர் நீதிமன்றத்தில் தமிழிலேயே நடத்துவதற்கு இலக்கு நிர்ணயிக்க வேண்டுகிறேன். தமிழ் பல்கலைக்கழகத்திற்கு தமிழ் தாத்தா என்று போற்றப்படுகின்ற உ. வே. சாமிநாத ஐயர் அவர்களுடைய பெயரைச் சூட்ட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :</u> மாண்புமிகு கல்வி அமைச்சர்.

<u>மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் :</u> பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அங்கு தஞ்சாவூரிலே நடைபெறுகின்ற பல்கலைக்கழகத்திற்கு 'தமிழ்' என்கிற பெயரைச் சூட்டியிருக்கிறோம். அந்தப் பல்கலைக் கழகத்தினுடைய பெயர் தமிழ். ஆகவே தமிழ்ப் பல்கலைக் கழகம்.

<u>திரு. உ. பலராமன் :</u> துணைத் தலைவர் அவர்களே, இந்தத் தமிழ் இலக்கியத்திற்கு பெரிதும் தொண்டாற்றியவர் என்கிற வகையிலே, தமிழ் இலக்கியங்கள் நாம் எல்லாம் போற்றுகிற அளவு பரவுகிற அளவு ஏடு எடுத்துத் தந்தவர் என்கின்ற வகையிலும் அந்தத் தமிழ் பல்கலைக்கழகத்திற்கு உ.வே.சா. பெயர் சூட்டுவது அதனினும் சிறப்புடையதாக இருக்கும் என்பதற்காகத் தான் இந்த வேண்டுகோளை வைத்தேன். தொகுதிப் பிரச்சினை

...ளம், இந்த பிராட்வே பேருந்து நிலையத்தை கட்டிடமாகக் கட்டுவதற்கு முயற்சிக்க வேண்டும். இந்த உட்வர்ப், கல்யாண புரம், பள்ளம் போன்ற பகுதிகளில் வாழ்கின்ற குடிசை வாழ் மக்களுக்கு சுமார் 2 ஆயிரம் குடியிருப்புகள் கட்டித் தர இந்த ஆண்டிலேயே அதற்கு ஒரு திட்டத்தை வகுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11-50.

குடிசைக்கு ஒரு மின் விளக்கு என்கிற திட்டத்தைப் பாராட்டு கிற அதே வேளையில் சென்னையில் இருக்கிற குடிசைப் பகுதிகளுக் கும் அது கிடைப்பதற்கு ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஆதி திராவிட மக்களுக்கு ஏராளமான திட்டங்களை அறி வித்து இருக்கிற இந்த அரசு புளியந்தோப்பில் நடைபெற்ற துப்பாக்கிச் சூட்டில் மரணம் அடைந்தவர்களும், காயம் பட்ட வர்களும் ஆதி திராவிடர்களே. அவர்களுக்கு இதுவரை எந்த உதவியும் கிடைக்கவில்லை.

எழில்மிகு சென்னை 2000 என்று அறிவிக்கப்பட்டது படிப் பதற்கு மிக அழகாக இருக்கிறது. ஆனால் சென்னை நகரம் குப்பைக் கூளங்களாலும் மண் மேடுகளாலும், வீதி எங்கும் சாக்கடை நீர்த் தேக்கங்களாலும், ஊர் எங்கும் கொசுத் தொல்லைகளாலும் அவதிப்படுகிற சென்னை மக்களுடைய அல்லலைத் தீர்க்கின்ற வகையில் அரசு முதல் நடவடிக்கையை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தெரு விளக்குக் கம்பங்கள் இருக்கின்றன. விளக்குகள் இருக் கின்றன. ஆனால் எரிவது இல்லை என்பதைச் சுட்டிக்காட்டு கிறேன். இரவில் தெரு விளக்குகள் முழுமையாக எரிந்தாலே இந்த சென்னை நகரம் எழில் கோலமாக காட்சி அளிக்கும்.

திரு. குமரியார் அவர்கள் இங்கே நேற்று உரையாற்றுகிற போது சொன்னது போல் இங்கே அதிகாரிகள் எல்லாம் முழுமை யாக ஒரு சட்டமன்ற உறுப்பினரோ, நாடாளுமன்ற உறுப் பினரோ சொன்னாலும் செய்கிறார்களா என்கிற குறைபாட்டை நேற்று மிக நாசுக்காகவே சுட்டிக்காட்டினார்கள். நான் அதை வெளிப்படையாகக் கூற விரும்புகிறேன். என்னுடைய தொகுதி யில் இருக்கிற மூர்மார்க்கெட் திறப்பு விழாவில் சட்டமன்ற உறுப்பினர் என்கிற வகையில் என்னுடைய பெயரையும், நாடாளு மன்ற உறுப்பினர் என்ற வகையில் மாண்புமிகு திரு. அன்பரசு அவர்களுடைய பெயரையும் பதிக்கவில்லை. புறக்கணிக்கப்பட் டோம். அது மட்டுமல்ல, அந்த நிகழ்ச்சி நடந்து இதுவரை அந்தக் கடைக்காரர்களுக்கு கடை ஒப்படைக்கப்படவில்லை என்பதையும் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அது சம்பந்தமாக அதிகாரிகளிடத்தில் கேட்கிறபோது அவர்கள்



சரியான தகவலைத் தருவதாக இல்லை. காரணம் அவர்களும் புறக்கணிக்கப்படுகிறார்கள். இதற்கு என்ன காரணம் என்று கேட்கிறபோது தெளிவாக ஒரு விஷயத்தைச் சுட்டிக் காட்டி னார்கள். காங்கிரஸ் சட்டமன்ற உறுப்பினர்களும், நாடாளு மன்ற உறுப்பினர்களும் எதைச் சொன்னாலும் நேரடியாகவேச் செய்யத் தேவையில்லை என்று முதலமைச்சர் அவர்களே மாவட்ட ஆட்சித் தலைவருக்கு வாய்மொழியாக உத்தரவாகச் சொன்ன தாக இந்து பத்திரிக்கையிலே செய்தி வந்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :</u> மாண்புமிகு உறுப்பினர் குற்றச்சாட்டு கூறுவது கூடாது. மாண்புமிகு நிதி யமைச்சர்.

<u>மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :</u> மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் கேட்டால் எந்த அதிகாரியும் செய்யக்கூடாது என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள் என்று சொல்லுவது ஒரு அபாண்டமான குற்றச்சாட்டு ஆகும். எல்லா தொகுதிக்கும் தேவையான அளவுக்கு, எல்லா சட்டமன்ற உறுப்பினர்களும் ஒரேபடியாக கவனிக்கப்படவேண்டும் என்ற அளவுக்குத்தான் சொல்லப்பட்டிருக்கிறது. காலையிலே கேள்வி நேரத்தின்போது கூட அது சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது. நிதி நிலை அறிக்கையிலே கூட இந்தத் தொகுதி, அந்தத் தொகுதி என்று பார்க்காமல், எல்லாத் தொகுதிக்கும், பொதுவாக நாட்டின் நலன் கருதித்தான் செய்யப்படுகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் உணரவேண்டும். ஓர் முதலமைச்சர் காங்கிரஸ் உறுப்பினர்களுக்குச் செய்யாதே என்று எப்படி சொல்லுவார் ? எனவே இந்த அபாண்டமான பழியைச் சுமத்தக்கூடாது என்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :</u> மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர்.

<u>மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :</u> மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சென்னை சட்ட மன்ற உறுப்பினர் என்ற வகையில் ஒரு தகவலை இந்த மன் றத்திற்கு அளிக்க விரும்புகிறேன். மாநகராட்சி அதிகாரிகள், காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த சட்டப்பேரவை உறுப்பினர், மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் திரு. அன்பரசு ஆகியோருக்கு ஒத்துழைப்பு நல்கவில்லை. உறுதுணையாக இருக்கவில்லை என்றெல்லாம் மாண்புமிகு உறுப்பினர் அவர் கள் இங்கே சொன்னார்கள். அண்மையில் மாண்புமிகு உறுப் பினர் அவர்களும், மரியாதைக்குரிய மாண்புமிகு திரு. அன் பரசு அவர்களும் நான் இன்றைக்கு தேர்ந்தெடுக்கப்பட் டிருக்கின்ற ஆயிரம் விளக்கு தொகுதிக்கு உட்பட்ட என்னு டைய கவனத்திற்குக் கூட தெரிவிக்காமல், தொடர்பு கொண்

ளாமல், தகவல் அளிக்காமல் அங்கே இருக்கின்ற மாநகராட்சி அதிகாரிகளை அழைத்துக்கொண்டு மனுக்கள் பெற்று அதை மாநகராட்சி தனி அதிகாரியிடத்திலே கொடுத்து அதை டெலிவிஷனிலே காட்டி, பத்திரிக்கையில் காட்டி, அதன் மூலம் எப்படி மாநகராட்சி அதிகாரிகள் காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் என்றாலும் கூட ஒத்துழைப்பு நல்கியிருக்கிறார்கள் என்பதற்கு அது ஒரு அகச்சான்றாக இருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11–55.

திரு. உ. பலராமன் : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறுக்கிட்டதற்காக ஒன்றைக் கோடிட்டு காட்ட விரும்புகிறேன். மக்களுக்கு . . . . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் திரு. பலராமன் அவர்கள் இதை ஒரு விவாதப் பொருளாக ஆக்க வேண்டாம். தொடர்ந்து உங்களுடைய கருத்துக்களைச் சொல்லுங்கள். இது வினா விடை நேரம் போல் அமைந்துவிடக் கூடாது. நீங்கள் உங்களுடைய கருத்துக்களைத் தொகுத்துச் சொல்லுங்கள். அமைச்சர்கள் குறுக்கிட்டுப் பதில் சொல்வதற்கு இங்கே உரிமை இருக்கிறது. இதை வினா விடைப் பகுதியாக நீங்கள் தயவுசெய்து மாற்ற வேண்டாம். தொடர்ந்து உங்களுடைய கருத்துக்களைச் சொல்லுங்கள்.

திரு. உ. பலராமன் : ஆகவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள் என்கிற . . . . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் என்பதற்காக நான் குறுக்கிடவில்லை. ஒரு சட்டமன்ற உறுப்பினர், சென்னையிலேயே இருக்கிறேன்; என்னுடைய தொகுதியிலே காங்கிரஸ் கட்சி எம்.பி. எப்படி நடந்து கொண்டார் என்பதனை இந்த மாமன்றத்தின் மூலமாக நாட்டிற்கு தெரிவிக்க வேண்டும் என்ற கருத்திற்காகச் சொல்கிறேன்.

திரு. உ. பலராமன் : பத்திரிகையிலே வந்த செய்தியைத்தான் இங்கே நினைவுபடுத்துவது கடமை என்பதால் நான் தெரிவித்தேனேயொழிய, குற்றம் சாட்டவேண்டும் என்பது என்னுடைய நோக்கம் அல்ல என்பதை இந்த அவைக்கு நான் முதலிலே தாழ்மையோடு தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். ஆகவே, மாநகராட்சி ஊழியர்கள் . . .



மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, காங்கிரஸ் கட்சி அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தோழமைக் கட்சி என்பது உங்களுக்கு நன்றாகத் தெரியும். அப்படி நாம் தோழமையுடன் பழகவேண்டுமானால், செய்தித் தாளிலே வந்தது உண்மையா, பொய்யா என்று நேரடியாக மாண்புமிகு முதலமைச்சர் இடத்திலே நீங்கள் கேட்டு இருக்க வேண்டும். அப்படியில்லையென்றால், மாண்புமிகு முதலமைச்சருக்கு எழுதியிருக்க வேண்டும். நீங்கள் எழுதாவிட்டாலும், உங்கள் கட்சித் தலைவர் கேட்டு இருக்கலாம். அப்பொழுதுதான் நீங்கள் தோழமையை வளர்ப்பதற்காகப் பாடுபடுகிறீர்கள் என்று அர்த்தம். இல்லாவிட்டால் தோழமையை முறிப்பதற்காகப் பாடுபடுகிறீர்கள் என்றுதான் அர்த்தம். அதுமட்டுமல்ல, இங்கே பேசுகிற போது அவர் சொன்னார், நாங்களெல்லாம் அந்தத் தொகுதியினுடைய சட்டமன்ற உறுப்பினர்கள், அங்கு நடைபெறும் நிகழ்ச்சிகளில் எங்களுடைய பெயர்களைப் போடவில்லை என்று. ஆனால் உங்களுடைய பெயர்களையெல்லாம் போட வேண்டும்தான். போடவேண்டாம் என்று சொல்லவில்லை. ஆனால் 1957–லே யிருந்து 1967 வரையிலும் நான் சார்ந்திருந்த கட்சியில், முதலிலே 15 சட்டமன்ற உறுப்பினர்கள், அதற்குப் பிறகு 50 சட்டமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருந்தோம். அந்த 10 ஆண்டுகளில் எத்தனையோ அரசு நிகழ்ச்சிகள் நடந்திருக்கின்றன. அந்த அரசு நிகழ்ச்சிகளில் எவ்வளவோ கல்வெட்டல்லாம் போட்டிருக்கிறார்கள். உங்களுக்குத் தெரியும். எந்த கல்வெட்டிலாவது எங்களது கட்சியைச் சார்ந்தவர்களுடைய சட்டமன்ற உறுப்பினர் பெயரையோ, நாடாளுமன்ற உறுப்பினர் பெயரையோ போடவில்லை என்பது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரியாது என்று நான் கருதுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு கல்வி அமைச்சர்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மத்தியிலே நடைபெறுவது எங்களுடைய தோழமைக் கட்சியைச் சார்ந்த காங்கிரஸ் கட்சியினுடைய ஆட்சிதான். மத்திய அரசு சார்பிலே எத்தனையோ நிகழ்ச்சிகள் தமிழ்நாட்டிலே நடைபெறுகின்றன. அந்த நிகழ்ச்சிகளிலே எத்தனை நிகழ்ச்சிகளிலே அமைச்சர்களையோ, அங்கே இருக்கின்ற அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய சட்டமன்ற

உறுப்பினர்களையோ, நாடாளுமன்ற உறுப்பினர்களையோ, அழைத்தார்கள், அவர்களுக்குரிய கௌரவத்தைத் தந்தார்கள் என்பதை, நான் இங்கே சொல்கிறபோது எனக்கு பதில் சொல்ல முயற்சிக்க வேண்டாம். எங்களுடைய உணர்வுகளை மேலிடத்திற்குத் தெரிவிப்பது நல்லது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. பலராமன், தொடர்ந்து பேசுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர்கள் ஒன்றைக் கவனிக்க வேண்டும். ஒரு உறுப்பினர் பேசும்போது அமைச்சர்கள் குறுக்கீடு இருக்குமானால், அந்த உறுப்பினர்தான் பதில் சொல்லவேண்டுமே தவிர, இடையிலே உறுப்பினர்கள் குறுக்கிட்டுப் பேசுவது முறையாக அமையாது. உறுப்பினர்களுடைய பெயர்கள் சுட்டப்படாவிட்டால் அவர்கள் பேசுவதற்கு அனுமதி இல்லை. (குறுக்கீடு) திரு. பலராமன் அவர்களே, இதற்கு விளக்கம் அளிப்பதற்கு வாய்ப்பு இருக்கிறது. ஆகவே அவர் தொடர்ந்து பேசவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் அந்த நேரத்தில், அதாவது 1957 இல் சட்டமன்ற உறுப்பினராக இருந்தேன். ஆகவே நான் விளக்கம் சொல்ல அனுமதிக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அன்றைய தினம் நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உறுப்பினராக இல்லை. நான் சட்டமன்றத்திலே அப்போது இருந்தேன். நம்முடைய மதிப்பிற்குரிய நிதி அமைச்சர் அவர்களும் அன்றைய தினம் சட்டமன்றத்தில் இருந்து இருக்கின்றார்கள். நாங்கள் அவர்களை அழைப்போம். நீங்கள் விழாக்களிலே கலந்து கொள்ளுங்கள் என்று கேட்போம். எங்களுடைய தொகுதிகளிலே நடக்கின்ற நிகழ்ச்சிகளிலெல்லாம் கலந்து கொள்ளுங்கள் என்று பெருந் தலைவர் காமராஜர் அவர்களே கேட்டார்கள். அவர்களையும் சேர்த்து போடுங்கள் என்று சொன்னார்கள். வரமாட்டேன் என்று சொல்கிறார்களே, என்ன செய்வது என்று கேட்டால், அப்படியானால் விட்டுவிடுங்கள் என்று சொல்லிவிடுவார்கள், வரமுடியாது என்று சொன்னாலும் வரவேண்டுமென்று கடுமையாக விவாதித்தோம் அன்றைக்கு. வரமுடியாது என்ற காரணத்தினாலேதான் அன்றைக்கு விடப்பட்டதே தவிர, வேறு ஒன்றும் இல்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.



மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் இந்த அவையிலே தான் இல்லையே தவிர, தமிழ்நாட்டிலேதான் இருந்தேன். அரசியலில் அப்போது தீவிரமாக இருந்தேன். அப்போதிருந்த கட்சிகளில் எங்கெங்கே என்னென்ன நடந்தது என்பது இங்கே உள்ளவர்களை விட எனக்கு நன்றாகத் தெரியும். எல்லா விவரங்களையும் தெரிந்துதான் நான் சொல்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நண்பகல் 12-00

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இதை இதோடு விட்டு விட்டு திரு. பலராமன் அவர்கள் தொடர்ந்து பேசலாம். (குறுக்கீடு) விளக்கம் எல்லாம் கொடுத்து விட்டார்கள். புதிதாக என்ன சொல்லப் போகிறீர்கள் ? உங்களை விட மிக மூத்த உறுப்பினராக, இந்த அவையிலே இருந்தவர்கள் விளக்கம் கொடுத்து விட்டார்கள். இதற்கு மேல், திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் புதிதாக என்ன சொல்லப் போகிறீர்கள் ?

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நமது மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சரவர்களும், மாண்புமிகு சட்டத்துறை அமைச்சரவர்களும் நிறைந்த அரசியல் அனுபவத்தைப் பெற்றவர்கள். அகில இந்திய அளவிலே ஒரு புதிய பார்வை இன்றைய தினம் அரசியலைப் பார்க்க விழுந்திருக்கிறது. ஆளும் கட்சி, எதிர்க்கட்சி என்பது அல்ல இனிமேல். ஒரு கான்சென்சஸ்—ஒருவரையொருவர் புரிந்து கொண்டு மக்களின் பிரச்சினையை அணுகுவதற்காக ஒரு புதிய வழியை இன்றைய தினம் பிரதமர் திரு. நரசிம்மராவ் அவர்கள் இந்தியாவிற்குத் தந்திருக்கிறார்கள். எனவே, நாம் அந்தப் பார்வையில் தான் இனிமேல் பிரச்சினையை அணுக வேண்டுமே ஒழிய மக்களுக்குச் சேவை செய்வதிலே ஆளும் கட்சி, எதிர்க்கட்சி என்று அல்ல. தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் எல்லோரும் மக்களுக்காக சேவை செய்வதற்காகப் பணிக்கப்பட்டவர்கள். அதிலே ஒரு வழக்கமான நியமத்தை நாம் ஏற்றுக் கொண்டு....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதை எங்களுக்குச் சொல்வதற்கு முன்னால் முதலிலே உங்கள் உறுப்பினர்களுக்குச் சொல்லியிருக்க வேண்டும். இந்தப் பிரச்சினையை நாங்கள் எடுக்கவில்லை. பிரச்சினையை, அதுவும் முதலமைச்சர் மீது, இங்கே பேசுகிறபொழுது முதலமைச்சரவர்களைப் பாராட்டுகிறோம் என்று பாராட்டுவதையும் பாராட்டி விட்டுக்கொண்டு,

அதே நேரத்தில் முதலமைச்சரவர்களைப் பற்றி நேரடியாக
இந்த அவையிலே பேசுகிறபொழுது, நாளைக்குச் செய்தித்
தாளிலே வரும். அப்பொழுது எப்படி நீங்கள் கான்சென்சஸ்டஸ்
பற்றிப் பேசுகிறீர்கள் ? இங்கே முதலமைச்சர் மீது நேரடியாகக்
குற்றச் சாட்டு. நேரடியாக, அதுவும் மாவட்ட ஆட்சித் தலைவ
டத்திலே, ஐ.ஏ.எஸ். ஆபிசரிடத்திலே இப்படி பேசியதாக
தினத்தந்தியா, ' இந்து ' பேப்பரிலே வந்திருக்கிறது என்பதை
சுட்டிக்காட்டியிருக்கிறீர்கள் ? இங்கே சுட்டிக்காட்ட வேண்டியது
இல்லையே ? நீங்கள்தானே அதற்காகத் தோழமையை மறந்து
பேசுகிறீர்கள். தோழமையை மறந்து பேச வேண்டாம். நாமெல்
லாம் தோழமைக் கட்சிகள், இங்கே பேச வேண்டாம். முதல
மைச்சரைக் கேளுங்கள். முதலமைச்சரிடம் உங்களால் கேட்க
முடியாவிட்டால், உங்களுடைய கட்சித் தலைவர் இருக்கிறார்
— மாநிலத்திலும் கட்சித் தலைவர் இருக்கிறார் ; இந்தியத்
துணைக் கண்டத்திலே இருக்கிறார் ? பிரதம மந்திரி இருக்கிறார்.
இந்த மாதிரி தமிழ் நாட்டினுடைய முதலமைச்சர் இங்கேயுள்ள
சட்டமன்ற உறுப்பினர்களுக்கு இப்படி நடந்து கொள்கிறார்கள்
என்று சொல்வதற்கு உங்களுக்கு எத்தனையோ வகைகள் இருக்
கின்றன ; எத்தனையோ மார்க்கங்கள் இருக்கின்றன ; அவைகள்
எல்லாம் மூடப்படவில்லை. திறந்திருக்கின்றன. அவைகளெல்லாம்
மூடி இருப்பதைப்போல, அந்த முயற்சிகளையெல்லாம் எடுத்துக்
கொண்டு, அந்த முயற்சி வீணானதுபோல, இங்கே வந்து சொல்
வது, வேண்டுமென்றே தமிழகத்தினுடைய முதலமைச்சர் மீது
ஒரு பழியை சுமத்த வேண்டுமென்று நீங்கள் முன் கூட்டியே
தெரிந்து சொல்வதாகத்தான் நாங்கள் கருதுகிறோம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு
சட்டத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : போற்றுதலுக்
குரிய மாண்புமிகு துணைப் பேரவைத் தலைவரவர்களே,
இந்த விவாதத்திற்கு ஒரு முடிவு காண வேண்டுமென்று நான்
மனதார விழைகிறேன். நேரடியாகவே மாண்புமிகு உறுப்பினர்
அவர்களிடத்திலேயிருந்து நான் தெரிந்துகொள்ள விரும்புவது,
அண்மையில் அவரும், நாடாளுமன்ற உறுப்பினர் அன்பரசு அவர்
களும், மாநகராட்சி அலுவலகங்கள் ஒவ்வொன்றுக்கும் சென்று,
எங்களைப் போன்ற தேர்ந்தெடுக்கப்பட்ட எம்.எல்.ஏ.க்களை
யெல்லாம் ஒதுக்கி விட்டு, தகவல் இல்லாமல், அதற்கு கூறு
அதிகாரிகள் ஒத்துழைத்து இருக்கிறார்லால் இது மாண்புமிகு
முதலமைச்சரவர்கள் இப்படிச் சொல்லியிருந்தால் நடைபெற்று
இருக்குமா ? டெலிவிஷனில் காட்டியிருப்பார்களா ? போட்டா
வோடு பத்திரிகையில் வந்திருக்குமா ? அப்படியொரு அணுகு
முறை இருந்தால் அதிகாரிகள் அனுமதித்து இருப்பார்களா
எனவே, இதற்கு ஒரு விளக்கத்தை மாண்புமிகு உறுப்பினர் அளித்
தால் அது தெளிவு அளிக்கும் என்று மனதார நான் நம்புகிறேன்



மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு
அவை முன்னவர்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு
பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எண்ணங்களைப் பற்றி
மாச்சர்யங்களைப் பற்றி, கருத்துக்களைப் பற்றி விவாதத்திற்குள்
போனால் இன்றும் நேரம் போதாது; நாளையும் நேரம் போதாது.
இந்தப் பொது விவாதம் முடியாது. ஆகவே, இந்தப் பிரச்சி
னையை இந்த அளவோடு முடித்துவிட்டு, அவர் வரவு செலவுக்
கணக்குக்கு வருவாரேயானால், எனக்கு லாபமாக இருக்கும்.
எனக்கு ஒரு இலாபமும் இல்லாமல், கருத்துக்களைப் பரிமாறிக்
கொண்டு இருப்பதில் பலன் இல்லை. எனவே, வரவு—செலவுக்
கணக்குத் திட்டத்திற்கு வரும்படியாகக் உறுப்பினரைக்
கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு
உறுப்பினர் பலராமன் அவர்கள், வர வேண்டிய இடத்திற்கு
வர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. உ. பலராமன் : வர வேண்டிய இடத்திலேதான் இருக்
கிறேன். அமைச்சரவர்கள் விளக்கம் கொடுத்து விட்டுப் பேசட்
டும் என்று சொன்ன காரணத்தினாலே, சொல்வதா வேண்டாமா
என்று உங்கள் அனுமதியைக் கேட்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இதைத்
தொடர்ந்து பேசுவது முறை அல்ல ; சரியும் அல்ல ; நல்லதும்
அல்ல என்று அவை முன்னவர் அவர்கள் சொல்லி விட்டார்கள்.
அதற்குப் பின்பும் நீங்கள் வளர்க்க விரும்புவது சரி அல்ல.
நீங்கள் தொடர்ந்து வரவு செலவுத் திட்டத்திலே பேச வேண்டு
மென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. உ. பலராமன் : சுருக்காமாக இறுதி நிலைக்கே நான்
வருகிறேன். என்னுடைய தொகுதியில் நான் கேட்கிற திட்டம்
என்பது ஒன்றே ஒன்றுதான். அது 2,000 புதிய குடியிருப்பு
வீடுகள் கட்டித் தருவது ஒன்றுதான். அதை மாண்புமிகு
நிதியமைச்சரவர்கள் இந்த நிதி நிலை அறிக்கையிலேயே ஒரு
கொள்கை ரீதியாக ஏற்று, அடுத்து விளக்கம் அளிக்கிறபொழுது
சொன்னார்கள் என்றால் நான் மகிழ்ச்சி அடைவேன்.

பிற்பகல் 12-05

இந்த நிதி நிலை அறிக்கையைப் பொறுத்த மட்டில், மிகச்
சிரமமான காலகட்டத்தில், நிதானமான ஒரு சிந்தனையோடும்,
தெளிவான ஒரு முடிவோடும் அறிவிக்கப்
பட்ட இருப்பதை. மத்திய அரசினுடைய நிதிநிலை அறிக்கை
[illegible] பார்க்கும்போது, பொறுப்புணர்ந்து [illegible]
[illegible]

திருக்கிற இந்த அறிக்கையை வரவேற்று இந்த அவையின் சார்பிலே நிதியமைச்சர் அவர்களையும் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அந்த வகையில் பாராட்டி அமர்கிறேன். நன்றி.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. ஆர். பி. பரமசிவம்.

திரு. ஆர். பி. பரமசிவம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1992-93 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டத்தின் பொது விவாதத்தில், வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த மாமன்றத்தில் கலந்துகொண்டு உரையாற்ற எனக்கு வாய்ப்பு நல்கிய பேரவைத் துணைத் தலைவருக்கு மனமார்ந்த நன்றியைச் கூறி, என் ஆத்மாவின் ஜீவனே, தமிழ் தேசத்தின் இனியப் பாடலே, நீண்ட காவிரிப் போரின் வெற்றி நாயகியே, ஏழைகளின் குல தெய்வமே, தமிழகத்தின் காவல் தெய்வமே, எனக்கு இந்த நிலையை, இந்தத் தகுதியை வழங்கி, எனக்கு கண்ணெதிரே நடந்து கொண்டிருக்கிற இந்த ஜன்மத்தின் ஜீவ நாடியும், காவல் தெய்வமுமாகிய டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கு என் சிரம் தாழ்ந்த வணக்கத்தினை தங்கள் காலடியில் வைத்து, 1992-93 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டத்தின் அற்புதப் படைப்பிற்குச் செல்ல விழைகிறேன்.

அமைதியொளியில் கம்பீரமாகக் காட்சி தந்த தமிழகம், பலாத்கார சீர்குலைவுகளில் சிக்கி, பொருளாதாரச் சீரழிவு என்னும் இருளில் தவித்துக் கொண்டிருக்கும்போது, நாம் எல்லோரும் இதய தெய்வத்தின் தலைமையை ஏற்று, இந்தப் பொறுப்புக்கு வந்தோம். துப்பாக்கி கலாசாரத்தை, தமிழ் நாட்டிலிருந்து வெளியேற்றிய பெருமை, நமது டாக்டர் புரட்சித் தலைவி அவர்களையே சாரும். இந்த அம்மாளுக்கு என்ன தெரியும் என்று ஏளனம் பேசிய எல்லாம் தெரிந்த மேதாவியை, ஒற்றைக் கண் உறுத்தரை, இந்த மாமன்றம் ஏற்றுக் கொள்ளாததை நினைத்துப் பார்த்து, தமிழக மக்களுக்கு நன்றி பெருக்கோடு, இல்லாமையை அகற்றுவதற்கும், கல்லாமையைப் போக்குவதற்கும், பொருளாதாரம் படிப்படியாக உயரவும், வறுமை அகலவும், மக்களின் வாழ்க்கைத்தரம் உயரவும், குறிப்பாக ஏழையெளிய மக்கள், ஒடுக்கப்பட்ட, வாழ்வின் அடித்தளத்திலுள்ள மக்கள், வளமாக வாழ வேண்டுமென்று உயர்ந்த லட்சியங்களை, அடையவும் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் தலைமையில் நம் அரசு முழு மூச்சுடன், மிகச் சீரிய முறையில் தொடர்ந்து வெற்றி காணும் என்பதை இந்த நிதிநிலை அறிக்கை தெளிவாகக் காட்டுகிறது. முடியாது என முடித்துவிட்டு, முற்றுப்புள்ளி வைக்கப்பட்ட காவிரி நீர்ப் பிரச்சினையை முடித்துக் காட்டி, தஞ்சைத் தரணி மக்களுக்கு, புரட்சித் தலைவி அவர்கள் தாரக மந்திரமாக விளங்கி வருவதை நாடே பார்த்துக் கொண்டிருக்கிறது. தீர்ப்புப்படி, ஜனநாயக அமைப்பில் ஏற்றுக்கொள்ள வேண்டிய ஒரு நடவடிக்கை. நடுவர் மன்றம் தனது முத்திரையைப் பதிக்கிறது. ஆனால், ஏற்றுக் கொள்ளப்படவில்லை. பிறகு நீதி



தேவனின் மகுடமாக விளங்கும் உச்ச நீதிமன்றம் தனது முத்திரையைப் பதிக்கிறது. மீண்டும் மதிக்கப்படவில்லை. அதன் பிறகு, நடுவர் அரசு மிகவும் நிதானமாக, மெத்தனமாக நீதிமன்றத்தின் நியதியை ஜனநாயக அடிப்படையில் தனது முத்திரையையும் வேறு வழியில்லாமல் பதிக்க, அதனைத் தன் காலில் மிதித்துக் கொண்டு, ஒருமைப்பாட்டின் உறுதிமொழியை எடுத்துக் கொண்டவர்கள், அவர்களுடைய ஆசியோடு, பஞ்சையாய், பராரியாய், தாய்மார்கள், தமிழ்ப் பெண்கள் அடித்து நொறுக்கப்பட்டதை, வேறு நாட்டிலல்ல ; வேறு ஆளுகைக்குட்பட்ட மாநிலத்திலுமல்ல ; நமது பாரதத் திருநாட்டில், நம்முடைய மத்திய அரசின் ஆளுகைக்குட்பட்ட கர்னாடக மாநிலத்தில் — நான் பச்சையாகவே கேட்கிறேன் — இந்த அநாகரிக முறையை, அவலட்சண நடவடிக்கையை, எங்களைப் போன்ற இதய சுத்தியுடைய கட்சியை எங்கள் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் ஆசையைக் கூட எதிர்பார்க்காமல் அதிலே செம்மையான பணியை எதிர்பார்க்கும் எங்கள் தங்கத் தலைவியின் சுண்டுவிரலை அசைந்திருந்தால், நாங்கள் செய்து முடித்திருந்தால் இந்த மாமன்றத்தில் உட்கார்ந்து இருக்கும் வாய்ப்பை எங்களுக்குக் கொடுத்திருப்பீர்களா என்ற கேள்வியைத்தான் நான் கேட்க முடிகிறது அப்படிப்பட்ட இந்த நிலை, 'மாமியார் உடைத்தால் மண் குடம், மருமகள் உடைத்தால் பொன் குடமா ?' பாதிக்கப்பட்ட நம் இன மக்களுக்கு, கடுமையான நிதி நெருக்கடியிலும் உரிய உதவி நடவடிக்கைகளைப் பாங்காக எடுத்து பாசத்தின் இருப்பிடமாக, பகுத்தறிவின் பொக்கிஷமாக பார் போற்றும் புரட்சித் தலைவியாக கூட்டாட்சியின் அரசியலமைப்பை மத்திய அரசுக்கு நினைவூட்டும் வகையில் அவர்கள் எடுக்க வேண்டிய, செய்ய வேண்டிய உதவிகளை, கடமைகளைச் சுட்டிக்காட்டிய டாக்டர் முதல்வர் புரட்சித் தலைவியை நாம் பாராட்டாமல் இருக்க முடியாது. இந்த நிலையில் இந்த அற்புதமான நிதி நிலை அறிக்கை குறித்து பேச முன் வருகின்றேன்.

பிற்பகல் 12-10

நிர்வாகம் மக்களிடம் மிக நெருக்கமாக வரவேண்டுமென்ற எங்கள் இதய தெய்வத்தின் கொள்கைக்கிணங்க எங்கள் தென்னார்க்காடு மாவட்டத்தை இரண்டாக பிரித்து கடலூரைத் தலைமையிடமாகக் கொண்ட மாவட்டம் தென்னார்க்காடு மாவட்டம் என்றும், விழுப்புரத்தைத் தலைமையிடமாகக் கொண்ட அந்தப் புதிய மாவட்டத்திற்கு 'விழுப்புரம்—வள்ளலார் மாவட்டம்' என்றும் பெயரிட்டு செயல்பட இருப்பதை இந்த இயக்கம் கண்ட வள்ளலின் வாரிசாக விளங்கும் இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் கையால் இந்த ஆண்டே துவக்க வேண்டும் என்று எங்கள் மாவட்ட மக்களின் சார்பாக கோரிக்கையைப் பணிந்து சமர்ப்பிக்கின்றேன்.

'ஸ்காட்லாந்து யார்டு' காவல் துறைக்குச் சமமாக மதிக்கும் நமது காவல் துறைக்கு ரூ. 276·31 கோடி ஒதுக்கி சிறப்பாகச் செயல்பட நம்முடைய இதய தெய்வம் எடுத்த நிலைக்கு நான்

வணங்குகின்றேன். இதில் மற்றொரு சிறப்பு என்னவென்றால், காவலர் வீட்டு வசதி வாரியத்தை இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் புதுப்பித்து மேலும் இந்த ஆண்டே 1,000 வீடுகளைக் கட்டுவதற்கு ஆணை பிறப்பித்த இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களை மீண்டும் நான் வாழ்த்துகிறேன்.

'ஏர் ஓட்டம் நின்று விட்டால் நாட்டின் கார் ஓட்டம் என்ன ஆகும்' என்ற கேள்வியை நினைந்து, அந்தக் கேள்வியை மையமாகக் கருத்திற் கொண்டு, மறுமலர்ச்சி, வேளாண்மைத் துறைக்கு ரூ. 187.53 கோடி ரூபாயிலிருந்து வரும் ஆண்டிற்கு ரூ. 215.75 கோடி என்ற அளவிற்கு உயர்ந்திருப்பதை நினைத்துப் பார்த்து நான் அவர்களை வாயார, மனமார, வணங்கி வாழ்த்துகிறேன்.

வரும் ஆண்டில் எங்கள் தென்னார்க்காடு மாவட்டத்தில், ரூ. 5.13 கோடி மதிப்பீட்டுச் செலவில் தொழுதூர் பொறிமதகு திட்டம் மேற்கொள்ளப்படும் என்று அறிவித்த ஈகை மனம் கொண்ட இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களை வணங்குகின்றேன். இதற்கு மேலும் எங்களுடைய மாவட்டத்தில் திருக்கோவிலூர் அணைக்கட்டுப் பாசனத் திட்டம் தயாரிக்கப் பட்டு ஆய்வில் இருப்பதை நினைத்து நாங்கள் நெஞ்சார்க் கிறோம். இதையெல்லாம் நாங்கள் பாராட்டவில்லை என்றால், தென்னார்க்காடு மாவட்ட மக்கள் பாவிகளாகப் போய் விடுவோம் என்று கூறி, இதற்கெல்லாம் நன்றி கூறி, நான் இந்த நிதி நிலை அறிக்கையைப் பாராட்டுகிறேன்.

வனத் துறையின் வைரமாக விளங்கும் சந்தன மரத்தை சத்தம் இல்லாமல் கடத்தும் கொள்ளைக் கும்பலைக் கூண்டோடு ஒழிக்கும் நடவடிக்கைக்காக நவீன ஆயுதங்கள், துப்பாக்கிகள், செய்தி தொடர்புச் சாதனங்கள், மோட்டார் வண்டிகள் ஆகியவைகளை வாங்குவதுடன் குறிப்பாக, சந்தன மரக் கடத்தல் தொடர்பான குற்றங்களை விசாரிக்கக் கூடிய தனி நீதி மன்றம் ஒன்றை திருப்பத்தூரில் அமைக்க இருப்பதை நாங்கள் பாராட்டுகின்றோம். கடந்த ஒற்றைக்கண் உளுந்தர்கள் ஆட்சி யில் வேலியே பயிரை மேய்ந்த கதையாக அந்தச் சண்டாளர்கள் சந்தன மரக் கடத்தல் சாதனை படைத்ததை நினைத்துப் பார்த்து வியந்து இருக்கின்றோம்.

மீனவ நண்பர்களின் வாரிசு 'தான்' என்பதைக் தெரியப் படுத்தும் வகையில் டாக்டர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள், கட்டப்படும் 2,100 இலவச வீடுகளுடன் இந்த ஆண்டு 2,000 இலவச வீடுகளைக் கட்ட இருப்பதைக் கூறுவதுடன், கடலில் இறக்க நேரிடும் மீனவர்களுக்கு அவர்களது குடும்பங் களுக்கு இது வரை வழங்கி வந்த ரூ. 15,000-த்தை ரூ. 21,000 ஆக உயர்த்திக் கொடுத்ததை நினைத்து நாங்கள் பெருமைப் படுகிறோம் (மணியடிக்கப் பெற்றது);



கல்வித் துறையைப் பொறுத்த வரை இந்த அரசு முக்கியத் துவம் கொடுத்துள்ளது. அதுவும் குறிப்பாக, துவக்கப் பள்ளிக்கு முக்கியத்துவம் கொடுத்துள்ளதை நினைத்து நாங்கள் பாராட்டுகின்றோம்.

பிற்பகல் 12-15;

இந்த நேரத்தில் என்னுடைய தொகுதியினுடைய நிலைக்கு நான் வருகிறேன். என்னுடைய தொகுதியில் கூட்டுறவு சர்க் கரை ஆலை என்று அதாவது கள்ளக்குறிச்சி நம்பர் 2 என்று ஒரு சர்க்கரை ஆலை துவங்கப்பட இருக்கிறது. அந்த ஆலைக் காகக் கிட்டத்தட்ட 100 ஏக்கர் நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டு விட்டது. அந்த சர்க்கரை ஆலையை இந்த நிதிநிலை ஆண்டி லேயே துவக்க வேண்டுமென்று நான் பணிவன்போடு இதய தெய்வம் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலமாக அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள ரூபாய் 6.14 கோடி செலவில் கூட் டுக் குடிநீர்த்திட்டம் ஒன்று அரசிடம் இருக்கிறது. அந்தத் திட்டத்தை இந்த ஆண்டு எடுத்துக்கொண்டால் வறட்சியாலும் குடிநீர்ப் பஞ்சத்தாலும் வாடுகின்ற சின்னசேலம் மக்களைக் காப்பாற்ற முடியும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து என்னுடைய தொகுதியில் கல்லூரி இல்லாமல் இருப் பதையும், கள்ளக்குறிச்சி நகரத்தில் மாற்றுப் பாதை அமைக்க வேண்டும் என்பதையும் நான் இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன். இவைகளைச் செய்து தரும்படி கேட்டு நன்றி கூறி அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. தேனி பன்னீர்செல்வம்.

*திரு. தேனி பன்னீர்செல்வம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் நடைபெற்றுக் கொண்டிருக்கிற நிதிநிலை அறிக்கையின் மீது கலந்து பேசுகிற வாய்ப்பினைத் தந்தமைக்காக என்னுடைய இதயம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த நிதிநிலை அறிக் கையைப் பற்றி பல்வேறு உறுப்பினர்களும் இங்கே பல கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள். அதிலே இந்த நிதி நிலை அறிக்கையினுடைய முக்கியத்துவத்தைக் குறித்து இந்த அவையிலே இருக்கக் கூடிய பல்வேறு உறுப்பினர்களும் தெரி வித்திருக்கக்கூடிய நல்ல கருத்துக்களோடு என்னுடைய இதயம் நிறைந்த நல்வாழ்த்துக்களையும், கருத்துக்களையும் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றைய அரசியல் சூழ்நிலையில் அமைதியாக இருந்த தமிழகத்தை, அமைதிப் பூங்காவாக இருந்த தமிழகத்தை அவலமான நிலைக்கு ஆளாக்கியதற்குப் பிறகு, பல்வேறு சிரமமான மாறுபட்ட சூழ்நிலைக்குப் பிறகு இந்த அரசு அமைந்து, தமிழகத்தினுடைய அலங்கோலமான, அவலமான ஆட்சியை மாற்றுகிற முயற்சியில் நம்முடைய இதயதெய்வம் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் வெற்றிமேல் வெற்றியைப் பெற்றுக்கொண்டு இருக்கிறார்கள். அந்த வகையில் இப்படிப்பட்ட ஒரு நிதிநிலை அறிக்கை இன்றைக்கு அமைந்திருக்கின்றது. அனைத்துத் தரப்பு மக்களின் எதிர்பார்ப்புகளையும் தீர்த்து வைக்கக்கூடிய அளவுக்கு பல்வேறு தரப்பட்ட மக்களின் கருத்துக்களையும் புரிந்து, அவர்களுக்காக நல்லபல காரியங்களைச் செய்யக்கூடிய அளவுக்கு இந்த நிதிநிலை அறிக்கையில் பல்வேறு விஷயங்கள் குறித்துச் சொல்லப்பட்டிருக்கிறது. குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமென்றால் இந்த நிதிநிலை அறிக்கை பாலைவனத்தில் பயணம் செய்யக்கூடியவர்களுக்கு அவர்களுடைய கண்களுக்குத் தெரிகிற பசும் சோலைவனமாகத்தான் இந்த நிதிநிலை அறிக்கை தென்படுகிறது. அந்த வகையில் இந்த நிதிநிலை அறிக்கையின் மூலமும் அரசின் பல்வேறு நடவடிக்கைகளின் மூலமும் இன்றைக்கு தமிழக அரசியலில் மிகச் சிறந்த இடத்தை நமது இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் பெற்றிருக்கிறார்கள்.

பொதுவாக தமிழக அரசியலில் இடம் பெறுவது அரிசியியல் என்று சொல்வார்கள். அந்த அரிசியியல் இன்றைக்கு எவ்வளவு பக்குவமாக, மிகவும் சிறப்பாகக் கையாளப்பட்டிருக்கிறது என்பதைநான் இங்கே சுட்டிக்காட்டி, அதைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இன்றைக்கு தமிழகம் முழுவதையும் ஒரே உணவு மண்டலமாக மாற்றி நெல் அரிசி, நடமாட்டத்தைப் பொறுத்தவரையில் தமிழகத்தில் எங்கு வேண்டுமானாலும் கொண்டு செல்லலாம் என்கிற ஒரு தைரியமான முடிவை நமது இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் அறிவித்ததன் காரணமாக இன்றைக்கு பரவலாக தமிழகத்தில் எல்லா நகரங்களிலும், கிராமப் பகுதிகளிலும் அரிசி விலை குறைந்திருக்கிறது. ஏறக்குறைய 15 நாட்களுக்கு முன்னால் இருந்த விலையோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது எங்களுடைய மதுரை மாவட்டத்தில் குறிப்பாக தேனி போன்ற பெரிய நகரங்களில் அரிசி விலை குவிண்டாலுக்கு 150 ரூபாயிலிருந்து 200 ரூபாய் வரை குறைந்திருக்கிறது. இந்த மிகப் பெரிய சாதனை நம்முடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய தைரியமான நடவடிக்கைக்குக் கிடைத்த மிகப்பெரிய வெற்றியாகும். இதன்மூலம் சாதாரண ஏழை எளிய மக்கள், அன்றாடம் அரிசி வாங்கிச் சாப்பிடும் குடும்பத்தைச் சேர்ந்தவர்களைப் பொறுத்தவரையில் ஒரு குடும்பத்திற்கு ஒரு நாளைக்கு ஒரு கிலோ அரிசி என்று வைத்துக்கொண்டாலும் வெளிச்சந்தையில் மூன்று வேளைக்கும் 3 கிலோ அரிசி வாங்கும்போது ஒரு நாளில் 6 ரூபாயிலிருந்து 8 ரூபாய் வரையில் மிச்சம் கிடைக்கிறது.



இப்படி ஒரு நல்ல காரியத்தை நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள் இன்றைக்குச் செய்து தந்திருக்கிறார்கள். இன்றைக்கு உணவுப் பொருட்கள் நடமாட்டம் ஒரே மண்டலமாக, தமிழ்நாடு முழுவதும் இருக்கலாம் என்கின்ற அறிவிப்பை செய்ததன் மூலம் பல இடங்களில் அரிசி விலையும் நெல் விலையும் சரியத் தொடங்கி இருக்கின்றது. ஆனால் இதே நிலைமை, சில ஆண்டுகளுக்கு முன்னால், அப்போது இருந்து திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் ஒரே உணவு மண்டலமாக ஆக்க வேண்டும் என்று முடிவெடுத்து, அன்றைய ஆட்சியாளர்கள் செய்ததன் மூலமாக தமிழ்நாட்டிலே இருந்த அரிசி நெல் அனைத்தும் வெளி மாநிலங்களுக்குக் கடத்தப்பட்டு, அதன் மூலம் ஒரு செயற்கையான உணவுப்பஞ்சம் தமிழ் நாட்டிலே ஏற்பட்டதை இந்த மாமன்றத்திலே உள்ள அனைத்து உறுப்பினர்களும் நன்கு அறிவார்கள். ஆனால் அப்படிப்பட்ட ஆபத்தான நிலைமை இந்த முறையும் வரும் என்று அரசு அதிகாரிகள் தரப்பிலே எச்சரிக்கை விடப்பட்டிருந்தும் கூட, நம்முடைய முதலமைச்சர் அவர்களுடைய நிர்வாகத் திறமையின் காரணமாக, நம்முடைய முதலமைச்சருடைய நம்பிக்கையின் காரணமாக, இன்றைக்கு எல்லை ஓர சோதனைச் சாவடிகளை எல்லாம் இறுக்கி, நல்ல முறையிலே பராமரிக்கப்பட்டு வருவதால் உணவுக் கொள்கையிலே நமது அரசுக்கு மிகப்பெரிய வெற்றி கிடைத்திருக்கிறது. எனவே அந்த வகையிலே இன்றைக்கு அரிசி. விலையும் நெல்விலையும் குறைவதற்குக் காரணமாக இருந்த நம்முடைய இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களுக்கும் மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்களுக்கும் இந்த அவையின் சார்பிலே என்னுடைய இதயம் கனிந்த நன்றியையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல இன்றைக்கு ஏழையெளிய மக்கள், குறிப்பாக தாய்மார்கள் உபயோகிக்கின்ற அன்றாடச் சமையல் பொருள்கள் மலிவு விலையிலேயே பல்வேறு அங்காடிகளிலே கிடைத்துக் கொண்டிருக்கின்றன. ஏறி வருகின்ற விலைவாசி உயர்வோடு, தொடர்ந்து விலையேற்றம் ஏற்பட்டு, அதன் மூலம் மக்களுக்கு பல சிரமங்கள் ஏற்படுகின்றதைத் தவிர்க்கின்ற வகையிலே இந்த விலைவாசி உயர்வு நேரத்திலே ஒரு பிரேக் போடுவதைப் போல எப்படிச் சாலையிலே, நெடுஞ்சாலையிலே வேகமாக செல்லக்கூடிய அவர்களுக்கு சாலைத் தடுப்பு இருந்தால் அந்த சாலைத் தடுப்பின் மூலம் அந்த வேகம் குறைந்து அங்கே மீண்டும் ஒரு தேக்க நிலை ஏற்படுமோ. அதே போல இந்த விலைவாசி ஏற்றம் ஒரு பக்கம் அனைத்து தரப்பிலே ஏறிக்கொண்டே இருந்த ஒரு நிலையில், பல மளிகைப் பொருள்களுக்கு வரி விலக்கு அளித்து, வரிவிதிப்பைக் குறைத்து பல்வேறு சலுகைகளை இன்றைக்குச் செய்திருக்கிறார்கள், இதன் மூலம் சாதாரணமாக அன்றாடம் வாங்கிச் சாப்பிடக்கூடிய, சாதாரண ஏழைக் கூலி தொழிலாளர்கள் எல்லாம், விவசாயத் தொழிலாளர்கள் எல்லாம்

இன்றைக்கு ஓரளவுக்கு இதன் மூலம் பல சலுகைகளையும் நன்மை
களையும் அடைந்து கொண்டிருக்கிறார்கள். எனவே அந்த
வகையிலேயும் இந்த நிதிநிலை அறிக்கையையும் நான் பாராட்டக்
கடமைப்பட்டிருக்கிறேன். இதற்கு முந்தைய ஆட்சியாளர்கள்
குறிப்பாக திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த முன்னாள்
முதலமைச்சர் அவர்கள் இந்த பட்ஜெட்டைப் பற்றி சொல்லும்
போது 'அரை வேக்காட்டு சமையல்' என்று சொல்லியிருக்கிறார்
கள், 'அரை வேக்காட்டு சமையல்' என்று இந்த பட்ஜெட்டைப்
பற்றி சொல்வதற்கு அவர்களுக்கு எந்தவிதமான யோக்கியதை
யும் இல்லை, ஏனென்றால் சாதாரண ஏழையெளிய மக்களை
மனதிலே கொண்டு இந்த நிதிநிலை அறிக்கைத் தயாரிக்கப்பட்டி
ருக்கிறது. அவைகளை கோபாலபுரத்திலே இருக்கக்கூடிய கோ
மான்களுக்கும் சென்னை நகரத்தினுடைய சீமான்களிலே ஒரு
வராக இருந்து கொண்டு இருக்கக்கூடிய அவர்களுடைய குடும்
பத்தாரையும் எண்ணி இந்த நிதி நிலை அறிக்கை தயாரிக்கப்பட
வில்லை, சாதாரண ஏழையெளிய மக்கள் நிச்சயமாக உள்ளப்
பூர்வமாக பாராட்டுகிறார்கள், அந்த அளவுக்கு இந்த நிதி
நிலை அறிக்கையிலே பல்வேறு நல்ல கருத்துக்களைச் சொல்லி
யிருக்கின்றார்கள்.

அதே நேரத்தில் தன்னுடைய மக்களுக்கு தான் கொடுத்த
வாக்குறுதிகளை நிறைவேற்றுகின்ற நல்ல நோக்கத்தோடு மாண்
புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி
அவர்கள் தான் ஏற்கனவே போட்டியிட்டு வெற்றி பெற்ற என்
னுடைய போடித் தொகுதி மக்களுக்கு 3 ஆண்டுகளுக்கு முன்னால்
கொடுத்த வாக்குறுதியை இன்றைக்கு நிறைவுபடுத்தி அந்த
நிறைவேற்றுகின்ற வகையில் 18-ம் கால்வாய்த் திட்டம் என்ற
அந்த மாபெரும் திட்டத்தை. கடந்த 30, 40 ஆண்டுக்காலமாக
கனவாகவே இருந்த அந்தத் திட்டத்தை இன்றைக்கு நிறைவேற்
றுவதற்கு இந்த நிதிநிலை அறிக்கையிலே வழிவகை செய்து தந்
திருக்கிறார்கள் என்பதை அறிந்து நன்றி உணர்வோடு அந்தத்
தொகுதி மக்கள் சார்பிலே என்னுடைய இதய தெய்வம் மாண்பு
மிகு புரட்சித் தலைவி அவர்களை நான் இந்த நேரத்தில்
பாராட்டி என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்ளக்
கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல இன்றைக்கு அரசு ஊழியர்களுக்கு இருக்கக்
கூடிய பல்வேறு பிரச்சினைகளை ஒவ்வொன்றாக களைந்து ஒரு
சிறப்பான சீரான நிர்வாகத்தைத் தமிழகத்திற்குத் தந்து இருக்
கிறார்கள். இதிலே ஏழை மக்களுடைய பல்வேறு பிரச்சினை
களை நிறைவேற்றுவதன் மூலம் சட்டம் ஒழுங்கை நல்ல முறை
யிலே பராமரிப்பதன் மூலமாகவும் முக்கிய பொறுப்பை வகித்துச்
செல்லக் கூடிய அரசு அலுவலர்களை எல்லாம் அழைத்து அவர்
களுடைய குறைபாடுகளை எல்லாம் கேட்டு அவர்களுடைய பிரச்
சினைகளுக்கும் உரிய முறையிலே அதற்கு நல்ல ஒரு சூழ்நிலை
[illegible] தீர்வினைக் காண்போம் என்ற நல்ல சூழ்நிலையை



உருவாக்கியிருக்கிறார்கள். அந்த வகையிலே நம்முடைய அரசு
ஊழியர்கள் சார்பிலே மாண்புமிகு தமிழக முதல்வர், புரட்
சித் தலைவி அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவிக்க
கடமைப்பட்டிருக்கிறேன்,

பிற்பகல் 12-25

அதேபோல என்னுடைய தொகுதியைப் பற்றி ஒரே ஒரு
கருத்து. நான் என்னுடைய கருத்தை ஏற்கனவே பட்ஜெட் கருத்து
விவாதத்தின்போது சொல்லியிருக்கிறேன், அதாவது என்
னுடைய தொகுதியில் குடிதண்ணீர் பிரச்சினை இருக்கிறது.
வறட்சி எங்களுடைய மதுரை மாவட்டத்திலே துவங்கிவிட்டது
என்று ஆளுநர் உரையிலேயே பேசியிருக்கிறேன், அதை மீண்
டும் உறுதிப்படுத்துகின்ற வகையில் பல்வேறு சம்பவங்கள்
கடந்த வாரத்தில் என்னுடைய தொகுதியில் நடைபெற்றுவிட்
டன, குடிதண்ணீர் பிரச்சினையைப் பொறுத்தவரையில் பூதிப்
புரம் என்கின்ற பேரூராட்சியில் குடிதண்ணீர் பிரச்சினை இருப்பது
குறித்து பல்வேறு சந்தர்ப்பங்களில் இந்த அவையின் மூலமாக
வும், மாண்புமிகு அமைச்சரின் மூலமாகவும் அரசின் கவனத்
திற்கு கொண்டு வந்திருக்கிறேன். சென்ற பட்ஜெட் கூட்டத்
தொடரின்போது கூட ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானத்தின்
மூலம் இந்த அவையின் கவனத்திற்கு கொண்டுவந்திருக்கிறேன்.
ஆனால் உரிய நேரத்தில் அது பரிசீலிக்கப்படாமல் போய்விட்ட
காரணத்தினால், அதன்மீது அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்
கிறது என்று பொதுமக்களுக்குத் தெரிவிக்கப்படாத காரணத்
தால் பொதுமக்கள் கூடி சாலை மறியல் போராட்டம் நடத்த
வேண்டிய அவல நிலை ஏற்பட்டு அதற்குப் பிறகு இப்போது
அந்தத் திட்டம் பற்றி அறிவிக்கப்பட்டிருக்கிறது. இருந்த
போதிலும் அந்தப் போராட்டம் நியாயமான போராட்டம்.
அந்த நியாயமானப் போராட்டத்தில் கலந்துகொண்ட பொது
மக்கள் 60 பேர் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள், அவர்கள்
எல்லாம் நியாயமான உணர்வோடு போராட்டம் நடத்தியவர்
கள் என்கின்ற காரணத்தினால் அவர்கள் மீது உள்ள வழக்கு
களை வாபஸ் பெற்று அவர்களை விடுதலை செய்யவேண்டு
மென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன் (மணியடிக்கப் பெற்
றது).

அதுபோல என்னுடைய தொகுதியில் இருக்கக்கூடிய சங்கரா
புரம். சின்னமனூர். ஒன்றியப் பகுதியாகிய சங்கராபுரத்தைச்
சுற்றியுள்ள கிராமங்களிலும். அதுபோல உத்தமபாளையத்தில்
இருக்கக்கூடிய மேட்டுப்பட்டி முதல் லெட்சுமி நாயக்கன்பட்டி
வரை உள்ள பகுதிகளில் பல்வேறு கிராமங்களில் கடுமையான குடி
தண்ணீர் தட்டுப்பாடு இருக்கிறது, எதற்கு எடுத்தாலும் சாலை
மறியல் செய்வோம், குறிப்பாக குடிதண்ணீர் எந்த ஊரிலாவது
இல்லையென்றாலும் கட்டாயம் சாலை மறியல் செய்வோம்
என்கின்ற ஒரு நிலைமைக்கு பொதுமக்கள் சென்றுவிட்டார்கள்.

[திரு. தேனி பன்னீர்செல்வம்] [1992 மார்ச் 10

எனவே அரசு விரைந்து நடவடிக்கை எடுத்து, குடிதண்ணீர் தட்டுப்பாட்டினைத் தீர்ப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் பணிவோடு கேட்டு அமர்கிறேன், நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: டாக்டர் மு. அம்மமுத்து பிள்ளை.

டாக்டர் மு. அம்மமுத்து பிள்ளை: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களே, இந்த மாமன்றத்தில் 1992—93 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையின் மீது பேசுவதற்கு வாய்ப்பினை நல்கியதற்கு எனது நன்றியினை காணிக்கையாக்குகின்றேன். 1991 டிசம்பரில் நடைபெற்ற தேசிய வளர்ச்சி மன்றக் கூட்டத்தில் மாண்புமிகு முதல் அமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஏழையெளிய மக்கள், வசதி வாய்ப்பற்றவர்கள் ஆகியோரது தேவைகளுக்குக் கவனம் செலுத்த வேண்டும் என்றும் பண வீக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்கு முன்னுரிமை அளிக்க வேண்டுமென்றும் மத்திய அரசுக்கு வேண்டுகோள் விடுத்தது பாராட்டத்தக்கதாகும்.

ஏழையெளிய வசதி வாய்ப்பற்ற மக்களின் வாழ்க்கைத்தரம் காக்கப்படுவதற்கு எல்லா நடவடிக்கைகளும் மேற்கொண்டுள்ள இந்த அரசைப் பாராட்டாமல் இருக்க முடியாது. உண்ண உணவு உடுக்க உடை, உறைவிடம் இம்மூன்றும் பாமர ஏழை மக்களின் அடிப்படைத் தேவைகளாகும். அதன் அடிப்படையில்தான் ஏழை மக்களின் குழந்தைகளுக்காக அமைந்துள்ள சத்துணவுத் திட்டம். உடுக்க உடை கொடுக்க வேண்டும் என்பதன் அடிப்படையில்தான் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் பொங்கல் திருநாள் அன்று இலவச வேஷ்டி, சேலையை ஏழையெளிய மக்களுக்கு வழங்கினார்கள். குறிப்பாக, வறுமைக்கோட்டிற்கு கீழ் வாழும் ஆதி திராவிட மக்களுக்கும், மீனவ சமுதாய மக்களுக்கும் அவர்களுடைய நலன் கருதி இலவச வீடு கட்டிக்கொடுக்கும் திட்டம் பாராட்டத்தக்கதாகும்.

அடுத்து, இந்த அரசு 1991 ஆம் ஆண்டு பொது விநியோக முறையின்மூலம் 17.31 இலட்சம் டன் அரிசி வழங்கியுள்ளது பாராட்டத்தக்கது. பொது விநியோக முறையில் இந்திய துணைக் கண்டத்தில் தமிழகத்தில்தான் அரிசியின் விலை தொடர்ந்து மிகக் குறைவாக உள்ளது. மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவியின் தனிப்பட்ட தீவிர முயற்சியால் தமிழகத்திற்கு 18,000 டன் பாமாயில் இறக்குமதி செய்யப்பட்டு, விநியோகம் செய்யப்பட்டது.

மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் பதவியேற்றபோது திட்டத்திற்கு ஒதுக்க வேண்டிய பணம் ரூ. 1,600 கோடி, ஆனால் நிதி பற்றாக்குறையோ சுமார் 1,220 கோடி ரூபாயாக இருந்தது



1992 மார்ச் 10] [டாக்டர் மு. அம்மமுத்து பிள்ளை]

மிகக் கடுமையான நிதி நெருக்கடி நிலைமையை சமாளிப்பதில் இவ்வரசு குறிப்பிடத்தக்க சாதனைப் புரிந்துள்ளது என்று சொன்னால் மிகையாகாது.

மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் 1992—93 ஆம் வருடத்திற்கு அதிகத் திட்ட ஒதுக்கீடு வேண்டுமென்ற நியாயமான கோரிக்கையை மத்திய திட்டக் குழுவிற்கு சமர்ப்பித்து 1992—93-ஆம் ஆண்டிற்கு மத்திய திட்டக் குழுவால் ரூ. 1,751 கோடி அளவிற்கு பெற்றுக் கொடுத்ததற்கு அவர்களுக்கு எனது நன்றியினையும், பாராட்டுதலையும் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

பிற்பகல் 12-30

காவலர் வீட்டு வசதி வாரியம் மூலமாகக் காவல் படைக்காக கூடுதல் 1000 குடியிருப்புகள் கட்டப்படும் என அறிவித்திருப்பது பாராட்டத்தக்கது.

நிரந்தரமான தரிசு மற்றும் கரம்பு நிலங்கள் சாகுபடியின் கீழ் கொண்டு வருவதற்காக வரும் ஆண்டில் ரூ. 75 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் 12,500 ஏக்கர் நிலங்கள் பயன்பெறும் வகையில் அமைக்கப்பட்ட திட்டம் வரவேற்கத்தக்கதாகும். தமிழகம் பசுமைப் புரட்சி காண்பதற்கு இது ஒரு வித்தாக அமைகிறது. டேனிடா நிதி உதவியுடன் கூடிய வேளாண்மைத் தொழிலில் மகளிர்க்குப் பயிற்சி அளிக்கும் திட்டம் மூலம் 6 மாவட்டங்களில் ஆண்டொன்றுக்கு 9,000 பேர்களுக்குப் பயிற்சி அளிக்கும் திட்டம் வரவேற்கத்தக்க திட்டமாகும். அதில் குமரி மாவட்டத்தையும் சேர்த்ததற்கு குமரி மாவட்ட மக்களின் சார்பாக நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். குமரி மாவட்டத்தில் கன்னியாகுமரி தொகுதியில் மகளிர்க்குப் பயிற்சி அளிப்பதற்கு இடவசதியும், போதுமான விவசாயம் செய்வதற்கு வேண்டிய நிலமும் தமிழக அரசின் கீழ் செயல்படும் திருப்பதிசாரம் வேளாண்மை விவசாயப் பண்ணை பள்ளி எனது தொகுதியில் உள்ளது. அப்பள்ளியில் பயிற்சி அளிப்பதற்கு வசதியாக இருக்கும் என்பதனை இம்மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் குமரி மாவட்டத்தில் ஒரு விவசாயக் கல்லூரி தொடங்குவதற்கு மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் அனுமதி வழங்க வேண்டுமென்று மெத்தப் பணிவோடு வேண்டுகிறேன்.

பாமாயில் எண்ணெயை உற்பத்தி செய்ய தமிழகத்தில் எண்ணெய் தரும் பனை மரங்களை வளர்ப்பதற்கு 24.69 கோடி ரூபாய் செலவில் ஒரு திட்டம் மேற்கொள்ள இருப்பது பாராட்டத்தக்கதாகும்.

[டாக்டர் மு. அம்மமுத்து பிள்ளை] [1992 மார்ச் 10

ஏரிகளை நவீனமயமாக்கும் திட்டத்தின் கீழ் இந்த நிதி ஆண்டுக்கு 19 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது பாராட்டத்தக்கதாகும். எனது தொகுதியில் கடுக்கரை மூக் குத்தி அணையில் இருந்து உருவாகும் கஞ்சிப்பாறை அலத் துறை ஆறு கால்வாய் மூலம் 9 பாசனக் குளங்கள் முறையே கேசவநேரி, தெள்ளாந்தி, தென்பாறை, பள்ளகுளம், சீதப்பால் குளம், மாடக் குளம், பூலங்குளி குளம், கொள்ளுளிகுளம், புலி யூர் குறிச்சி குளம் ஆகிய குளங்கள் மற்றும் கால்வாய்கள் தூர் எடுக்கப்படாமல் இருப்பதால் சுமார் 1,700 ஏக்கர் நஞ்சை நிலம் விவசாயம் பாதிக்கப்படுகிறது என்று தெரிவித்து, இவற்றை உடனடியாகச் செப்பனிட்டுத் தருமாறு கேட்டுக் கொள்கிறேன்.

1992–93 ஆம் ஆண்டில் 15.88 கோடி செலவில் ஆழ்கடல் மீன்ளத் திட்டம் தமிழ்நாடு மீனளக் கூட்டுறவு இணையம் மூலம் செயல்படுத்தப்படும் திட்டம் பாராட்டத்தக்கதாகும். 34 கட லோரக் கிராமங்களில் வசிக்கின்ற 6,050 மீனவர்களுக்கு மீன் பிடி படகுகள், வலைகள், படகில் பொருத்தப்படும் என்ஜின்கள் வழங்கப்படும் என்று நிதிநிலை அறிக்கையில் கூறியிருப்பது பாராட்டத்தக்கதாகும். இத்திட்டத்தின் கீழ் கன்னியாகுமரி தொகுதியில் வாழ்கின்ற மீனவ மக்கள் வாழும் கிராமங்களான முட்டம், கன்னியாகுமரி, ஆரோக்கியபுரம், கோவளம் ஆகிய கிராமங்களுக்கும் பயன் கிடைக்கும் என நான் கருதுகிறேன்.

மீனவ மக்களுக்கு 3.46 கோடி செலவில் 2,100 இலவச வீடுகள் கட்டும் திட்டம் பாராட்டத்தக்கதாகும். இதுகாறும் இதற்கு முந்தைய அரசு மீனவர்கள் மீன் பிடிக்கச் செல்லும்போது கட லில் இறக்க நேரிட்டால் அம்மக்களுக்குக் குடும்ப ஈட்டுறுதித் திட்டத்தின்கீழ் வழங்கப்படும் தொகையான 15,000 ரூபாயை 21,000 ரூபாய் என உயர்த்தப்பட்டதற்கு ஏழை எளிய மீனவ மக்கள் இந்த அரசை வாழ்த்தி, வணங்குகிறார்கள். மீனவ மக் களுக்குத் தொழில் இல்லாத காலங்களில் ஊதியமாக இதுவரை வழங்கப்பட்ட பணம் மாதம் 60 ரூபாய். அதை மாதம் 270 ரூபாயாக உயர்த்தியதற்கு இந்த அரசை மனமாரப் பாராட்டு கிறேன்.

தொழிலாளர் நலனில் அக்கறை கொண்டு மூடிக் கிடந்த ஸ்டாண்டர்டு மோட்டார் தொழிற்சாலை டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் தீவிர முயற்சி காரணமாக மீண்டும் தொடங்கப்பட்டு செயல்பட்டு வருவதைப் பாராட்டி, போற்ற வேண்டியது நமது கடமையாகும்.

ஒரு லட்சம் மகளிர்க்கு சுயவேலை வாய்ப்பு அளிக்க ஒருங் கிணைந்த மகளிர் மேம்பாட்டுத் திட்டம் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களால் ஆரம்பிக்கப்பட்டு செயல்படுகிறது.



1992 மார்ச் 10] [டாக்டர் மு. அம்மமுத்து பிள்ளை]

ஆதிதிராவிடர் பழங்குடியினர் நலனுக்காக 10 அம்சத் திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும் என அறிவித்ததும், நடப்பு நிதியாண்டில் 30 புதிய மாணவர் இல்லங்கள் தொடங்கப்படும் என அறிவித்ததும் ஆதிதிராவிடர், பழங்குடி மக்கள் நல்வாழ்வில் தமிழக அரசு கொண்டுள்ள அக்கறையை உறுதிப்படுத்துகிறது.

மேலும், ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்., பயிற்சிக்கு படிப்பில் சிறந்த மாணவர்களுக்கும் தனியார் பயிற்சி நிலையங்களில் பயிற்சி அளிக்கும் திட்டம் பிற்படுத்தப்பட்டோர் வாழ்வு நலம்பெற வழி வகுக்கிறது. வாடகைச் சீருந்துகளுக்கு 15 சதவீத விற்பனை வரியிலிருந்து 5 சத வீத விற்பனை வரி யாகக் குறைத்தது பாராட்டத்தக்கதாகும்.

வரும் நிதி ஆண்டில் 20 உயர்நிலைப் பள்ளிகள், 10 மேல் நிலைப் பள்ளிகள் தொடங்கப்படும் எனக் கூறப்பட்டுள்ளது. கன்னியாகுமரி தொகுதியில் தோவாளை ஊராட்சி ஒன்றியத் திற்கு உட்பட்ட திட்டுவிளை பகுதியில் அரசு உயர்நிலைப் பள்ளி உள்ளது. அப்பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக உயர்த்திட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அகஸ்தீஸ் வரம் ஊராட்சி ஒன்றியத்தில் வாரியூரில் அரசு நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக உயர்த்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். எனது தொகுதியில் உள்ள கோட்டார் பகுதியில் சார் பதிவாளர் அலுவலகம் கட்டிடம் கட்ட நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-35

5,000-க்கு மேல் மக்கள் தொகை கொண்டுள்ள ஒவ்வொரு கிராமத்திலும் ஒரு பொது நூலகம் ஏற்படுத்தப்படும் என்ற திட்டம் நல்லதொரு திட்டமாகும். இத்திட்டத்தின் மூலம் 625 கிராமங்கள் பயன்பெறுகின்றன. 300 பகுதி நேர நூலகங்கள் ஏற்படுத்தப்படுமென்ற திட்டம் ஏழை எளிய மக்கள் பயன்பெறும் அளவுக்கு வசதியாக உள்ளது. குமரி மாவட்ட மைய நூலகம் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை நூலகம்—போதிய இடம் இல்லாததால் அங்கே நூல்கள் எல்லாம் கீழே வைக்கப்பட்டுள்ளன. மாவட்ட மைய நூலகம் விஸ்தீரணம் செய்ய புதிய கட்டிடம் கட்டித்தர மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அவர்களைப் பணிவோடு வேண்டுகிறேன்.

சுற்றுலா மையமான கன்னியாகுமரியில் பொது நூலகக் கிளை இல்லை. உடனடியாக ஒரு கிளை நூலகம் திறக்க அனுமதி வழங்க பணிவோடு வேண்டுகிறேன். நிதிநிலை அறிக்கையில் 300 பகுதி நேர நூலகங்கள் திறக்கப்படும் என குறிப்பிடப்பட்டுள்ளது. கன்னியாகுமரி மாவட்டத்தில், கடுக் கரை, காட்டுப்புதூர், அருமநல்லூர், தேர்வாளை, வீர நாராயணபுரம், அழகியபாண்டிபுரம், சுசீந்திரம், இரட்டை

[டாக்டர் மு. அம்மமுத்து பிள்ளை] [1992 மார்ச் 10

குளம், கொட்டாரம், அஞ்சுகிராமம், மைலாடி, முகிலன் குடியிருப்பு, சாமிதோப்பு, திட்டுவிளை, வடக்கு தாமரைக் குளம், தாழக்குடி, ஆகிய பகுதிகளில் பகுதி நேர நூலகங்கள் திறக்க மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அவர் களிடம் பணிவோடு கோரிக்கையை சமர்ப்பித்துக் கொள் கிறேன்.

புரட்சித்தலைவி மருத்துவ நலத்திட்டத்தின் மூலம் மொத்தம் 10,000 முகாம்கள் அமைக்கும் திட்டம், தமிழ்நாடு முழுவதும் ஏழை எளிய மக்களுக்கு நலன் பயப்பதாகும். மக் களிடத்திலே சென்று நோய்களைக் கண்டறிந்து வசதிகளைச் செய்யும் திட்டம் நடைபெற்று வருகிறது என்று கூறிக்கொண்டு 32 படுக்கைகள் கொண்ட 14 வட்ட மருத்துவமனைகள், ரூபாய் ஒன்றரைக் கோடி செலவில் அமைக்கப்படும் என்ற திட் டத்தை அறிவித்திருப்பதையும் பாராட்டுகிறேன். அந்தத் திட்டத்தின்கீழ் எனது தொகுதியில் கன்னியாகுமரி, கொட் டாரம், ஆரல்வாய்மொழி, பூதப்பாண்டி ஆகிய இடங்களில் இந்த வட்ட மருத்துவமனைகளை அமைத்துத் தருமாறு பணி வுடன் வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

ஏழை எளிய மக்களுக்கு விரிவுபடுத்தப்பட்ட மருத்துவத் திட்டம் பாராட்டத்தக்கது. இத்திட்டத்தின்கீழ் வறுமைக் கோட்டுக்குக் கீழ் வாழும் ஏழை எளிய மக்களுக்கு அறுவை சிகிச்சை செய்ய தனியார் மருத்துவமனைக்கு ரூ. 15,000 உதவித்தொகை அளிப்பதும் பாராட்டத்தக்கதாகும்.

சிறப்புத் தன்னிறைவுத் திட்டத்தின்கீழும் ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்துக்கும் ரூ. 1 கோடி வழங்க திட்டமிடப் பட்டுள்ளது பாராட்டத்தக்கது. மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் எனது தொகுதியில் ஆரல்வாய்மொழி பகுதியில் ஒரு பஸ் ஸ்டாண்டும், தீயணைப்பு நிலையமும், தடிக்காரன்கோணம், தாழக்குடி போன்ற பகுதியில் ஆரம்ப சுகாதார நிலையமும், தாழக்குடியில் காவல் நிலைய அவுட் போஸ்ட் நிலையம் ஒன்றும் நிறுவித்தர பணி வுடன் வேண்டிக் கொள்கிறேன்.

மக்களால் ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட இந்த அரசு மக்களுக்காக செயல்படும் என்பதையும், குறிப்பாக ஏழையெளிய மக்களின் இல்லங்களில் ஒளி விளக்கேற்றும் தெய்வமாக, எங்கள் இதயதெய்வம் தமிழகத்தின் நம்பிக்கை நட்சத்திரமாக விளங்கும் காவிரித்தாய், வாழ்நாள் முழுவதும் தமிழகத்தின் நிரந்தர முதல்வராக இருப்பார்கள் என்றும் வாழ்த்தி, வணங்கி, இந்த நாட்டு மக்களின் நலன் கருதி, அமைக்கப்பட்ட இந்த நிதி நிலை அறிக்கையில் பேசுவதற்கு வாய்ப்பை நல்கிய சட்டப்பேரவை துணைத் தலைவர் மற்றும் பேரவைத் தலைவர் அவர்களுக்கும் நன்றி கூறி, அமர்கிறேன்.



மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கே. கந்தசாமி.

திரு. கே. கந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் நகரை மாநகராட்சியாக ஆக்குவதற்கு ஏற்கெனவே பூர்வாங்க வேலைகள் நடைபெற்றுள்ளன. அதற்கு செயல்வடிவம் கொடுக்க இந்த நிதிநிலை அறிக்கையில் ஏதும் குறிப்பிடப்படவில்லை. நிதி நெருக்கடியின் காரணமாக இத்திட்டம் எடுத்துக் கொள்ளப்படவில்லையா? அல்லது திட்டம் கைவிடப்பட்டதா என்பதை அரசு தெளிவுபடுத்த வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

உரம் விலை ஏறியுள்ளது. போதுமான மழை இல்லாத காரணத்தால் விவசாயிகள் கூட்டுறவுக் கடன்களை திருப்பிச் செலுத்த முடியாமல் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இந்த நிலையில் கடந்த ஒரு வாரமாக சேலம் மாவட்டத்தில் விவசாயிகளிடத்தில் ஜப்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஜப்தி நடவடிக்கைகளைக் கைவிட்டு விவசாயி களின் பிரச்சினைகளை கேட்டறிய வேண்டும். குறுகியக் காலக் கடன்களை நீண்டகாலக் கடன்களாக மாற்றுதல், அசலை முழுமையாக திருப்பிச் செலுத்தியவர்களுக்கு வட்டியை தள்ளு படி செய்தல், போன்ற சலுகைகளை விவசாயிகளுக்கு அளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஆண்டுக்கு 3 லட்சம் ரூபாய்க்கு மேல் விற்பனை செய்யும் ஓட்டல்களில் சாப்பிடுகிறவர்கள் மீது 5 சதவீதம் வரி விதிக்க உத்தேசித்திருப்பதை மறுபரிசீலனை செய்யவேண்டும். ஏற் கெனவே ஓட்டல் பண்டங்கள் விலை அதிகமாக உள்ளது. இந்த வரி விதிப்பதன் மூலம் விலை மேலும் உயரும். அப்படி வசூலிக் கின்ற வரியையும் ஓட்டல் சொந்தக்காரர்கள் சரியாக அரசுக்கு செலுத்துவார்கள் என்று நிச்சயமாகச் சொல்ல முடியாது. எனவே இதுபற்றி அரசு பரிசீலிக்கவேண்டும். இந்த ஆண்டு நல்ல நெல் விளைச்சல் இருந்தும் அரிசி விலை குறையவில்லை. மாறாக அரிசி விலை ஏறியுள்ளது. வெளிமார்க்கெட் வியா பாரிகள் பிடியில் அரிசி விலை நிர்ணய அளவுகோல் இருப்பதாகத் தெரிகிறது. வெளிச்சந்தையில் அரிசி விலையைக் குறைப்போம் என்று வியாபாரிகள் அளித்த உறுதிமொழியின்படி அரிசி விலை குறையவில்லை என்பதை அரசு கவனத்தில் கொள்ள வேண்டும்.

பிற்பகல் 12-40

பொது விநியோக முறையில் நியாய விலைக் கடைகளில் கடந்த தி.மு.க. ஆட்சிக் காலத்தில் தி.மு.க. ஆதரவாளர் களை நியமனம் செய்து விநியோகத்தில் சரியான அளவு. எடை இல்லாத நிலையை ஏற்படுத்தினார்கள். நியாய விலைக் கடைகளில் ஆட்சி மாற்றம் ஏற்பட்ட பிறகும்கூட தி.மு.க.

ஆதிக்கம் இன்றும் இருக்கிறது, கூட்டுறவுத் தேர்தல் நடக்கும் வரை கூட்டுறவு இயக்கத்தில் ஊடுருவி இருக்கிற தி.மு.க. ஆதரவாளர்கள் மீது அரசு கவனமாக இருக்க வேண்டும். ஏனென்றால் இவர்கள் இந்த ஆட்சி மீது அதிருப்தி ஏற்பட வேண்டும் என்பதற்கு விநியோக முறையில் பல தில்லுமுல்லு களை செய்து வருகிறார்கள்.

'பிரி-ஸ்கூல் டிரெய்னிங்'—பயிற்சி பெற்ற ஆசிரியைகளுக்கு போதிய பயிற்சி பெறவில்லை என்று கூறி ஆசிரியர் நியமனம் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. ஓரே ஆசிரியர் பயிற்சி பள்ளியில் படித்த ஒருவர் தற்போது ஆசிரியையாக உள்ளார். அவரோடு படித்த இன்னொருவர் ஆசிரியையாக நியமனம் செய்யப்பட்டு பிறகு போதிய பயிற்சி பெறவில்லை என்று கூறி வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ளார், எனவே இது பற்றி அரசு சரியான உத்தரவை பிறப்பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன்.

ஊராட்சிகளிலும், பேரூராட்சிகளிலும் உள்ள துப்புறவு பணியாளர்களுக்கு கடந்த 6 மாதங்களாக சம்பளம் வழங்கப் பட வில்லை. கேட்டால் நிதியில்லை என்கிறார்கள், அவர் களுக்குச் சம்பளம் வழங்க அரசு முன் வர வேண்டும். பேரூராட்சி களில் உள்ள தெருவிளக்குகளுக்கு புதிய பல்புகள் வாங்குவதில் உள்ள நிர்வாகச் சிக்கலைத் தீர்க்க அரசு முன்வர வேண்டும். அரசு புதிய பல்புகளை வாங்க நிதி ஒதுக்கீடு செய்த பிறகும், எந்த கம்பெனி பல்புகளை வாங்க வேண்டுமென்று முடிவு செய்ய முடியாமல் அரசின் தாக்கீதுகளை கையில் வைத்துக் கொண்டு மாவட்ட பேரூராட்சி அதிகாரிகள் தலையைப் பிய்த்துக் கொண்டு இருக்கிறார்கள்.

தலைவாசல் தொகுதியில் கடந்த 20 ஆண்டுகளாக இல்லாத வகையில் இந்த ஆண்டு நல்ல மழை பெய்துள்ளது. பலத்த மழை பெய்ததன் காரணமாக பல ஆயிரம் ஏக்கர் நிலத்தில் விளைந்திருந்த நெல், குச்சிக் கிழங்கு, பருத்தி போன்ற பயிர்கள் வெள்ளத்தால் அடித்துச் செல்லப்பட்டுள்ளன. பாலங் கள், பாதைகளுக்கு சேதம் ஏற்பட்டுள்ளது. பழுதடைந்த பாதைகளைச் சீரமைக்க பல கோடி ரூபாய் ஒதுக்கினாலும் போதாது என்ற நிலையில் சேலம் மாவட்டம் முழுவதிலும் வெள்ளத்தினால் பழுதடைந்த பாதைகளைச் சீரமைக்க அரசு எட்டேகால் இலட்சம் ரூபாய் மட்டும் ஒதுக்கியிருப்பது 'யானைப் பசிக்கு சோளப் பொறி கொடுத்தது' போல உள்ளது.

சேலம் மாவட்டம் முழுவதிலும் 87 கோடி ரூபாய் மதிப் புள்ள பயிர்கள், விவசாய பம்பு செட்டுகள் வெள்ளத்தால் அடித்துச் செல்லப்பட்டுள்ளதாக வருவாய்த் துறை அதி காரிகள் கணக்கெடுத்துள்ளார்கள், பயிர்களை பறி கொடுத்த விவசாயிகள் அரசாங்கம் தங்களுக்கு நிவாரணம் அளிக்கும



என்ற நம்பிக்கையோடு காத்திருக்கிறார்கள், விவசாயிகளுக்கு ஏற்பட்டுள்ள பயிர்ச் சேதங்களுக்கு உடனடியாக நிவாரணத் தொகை அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆதி திராவிடர்களுக்கு அடிப்படைத் தேவை. அவர்கள் குடியிருக்க 3 செண்ட் வீட்டுமனை பட்டா அளிப்பதுதான், அதற்காக இந்த அரசாங்கம் ஒதுக்கீடு செய்துள்ள நிதி போது மனதாக இல்லை, இந்தத் தொகையை உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்,

ஊராட்சிகளில் உள்ள மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகளை ஊராட்சி ஒன்றியங்கள் பராமரித்து வருகின்றன, பழுதடைந்த தொட்டிகளை ரிப்பேர் செய்வதற்கு தலைவாசல் ஒன்றியத் திற்குத் தேவையான குழாய்களை பக்கத்தில் இருக்கும் ஆத்தூரில் அல்லது சேலத்தில் உள்ள கூட்டுறவு அங்காடிகளில் வாங்கலாம். ஆனால் 100 கிலோமீட்டர் தூரத்தில் உள்ள நாமக்கல்லில் உள்ள ஒரு குறிப்பிட்ட கடையில் மட்டும் வாங்க வேண்டுமென்று அதிகாரிகள் உத்திரவிட்டிருக்கிறார்கள், அந்தக் கடையில் குறிப்பிட்ட சாமான்கள் இருப்பதில்லை, ஆகவே இந்த நிலையை மாற்றியமைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்,

கைத்தறி நெசவாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களுக்கு தீபா வளி. பொங்கல் பண்டிகை நாட்களில் ரிபேட் சலுகை அளிக்கப்படுகிறது, ஏற்கெனவே ரிபேட் அளித்துள்ள சங்கங்களுக்கு அந்த ரிபேட் தொகை இன்னும் கொடுக்கப்படாமல் உள்ளது, இதனால் பல ஆயிரக்கணக்கான சங்கங்கள் நலிந்த நிலையில் உள்ளன. குறிப்பாக சேலம் அம்மாபேட்டை கைத்தறி நெசவாளர் உற்பத்தி மற்றும் விற்பனை சங்கத்திற்கு மாநில அரசாங்கம் ரிபேட் தொகையாக ரூ. 55 இலட்சமும். கோ-ஆப்டெக்ஸ் வேட்டி. சேலைகள் வாங்கிய வகையில் 49 இலட் சம் ரூபாயும் ஆக ஒரு கோடியே 4 இலட்சம் ரூபாய் கொடுக்க வேண்டியுள்ளது. இந்தத் தொகை கிடைக்காத காரணத் தினால் இந்தச் சங்கம் வங்கிகளுக்கு அளிக்க வேண்டிய தொகையைச் செலுத்தாமல் இருக்கிறார்கள், ஆகவே அரசு கொடுக்க வேண்டிய தொகையை உடனடியாக அந்தச் சங்கத் திற்கு கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சத்துணவு அமைப்பாளர்களை முன்பு மாவட்ட ஆட்சித் தலைவர்களே நியமனம் செய்தார்கள், சத்துணவு அமைப் பாளர்கள் பகுதிநேர ஊழியர்கள்தான். இந்த ஊழியர்களுக் கான காலியிடங்களை முன்பெல்லாம் மாவட்ட ஆட்சித் தலைவர்கள்தான் நிரப்பிக் கொண்டிருந்தார்கள், இப்போது இங்கே சமூக நலத் துறை அமைச்சரின் அனுமதியைப் பெற்றுத் தான் நியமனம் செய்ய வேண்டும் என்று கூறியுள்ள காரணத் தால் காலதாமதம் ஏற்படுகிறது. எனவே மீண்டும் மாவட்ட

பிற்பகல் 12—45

ஆட்சித் தலைவர்கள் மூலம் சத்துணவு அமைப்பாளர்களுக்கான
காலியிடங்கள் நிரப்பப்பட வேண்டும் என்று கேட்டு. நன்றி
கூறி விடைபெறுகிறேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. டி. எம். ரங்கராஜன்.

*திரு. டி. எம். ரங்கராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, பட்ஜெட் விவாதத்திலே கலந்துகொண்டு பேசு
வதற்கு வாய்ப்பு அளித்த மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர்
புரட்சித் தலைவி அவர்களுக்கும், தங்களுக்கும் என் மனமார்ந்த
நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.
இலங்கையிலிருந்து இராமபிரான் திரும்புகிறபோது, திருமயிலை
யிலே எழுந்தருளி இருக்கின்ற கபாலீஸ்வரருக்கு தெப்பத்
திருவிழா நடத்தியதாக புராணங்கள் கூறுகின்றன. அதன்
பின்னர், பல நாள் தெப்பத் திருவிழாக் காணாத கபாலீஸ்
வரருக்கு ஆஸ்திகப் பெருமக்கள் மனம் குளிருகின்ற வகையிலே
தை மாதத்திலே தெப்பத் திருவிழா காண வேண்டுமென்ற
உயரிய நோக்கத்துடன் திருமயிலை திருக்குளத்தைச் செப்பனிட
ஒரு கோடி ரூபாய் வழங்கிய டாக்டர் புரட்சித் தலைவி அவர்
களுக்கு என்னுடைய முதற்கண் நன்றி கலந்த வணக்கத்தைத்
தெரிவித்துக்கொள்கிறேன். 'சர்வே ஜனாசுகினோ பவந்து—,
அதையே வள்ளலார் பெருந்தகை கூறுகையில், 'எல்
லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே அல்லாமல் வேறொன்றும்
அறியேன், பராபரமே.' என்கின்றார். அப்பேற்பட்ட வள்ளலார்
நெறியைப் பின்பற்றுகின்ற டாக்டர் புரட்சித் தலைவி
அவர்கள், வள்ளலார் பெயரில் மாவட்டம் காண்பது போற்று
தலுக்குரியது.

எதிர்க்கட்சி நண்பர்கள் நம்முடைய பட்ஜெட்டை வெறும்
சம்பிரதாயத்திற்காக எதிர்த்தாலும், அவர்களுடைய இல்லத்
தரசிகள் இதனை வரவேற்கின்றார்கள் என்பது நாம் அறிந்த
ஒன்று. சென்ற நிதி ஆண்டிலே வருவாய் பற்றாக்குறை 902
கோடி ரூபாய் இருந்தும், தங்களுடைய தேர்தல் வாக்குறுதியை
நிறைவேற்றுவதற்காக, மலிவுவிலை மதுக்கடைகளை மூடியதால்
ஏற்பட்ட வருவாய் இழப்பு 322 கோடியும் சேர்த்து மொத்தப்
பற்றாக்குறை 1224 கோடி ரூபாய் ஆக ஆகியது. மத்திய அரசு
ரூபாயின் மதிப்பைக் குறைத்தும், உர விலையை ஏற்றியும், அரிசி
விலையைக் கூட்டியும், தமிழகத்தில் தொழில் துறையிலே மத்திய
முதலீடு 10 சதவீதத்திலிருந்து 5 சதவீதமாகக் குறைந்தாலும்
டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் எடுத்த சிக்கன நடவடிக்கை
களால் இறுதிப் பற்றாக்குறை 1991—92 ஆம் ஆண்டிற்கு 401
கோடி ரூபாய் என்று குறைந்தது. இந்தச் செயலுக்காக தான்
அவர்களைப் பாராட்டக் கடமைப்பட்டு இருக்கின்றேன். 1992—
93 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையைப் பார்க்கின்றபோது



இறுதிப் பற்றாக்குறை 494 கோடி ரூபாயாக இருக்கும் என்றும்,
அதில் சென்ற ஆண்டு பற்றாக்குறை 401 கோடி ரூபாயும்
சேர்ந்துதான் என்கின்றபொழுது, இந்த ஆண்டினுடைய பற்றாக்
குறை 93 கோடி ரூபாய்தான். ஆனால் மத்திய அரசு அரிசி
விலையை ஏற்றியதன் காரணமாக, உணவு உதவி தொகைக்காக
157 கோடி ரூபாய் கொடுக்கப்பட வேண்டியது உள்ளது என்
கின்றபொழுது, டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் வழங்கி
இருக்கின்ற பட்ஜெட் ஒரு சர்ப்ளஸ் பட்ஜெட், 64 கோடி ரூபாய்
சர்ப்ளஸ். இதை ஜீரணிக்க முடியாத மாஜி முதல்வர் அவர்கள்
மக்களைக் குழப்புகின்றார். கருணாநிதியின் நிர்வாகச் சீர்
கேட்டின் காரணமாகத்தான் அரசுக்கு ஏற்பட்ட இழப்பை ஈடு
செய்ய வேண்டிய பொறுப்பு டாக்டர் புரட்சித் தலைவி அவர்
களுக்கு வந்துள்ளது என்றால் அது மிகையாகாது. இந்த அவை
யின் முன்னால் வைக்கப்பட்டுள்ள ஏடுகளிலிருந்து நான் சில
வற்றை இந்த அவைமுன் சமர்ப்பிக்க விரும்புகின்றேன்.

உதாரணமாக பொன்மனச் செம்மல், டாக்டர் புரட்சித்
தலைவர் அவர்களுடைய ஆட்சியின் இறுதியிலே பல்லவன்
போக்குவரத்துக் கழகத்திற்கு இழப்பு ஒரு கிலோ மீட்டருக்கு
4 பைசாவாகத் தான் இருந்தது. ஆனால் திராவிட முன்னேற்றக்
கழக ஆட்சியிலே அது ஒரு கிலோ மீட்டருக்கு 91 பைசாவாக ஆகி
1561 இலட்சம் ரூபாய் நஷ்டத்தை ஏற்படுத்தி சாதனை படைத்
தவர் நம்முடைய கலைஞர் கருணாநிதி அவர்கள்.

புரட்சித் தலைவர் ஆட்சியிலே ஆரம்பிக்கப்பட்ட மேட்டூர்
தெர்மல் பவர் பிளான்ட் உற்பத்தி தொடங்கியது 1987-லும்
1989 லும் தான். ஆனால் முந்தைய தி.மு.க. அரசு இதனை
சரியாகப் பயன்படுத்தாததால் 3095 மில்லியன் யூனிட் பவர்
உற்பத்தி செய்யப்படாமல் அரசுக்கு 202 கோடி ரூபாய் இழப்பு
ஏற்பட்டதும் தி.மு.க. அரசிலே தான்.

1987-ல் தமிழகத்திற்கு வந்த டூரிஸ்ட்களின் எண்ணிக்கை
3.24 இலட்சம். ஆனால் ஆயுதக் கலாச்சாரத்திற்கு வித்திட்ட
தி.மு.க. அரசில் அதாவது 1989-ல் டூரிஸ்ட்களின் எண்ணிக்கை
2.91 இலட்சமாகக் குறைந்து, 1.7 கோடி ரூபாய் டூரிஸம் டிபார்ட்
மென்டிற்கு நஷ்டம் ஏற்பட்டது தி.மு.க. அரசிலே தான்.

(பிற்பகல் 12—50)

அதேபோன்று தமிழ்நாடு வேர்ஹவுசிங் கார்ப்பரேஷனை
உபயோகப்படுத்தியது 1987—ல் 80 சதவீதமாக இருந்தது 65
சதவிகிதமாக குறைந்ததால் அரசுக்கு ஏற்பட்ட இழப்பு 17
லட்சம் ரூபாய். அதேபோன்று தமிழ்நாடு லெதர் டெவலப்
மென்ட் கார்ப்பரேஷனில் ரூ. 1.7 கோடி முறைகேடு நடந்திருக்
கிறது. இதை ஆடிட்டர்கள் அரசின் கவனத்திற்குக் கொண்டு
வந்தாலும் முந்தைய அரசு நடவடிக்கையெடுக்கத் தவறியது.
அதுமட்டுமல்லாமல் குறைந்த அளவுக்கு ரெக்டிபைட் ஸ்பிரிட்

தயாரித்தால் அதற்கு பெனல்டி போடவேண்டுமென்கிற ஒரு வரையறை இருக்கிறது. சின்னாளபுதூரில் உள்ள ஒரு டிஸ்டிலரி யூனிட்டில் குறைந்த அளவு ரெக்டிபைட் ஸ்பிரிட் தயாரித்து அதற்கு பெனல்டியாக ரூ. 65.2 இலட்சம் ஆடிட்டர்கள் வசூல் செய்ய வேண்டுமென்று சொல்லியும் மெத்தனமாக இருந்தது முந்தைய அரசு.

அதுமட்டுமல்லாமல் டி.டி.பி.எஸ். அதாவது தூத்துக்குடி தெர்மல் பிளாண்டில் ரெயில்வே சைடிங் தொடங்கப்பட்டு கை விடப்பட்டதால் அரசுக்கு ஏற்பட்ட இழப்பு ரூ. 65 இலட் சம். அதுமட்டுமல்லாமல் இன்றைக்கு அவைமுன் வைக்கப் பட்டிருக்கிற தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தின் ஆனுவல் ரிப்போர்ட்டில், தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத் திற்குச் சொந்தமான கடைகளை வாடகைக்கு விடாமல் இருப்ப தால் ஏற்பட்ட நஷ்டம் ரூ. 28 இலட்சம் என்று சொல்லப்பட் டிருக்கிறது. அப்படிப் பலவிதமான நஷ்டங்களை அரசுக்கு ஏற் படுத்திய நம்முடைய மாஜி முதல்வர் அவர்கள் இன்றைக்கு நாலாந்தர அரசியலிலே நம்மைப்பற்றி குறை கூறுகிறார்கள்.

இன்றைக்கு டாக்ஸ் பற்றி எடுத்துக்கொண்டால் வராத வரி ரூ. 498 கோடியாக இருக்கிறது. அதிலே ரூ. 330 கோடி சேல்ஸ் டாக்ஸ் ஆகும். இதனை உயர்நீதிமன்றத் தடையினால் வசூலிக்க முடியவில்லை. இப்போது ஹைகோர்ட்டில் டாக்ஸ் பெஞ்ச் இல்லை. அதை ஏற்படுத்த அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். விதிக்கப்படுகிற வரியைக் கட்டினால் தான் ஸ்டே கொடுக்கவேண்டுமென்று சட்டதிருத்தம் கொண்டு வர வேண்டுமென்று இந்த மாமன்றத்தின் மூலம் மாண்புமிகு டாக்டர் புரட்சித்தலைவி அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

1980 ஆம் வருடத்தை பேசாகக் கொண்டு ரூபாய் மதிப்பை கணக்கில் கொண்டால் இன்றைக்கு ரூபாயின் மதிப்பு 0.43 பைசா என்கிறார் நம்முடைய மத்திய நிதியமைச்சர் அவர்கள். ஆனால் 1980-லிருந்த பொருள்கள் எல்லாம் இன்றைக்கு விலையேறி இருக்கிறது. ஆனால் அரிசி விலை மட்டும் அதே 2 ரூபாய்க்கு வைத்துதான் கொடுக்கிறோம். ரூபாய் மதிப்பை எடுத்துக் கொண்டு பார்த்தால் இன்றைக்கு நாம் கொடுக்கிற அரிசியின் விலை 0.86 பைசாவாக 2 ரூபாய்க்கு குறைவாக இருக் கிறது, என்பதை இந்த மாமன்றத்தில் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

இங்கே மொலாசசிற்கு 5 சதவீதம் அதிகவரி விதித்ததையும் புரபஷனல் டாக்ஸ் 1,500 சம்பளம் பெறுபவர்களுக்கு 8 ரூபாய் என்றும், 15,000 ரூபாய் மாத வருமானம் பெறுபவர்கள் 150 கொடுப்பது பெரிய காரியமல்ல என்று நாம் சொன்னாலும், அது நடுத்தர மக்களை பாதிக்கிறது என்று சொன்னார்கள். அதே நேரத்தில் மத்திய அரசு இன்கம்டாக்ஸ் பொறுத்தவரையில் 28,000 ரூபாய்க்கு வரிவிலக்கு அளித்து, அதற்குமேல் 20

182337



சதவீதம், 30 சதவீதம், 40 சதவீதம் என்று வரியைப் நிர்ணயித் துள்ளது. இதைப்பார்க்கிறபோது இது நடுத்தர மக்களுக்கு கன்சஷனாகத் தெரிந்தாலும், அது மக்களுடைய பர்சேசிங் பவரை இன்கிரீஸ் செய்து அதன்மூலம் விலைவாசி உயர்வுக்கு அடிகோலுகிறது. அதேநேரத்தில் இன்கம்டாக்ஸ் 50 சதவீதத்தி லிருந்து 40 சதவீதம் ஆக குறைந்தது பணக்காரர்களுக்குதான் ஆதாயம். ஆனால் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் மிகுந்த நிதிநெருக்கடியிலும் பல நல்வாழ்வு திட்டங்களை அளித்திருப்பது அவர்கள் தமிழக மக்கள் மீது, குறிப்பாக ஏழை மக்கள் மீது கொண்டுள்ள அன்பை வெளிப்படுத்துகிறது. மகளிர் எல்லாம் அரசியலை கைப்பற்றி ஆண்டால் மாநிலத்தில் போர் இல்லை, சாக்காடும் இல்லை என்கிற பாரதிதாசன் அவர்களின் கனவு நனவாகியிருக்கிறது.

அடுத்து என்னுடைய தொகுதியைப் பற்றி ஒன்றை சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். 'வள்ளுவன் தன்னை உல கினுக்கே தந்து வான்புகழ் கொண்டது திருமயிலை' மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் ஒவ்வொரு நாளும் இந்தப் பேரவையைக் துவக்குகிறபோது திருவள்ளுவர் அளித்த திருக் குறளைச் சொல்லித்தான் துவக்குகிறீர்கள். ஆனால் திரு வள்ளுவர் அவதரித்த தலமான திருமயிலையில் இன்றைக்கு அவருக்கு நினைவுச் சின்னம் இல்லை. திருவள்ளுவருக்கு ஒரு கோவில் திருமயிலையில் இருந்தாலும் அவருக்கு ஏற்படுத்த வேண்டிய நினைவுச் சின்னம் ஏதோ ஒரு காரணத்தால் ஆயிரம் விளக்கு தொகுதிக்குச் சென்று விட்டது—மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் மன்னிக்க வேண்டும். திருவள்ளுவருக்கு ஒரு நினைவுச் சின்னம் திருமயிலையில் ஏற்படுத்திக்கொடுக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை உங்கள் மூலம் கேட்டுக் கொள்கிறேன். ஏனென்று சொன்னால் இவ் வுலகம் இருக்கும்வரை தமிழ் இருக்கும், தமிழ் இருக்கும்வரை திருக்குறள் இருக்கும். திருக்குறள் இருக்கும்வரை நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய புகழும் இருக்கும் என்று நான் இந்த நேரத்திலே சொல்வதற்குக் கடமைப்பட்டிருக் கிறேன் (மேசையைத் தட்டும் ஒலி).

(பிற்பகல் 12—55)

அதேபோன்று நம்முடைய பாரதியார் இருந்த இடம் திருவல்லிக்கேணி. இன்றைக்கு பாரதியார் வீட்டை நாம் கையகப்படுத்தியிருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தவறான தகவலைச் சொல்லக் கூடாது. பாரதியார் பிறந்த இடம் திருவல்லிக் கேணி அல்ல. அது அவர் வாழ்ந்த இடம். அவர் பிறந்த இடம் இங்கிருந்து நெடுந்தூரத்திற்கு அப்பால் இருக்கிற எட்டைய புரம். திருவல்லிக்கேணி அவர் வாழ்ந்து மறைந்த இடம்.

V211,3|'92 179-2/6-3

திரு. டி.எம். ரங்கராஜன் : பாரதியார் வாழ்ந்து மறைந்த
இடம் திருவல்லிக்கேணி. இன்றைக்கு அவர் வாழ்ந்த வீட்டை
நம்முடைய அரசு கையகப்படுத்தியிருந்தாலும் அவருக்கு ஒரு
நினைவுச் சின்னத்தை அங்கே ஏற்படுத்தவில்லை. அந்த
நினைவுச் சின்னத்தையும் நம்முடைய மாண்புமிகு தமிழக
முதலமைச்சர் அவர்கள் ஏற்படுத்தித் தரவேண்டுமென்று உங்கள்
மூலமாகக் கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போன்று ஒரே ஒரு சட்டத் திருத்தத்தையும் நான்
இங்கே சொல்வதற்கு விழைகிறேன். தமிழ்நாடு இந்துநிலைய
அறச் சட்டம் இன்றைக்கு இந்த அவைமுன்னால் அறிமுகப்
படுத்தப்பட்டது. இந்தச் சட்டத்திலே 'டெம்பிள் அட்மினிஸ்டி
ரேஷன் போர்டு' என்று ஒரு போர்டை ஏற்படுத்தி, அதற்குத்
தலைவராக நம்முடைய முதலமைச்சர் அவர்கள் இருக்
கிறார்கள். அந்த அமைப்பிலே மாண்புமிகு முதலமைச்சர்
அவர்கள் மட்டுமல்லாமல் மாண்புமிகு அறநிலையத்துறை
அமைச்சர் அவர்களும் அந்தத் துறையைச் சேர்ந்த செய
லாளரும் அதிலே உறுப்பினர்களாக இருக்கிறார்கள். அவர்கள்
எடுக்கின்ற முடிவுக்கு அப்பீல் அரசுக்குச் செல்வதாக அந்த
ஆக்டிலே சொல்லப்பட்டிருக்கிறது. அதாவது முதலமைச்சர்
எடுத்த ஒரு முடிவுக்குமேல் அப்பீலிலே முடிவு செய்பவர் செய
லாளராக இருக்கிறார். இது முரணானதாக இருக்கிறது.
ஏனென்றால் அந்தச் செயலாளரே இந்தக் குழுவில் ஒரு உறுப்
பினராக இருப்பதால் அந்தச் சட்டத்தைத் திருத்த வேண்டு
மென்று பணிவன்புடன் வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

அது மட்டுமல்லாமல், தமிழ்நாடு சிட்டி டெனன்ட்ஸ்
புரொட்டக்ஷன் ஆக்டையும் திருத்த வேண்டும். கோவில்
நிலங்களுக்கு சிட்டி டெனன்ட்ஸ் புரொட்டக்ஷன் ஆக்டிலிருந்து
விதிவிலக்கு அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, எனக்கு
வாய்ப்பு அளித்த உங்களுக்கு மனதார நன்றி தெரிவித்து, அமர்
கிறேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. வெ. தமிழரசு.

திரு. வெ. தமிழரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, ஏழை எளிய மக்களின் நலன்களைக் கருத்தில்
கொண்டு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்
களால், அவர்களுடைய புனித அரசால் 1992–93 ஆம் ஆண்டுக்
கான வரவு-செலவுத் திட்டத்தை அளித்த மாண்புமிகு நிதி
அமைச்சர் டாக்டர் நாவலர் அவர்களை மனதாரப் பாராட்டு
கிறேன். கடுமையான நிதி நெருக்கடிக்கு இடையே முதியோர்
களுக்கும் கர்ப்பிணி பெண்களுக்கும் மீனவர்களுக்கும் உதவித்
தொகையை உயர்த்தி அளித்து, வேளாண்மைக்கு 212 கோடி
ரூபாய் ஒதுக்கி, 10 மேல்நிலைப் பள்ளிகளையும், 20 உயர்நிலைப்
பள்ளிகளையும் தொடங்கி, 25 கோடி ரூபாயில் பாமாயில் உற்



பத்தி செய்து, 25,000 ஏக்கரில் காகிதக் கூழ் மரங்கள் வளர்த்து.
அறிவு வளர்ச்சிக்காக 625 கிராமங்களில் புதிய நூலகங்களை
ஏற்படுத்தி, அத்தியாவசியப் பொருள்களுக்கு வரியைக் குறைத்து,
மது பானங்களுக்கு மதுவரியை உயர்த்தி, ஏழை எளிய மக்களுக்கு
அறுவை சிகிச்சைக்காக 12,000 ரூபாய் கொடுத்து, பட்டா பதிவு
புத்தகம் வழங்கும் திட்டம் போன்று அளித்திருக்கின்ற பல்வேறு
நலத் திட்டங்களை நான் மனமாரப் பாராட்டுகிறேன்.

நம்முடைய இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களுடைய
பொற்கால ஆட்சியில் எனது தொகுதியான ஆத்தூர் தொகுதியில்
நீண்டகாலமாக வேண்டிவரும் தலைவாசல், ஆத்தூர் தொகுதி
ஆகிய இரண்டுக்கும் பயனளிக்கின்ற வகையில் சப் கோர்ட்
ஒன்றை ஏற்படுத்துமாறு பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

அதைப் போன்று கொள்ளுவாரியில் நடுநிலைப் பள்ளியை
உயர்நிலைப் பள்ளியாகவும், மஞ்சனியில் உயர்நிலைப் பள்ளியை
மேல்நிலைப் பள்ளியாகவும் உயர்த்தித் தர அன்புடன் கேட்டுக்
கொள்கிறேன்.

ஆத்தூர் ஊராட்சி ஒன்றியத்தில் 20 ஊராட்சிகளுக்கு இது
வரை தொலைக்காட்சிப் பெட்டியே இல்லாத காரணத்தால்
அங்கே விரைவில் டி.வி. பெட்டிகளை வாங்கி வழங்க அன்போடு
கேட்டுக் கொள்கிறேன்.

தொழில் துறையில் பிற்பட்ட தொகுதியான எனது தொகுதியில்
கூட்டுறவு சர்க்கரை ஆலை அல்லது கிரானைட் தொழிற்
சாலை ஏற்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் இங்கு ஆட்டோ நகர் ஏற்படுத்த பல காலமாகக்
கேட்டுக் கொண்டு வருகிறார்கள். அதை நிறைவேற்றித் தரு
மாறும் கேட்டுக் கொள்கிறேன்.

ஆத்தூரிலே ஒரு கோட்டாட்சித் தலைவர் அலுவலகத்தை
யும் ஏற்படுத்தித் தருமாறு பணிவன்போடு கேட்டுக் கொள்
கிறேன்.

பிற்பகல் 1-00

கரியகோயிலில், கல்வராயன் மலையில், பழப் பண்ணை
ஏற்படுத்தி மலைவாழ் மக்களுக்கு வாழ்வளிக்க வேண்டுகிறேன்.
ராமநாய்க்கன் பாளையத்தில், பைத்தூரிலும் ராமநாய்க்கன்
பாளையத்திலும் சிறிய நீர்த் தேக்க அணையைக் கட்ட அன்போடு
கேட்டுக் கொள்கிறேன்.

கல்பகனூர், ராமநாய்க்கன்பாளையம், முள்ளுவாடி, ஆத்தூர்
தெற்கு காடு ஆகிய இடங்களில், வசிஷ்ட நதியின் குறுக்கே
போக்குவரத்திற்கு மிகவும் இடைஞ்சலாக இருப்பதால், அங்கே
தரைப் பாலங்களை அமைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்
கிறேன்.

சுரியகோயிலிலிருந்து, ஆத்தூருக்கு, ராமநாய்க்கன்பாளையம், கல்பகனூர் வழியாக சாலை அமைத்து, மலைவாழ் மக்களுக்கு போக்குவரத்து வசதியை ஏற்படுத்திக் கொடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

ஆத்தூரிலிருந்து திருப்பதிக்கும், மதுரைக்கும் விரைவுப் பேருந்து விடுமாறு பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அங்கே காவல்நிலையக் கட்டிடம் மிகவும் மோசமாக இருப்பதால் காவல் நிலையக் கட்டிடமும், காவலர்களுக்கு குடியிருப்பும் கட்ட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பெத்தநாயக்கன்பாளையம் ஒன்றியம் மிகப் பெரியதாக இருப்பதால், அதை இரண்டாகப் பிரித்து, வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

தொழிலில் முன்னேறி வரும் சேலம் மாவட்டத்திற்கு, விரைவில் விமான நிலையத்தை ஏற்படுத்த, மத்திய அரசை துரிதப் படுத்த வேண்டுமாய் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

சேலம் மாவட்டத்தை இரண்டாகப் பிரித்து, தென் சேலத்திற்கு ஆத்தூரைத் தலைநகராக ஏற்படுத்த, பணிவன்போடு புரட்சித் தலைவி அவர்களுடைய பொற் பாதங்களைத் தொட்டுக் கேட்டுக்கொள்கிறேன்.

சேலம் மாவட்டத்தில் குச்சிக் கிழங்கு அதிகம் பயிரிடும் விவசாயிகள் இருப்பதால், விலையேற்றத் தாழ்வு அடிக்கடி ஏற்படுகின்றது. எனவே, நல்ல விலை கிடைக்க 'சாகோ கார்ப்பரேஷன்' ஒன்றை ஏற்படுத்தித் தர வேண்டுமாய் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

விவசாயிகளுக்காகவும், தொழிலாளர்களுக்காகவும், நெசவாளர்களுக்காகவும், தாழ்த்தப்பட்ட மக்களுக்காகவும், ஆக அனைத்துத் தரப்பு மக்களுக்கும் உள்ள தேவைகளை நிறைவேற்றும் இந்த நிதிநிலை அறிக்கையைப் பாராட்டி அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ப. கலியபெருமாள்.

*திரு. ப. கலியபெருமாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னை வாழவைத்த தெய்வமான, டாக்டர் புரட்சித் தலைவியின் பொற்பாதம் தொட்டு, என் உரையைத் தொடங்குகிறேன். டாக்டர் நாவலர் அவர்களால், இந்த மாமன்றத்தில் வைக்கப்பட்டுள்ள இந்த நிதிநிலை அறிக்கையை நாட்டின் நலனை உணர்ந்தோர் நல்ல மனம் படைத்தோர் பாராட்டுவார்கள். ஆனால், குற்றத்தையே காணும் இய



நோக்குடையோர், இதய தெய்வம் புரட்சித் தலைவிக்கு புகழும், பாராட்டும் கிடைக்கக்கூடாது என்று கருதும் காழ்ப்புணர்ச்சி கொண்டோர் சிலருக்கு பாராட்ட மனம் வராது.

பன்னிரெண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை வரும், கும்பகோணத்தில் நடைபெற்ற மகாமக விழாவில் கலந்துகொண்டு, லட்சக்கணக்கான பக்தர்களுக்கு எந்தவித துன்பங்களும் ஏற்படாமல், பாதுகாப்பு தந்து, உணவுக்கோ, குடிநீருக்கோ, போக்குவரத்து வசதிக்கோ, கஷ்டப்படாமலும், திருட்டுப் பயம் இல்லாத அளவிற்கு காவல் துறை பாதுகாப்பு தந்தும், அமைச்சர்களையும் அரசு அலுவலர்களையும் முடுக்கிவிட்டு, சிறப்பாக விழாவை நடத்த பல கோடி ரூபாய் செலவுசெய்து சீரும் சிறப்புமாக நடத்திய புரட்சித் தலைவிக்கு புகழும் பாராட்டும் சென்றுவிடக் கூடாது என்று காழ்ப்புணர்ச்சி கொண்டோர், விஷமிகளால், கிளப்பி விடப்பட்ட செயல்களால், ஏற்பட்ட சோக சம்பவத்தைப் பெரிதாக்கி, மனசாட்சி இல்லாமல், பொய்ப் பிரச்சாரம் செய்தவர்களுக்குப் பாராட்ட மனம் வராது.

பட்டப் பகலில், சென்னையில் 16 பேர்களைக் கொன்று குவித்துவிட்டுச் சென்ற கொடியவர்களின் செயலைக் கண்டிக்காதவர்கள் அதற்கு நீதி விசாரணை கேட்காதவர்கள் பாராட்ட மாட்டார்கள். அப்படிப்பட்டவர்கள் பாராட்டும் தேவையில்லை. நாட்டு மக்கள் பாராட்டுகிறார்கள். நல்ல மனம் படைத்தோர், நடுநிலையாளர்கள், ஏழை எளியோர் பாராட்டுகிறார்கள், இந்த நிதி நிலை அறிக்கையை.

ஒரு குடும்பத்தின் வருவாயைக் கொண்டு, எப்படி இல்லத்தரசிகள் சீரும் சிறப்புமாக அக்குடும்பத்தைப் பராமரிக்கிறார்களோ, அதைப்போல, நாட்டின் வருமானத்தைக் கொண்டு நாட்டு நலத் திட்டங்களை நிறைவேற்றவும், பல்வேறு துறைகளின் கோரிக்கைகளை நிறைவேற்றவும், சட்டம் ஒழுங்கை நிலைநாட்டி, பொதுமக்களுக்கு பாதுகாப்பு அளித்திடவும், ஏழை எளியோரின் வாழ்க்கையை மேம்படுத்தவும், தொழில் வளத்தைப் பெருக்கி, பொருளாதாரத்தைப் பெருக்கிடவும், நலிந்தோர் வாழ்வு உயரவும், நாட்டுக்கு அரசியான டாக்டர் புரட்சித் தலைவியின் தலைமையிலே இயங்கும் இந்த அரசு, இந்த நிதி நிலை அறிக்கையை அளித்துள்ளது.

காவல்துறை, வேளாண்மைத்துறை, கால்நடைத்துறை, மீன்வளத்துறை, கல்வித்துறை, தமிழ் வளர்ச்சித்துறை, சுகாதாரத் துறை, குடிநீர் வழங்கல், தொழில் துறை, தொழிலாளர் நலன், மின்சாரத் துறை, ஊரக வளர்ச்சித் துறை, பொதுப் பணித் துறை, வீட்டுவசதித் துறை, ஆதி திராவிடர் நலத்துறை, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை, மகளிர் மேம்பாட்டுத் துறை, ஏழை மக்களுக்கு பாதுகாப்பு அளிக்கும் இன்னும் பிற துறைகளை மேம்படுத்தவும், நிதி ஒதுக்கீடு செய்யும் கொள்கை மிகவு பாராட்டுக்குரியது.

என் தொகுதியில் திருவையாறு வட்ட தலைநகரில் இயங்கும் சுகாதார நிலையத்தை மேம்படுத்த சென்ற நிதிநிலை அறிக்கையில் குறிப்பிட்டு இருந்தும், இதுநாள் வரையில் எந்த நடவடிக்கையும் இல்லாமல் உள்ளது. இந்த ஆண்டிலாவது பல வசதிகள் கொண்ட மருத்துவமனையாக அச்சுகாதார நிலையத்தை மாற்றி அமைக்க வேண்டுகிறேன்.

திருக்காட்டுப் பள்ளியில் இயங்கும் மருத்துவமனையை மேம்படுத்த நில ஆர்ஜிதம் செய்து, இதுவரையிலும் மேல் நடவடிக்கை எடுக்காமல் இருப்பதை துரிதப்படுத்தி, மேற்படி மருத்துவ மனையை மேம்படுத்த வேண்டுகிறேன்.

பிற்பகல் 1-05

என் தொகுதியில் விடப்பட்டுள்ள பேருந்துகள் அனைத்தும் சரியான நிலையில் இல்லாததால், சரியான நேரத்திற்குக் குறிப்பிட்ட இடத்திற்குப் போக முடியாமல் மக்கள் பெரிதும் அவதிப்படுகிறார்கள். ஆகையால் புதிய பேருந்துகள் விடவும், அரசு அறிவிப்பின்படி ஆயிரம் மக்கள் தொகை கொண்ட ஊர்களுக்கு பேருந்துகள் விடவும், பல வழித்தடங்களில் கூடுதலாக பேருந்துகள் விடவும் வேண்டுகிறேன்.

கந்தர்வகோட்டை-கல்லணை சென்று வந்த சோழன் போக்குவரத்துக் கழகப் பேருந்து தற்போது திருக்காட்டுப்பள்ளி வரை வந்து திரும்பிவிடுகிறது. மேற்படி பேருந்தை கல்லணை வரை விடவும், திருச்சியிலிருந்து பூண்டிமாதா கோயிலுக்கு தீரன் சின்னமலை பேருந்து விடவும், கல்லணையிலிருந்து—சென்னைக்கு திருவையாறு வழியாக பேருந்துகள் விடவும் கேட்டுக்கொள்கிறேன்.

கால்வாய்கள், வாரிகள் அனைத்திலும், காட்டாமணக்கு மண்டிக்கிடப்பதை அகற்றி பாசனத்திற்கு வழிவகுக்க வேண்டுகிறேன்.

திருச்சி மாவட்டத்திலிருந்து வரும் தண்ணீர், இந்தளூர் கிராமத்தில் அருகில் வரும் ஆனந்த காவேரி என்னும் வடிகால் மூலமாக வந்து பெரும் சேதத்தை உண்டாக்குகிறது. அந்த வடிகாலை சீரமைத்து பாசன வசதி செய்து கொடுக்க வேண்டுகிறேன்.

1987 ஆம் ஆண்டு, மணத்திடல்-வளப்பக்குடி குறுக்கே குடமுருட்டி ஆற்றில் பாலம் கட்ட அடிக்கல் நாட்டி, விழா கொண்டாடியும், இதுநாள் வரையில் பாலம் கட்டாமல் இருப்பதை டாக்டர் புரட்சித் தலைவி ஆட்சியிலாவது அப்பகுதி மக்கள் மகிழ்ச்சி பெற கட்டி முடிக்க வேண்டுகிறேன்.



மிகவும் பின்தங்கிய பகுதியாக இருக்கின்ற இராய முண்டாம்பட்டி, இந்தளூர் கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க வேண்டுகிறேன். அதற்கு அரசு நிர்ணயித்துள்ள விதி முறைகளை நிறைவேற்றித்தர அப்பகுதி மக்கள் தயாராக இருக்கிறார்கள்.

பல ஆண்டுகளாக கோரிக்கையாக வைத்துள்ள ஒரத்தூர் கிராமத்தில் கால்நடை மருத்துவமனை ஒன்று அமைக்க வேண்டுகிறேன். அமரர் அறிஞர் அண்ணா அவர்களால், கல்லணை சுற்றுலா மையமாக மாற்றி அமைக்கப்படும் என்று அறிவித்தும், தமிழக ஆளுநர் அடிக்கல் நாட்டியும், இதுவரை எந்த செயலுமில்லாமல் இருப்பதை இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் காலத்திலாவது தினந்தோறும் பல ஆயிரக்கணக்கான மக்கள் கண்டுகளித்துச் செல்லும் கல்லணையை சுற்றுலா மையமாக மாற்றி அமைக்க வேண்டுகிறேன்.

பாசனத்திற்காக காவேரியில் தண்ணீர் திறந்துவிடும் அதே நேரத்தில் செங்கிப்பட்டி பகுதியில் வரும் கட்டளை வாய்க்காலில் தண்ணீர் விட்டு ஏரிகளை நிரப்பி பாசனத்திற்கு வசதி செய்து கொடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

தஞ்சை மாவட்டத்தை, தொழில் துறையில் மிகவும் பின்தங்கிய மாவட்டமாக அறிவிக்கவும், திருவையாறு தொகுதியில் தொழில் வளர்ச்சிகளை ஏற்படுத்தி, ஏழை எளியோருக்கு வேலைவாய்ப்பு அளிக்கவும் வேண்டுகிறேன்.

தொலை தூரத்திற்குச் சென்று உயர் கல்வி பெற வேண்டிய நிலையை மாற்றி, திருவையாறு தொகுதியில் தொழில் கல்லூரி அமைக்க வேண்டுகிறேன். திருவையாறு தொகுதியில், பிற்பட்ட மாணவர்கள் விடுதியும், ஆதிதிராவிட மாணவர்கள் விடுதியும் ஏற்படுத்தித் தர வேண்டுகிறேன்.

பல்வேறு துறைகளில், நலிந்தோர்கள் கடன் உதவி கேட்டும் பெற்றுக்கொள்ள அறிவுறுத்தப்பட்டும், அத்துறையினர் மூலமாக வங்கி மேலாளர்கள் அசட்டையாகவும், காலம் கடத்தியும் அலையவிட்டு அனுப்பிவிடுகிறார்கள். பொதுமக்கள் மிகவும் வேதனைப்படுகிற இந்த அவல நிலையை அகற்றி எளிதாகவும், விரைவாகவும் வங்கியில் கடன் பெற வசதிகள் செய்துதர வேண்டுகிறேன்.

அரசு ஆரம்பப் பள்ளிகள், நடுநிலைப் பள்ளிகள், உயர்நிலைப் பள்ளிகள் கட்டிட வசதியில்லாமல் இருக்கும் பல பள்ளிகளுக்குக் கட்டிடம் கட்டித்தர வேண்டுகிறேன். பல பள்ளிகளில் மாணவர்கள் அதிகமாக இருப்பதால் ஆசிரியர்களையும் கூடுதலாக நியமிக்க வேண்டுகிறேன். அனைத்து உயர்நிலைப் பள்ளிகளுக்கும் பெண்களுக்கென கழிப்பிடம் அமைத்துத் தர வேண்டுகிறேன்.

தொகுதியிலுள்ள தொன்மையான வரலாற்றுச் சிறப்புமிக்க ஆலயங்களை சீரமைக்க அரசு உதவி செய்திட வேண்டுகிறேன்.

திருக்காட்டுப்பள்ளி பேரூராட்சியிலுள்ள அக்னீஸ்வரர் ஆலயத்தில் திருமண மண்டபம் கட்ட அரசு ஆவன செய்ய வேண்டுகிறேன்.

ஆதிதிராவிடர் காலனிகளுக்கு உடனடியாக, குடிநீரும் மின் சாரமும் வழங்க வேண்டுகிறேன்.

திருக்காட்டுப்பள்ளி, திருவையாறு, திருப்பந்துருத்தி இம் மூன்று பேரூராட்சிகளிலும் குடிசை மாற்று வாரியத்தின் மூலம் வீடுகள் கட்டவும், வீடுகட்ட கடன் வழங்கவும் கேட்டுக்கொள் கிறேன்.

அனைத்து ஊராட்சிகளுக்கும் கட்டிடங்கள் கட்டியும், தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கிடவும் கேட்டுக்கொள் கிறேன்.

பல ஆண்டுகளாக கோரிக்கையில் உள்ள, சோழகம்பட்டி புகை வண்டி நிலையத்தின் அருகில் பல கிராமங்கள் பயன்பெறும் வகையில் லெவல் கிராசிங் அமைத்து போக்குவரத்து வசதிகள் செய்துதர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அய்னாபுரம், கோட்டாரப்பட்டி சாலையில் உள்ள கல்லணை கால்வாயில் உள்ள பாலத்தை விரிவுபடுத்தி பேருந்து வசதிகள் செய்துதர வேண்டுகிறேன்.

காமதேவ மங்கலத்தின் அருகில் கல்லணை கால்வாயில் குமுளி அமைத்து ஆயிரம் ஏக்கருக்கு மேல் உள்ள நிலங்களுக்கு பாசன வசதிகள் செய்துதர வேண்டுகிறேன்.

இந்த மாமன்றத்தில் பேசுவதற்கு வாய்ப்பு அளித்தமைகு நன்றி கூறி, அமைகிறேன், நன்றி வணக்கம்.

பிற்பகல் 1-10

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. எச். எம். ராஜு.

*திரு. எச். எம். ராஜு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1992-93 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில் பேச எனக்கு வாய்ப்பு அளித்ததற்கு நன்றி கூறி என்னுடைய சில கருத்துக்களை கூற விழைகிறேன்.

சில தினங்களுக்கு முன்பு 29-2-1992 அன்று நமது மைய அரசு தனது 1992-93 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையை நாட்டு மக்களுக்கு அளித்ததை



தாங்கள் அறிவீர்கள். உலக மக்கள் வியக்கும் வகையில் அந்த நிதிநிலை அறிக்கை இருந்தது. அது போல கடுமையான பொருளாதார நெருக்கடியிலே ஏழை மக்களை பாதிக்காமல் நமது தமிழக அரசு இந்த நிதிநிலை அறிக்கையை இந்த மாமன் றத்திற்கு சமர்ப்பித்திருக்கிறது. தமிழகத்தின் தாய்மார் களுக்கும், குழந்தைகளுக்கும், முதியோர்களுக்கும் இந்த நிதிநிலை அறிக்கை ஒரு வரப்பிரசாதம் ஆகும். நல்ல பல திட்டங் களை நிதிநிலை அறிக்கையிலே காண்கிறோம்.

காட்டு வளம் பற்றி குறிப்பிடும்பொழுது 1,500 ஏக்கர் தேயிலை பயிரிடப் போகிறோம் என்று நிதிநிலை அறிக்கையில் இருக்கிறது. நீலகிரி மாவட்டத்தில் விவசாயிகளுக்கு ஒவ்வொரு முறையும் 50 பைசா அளவிற்கு தேயிலை நாற்றைத் தரும் இந்த அரசு, அந்தத் தேயிலை நாற்றை மழைக் காலத்தில், மே மாதம் கடைசிக்குள்ளாக கொடுக்குமாறு மாவட்ட மக்கள் சார்பாக கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறோம்.

காட்டுவளம் ஒரு நாட்டின் பரப்பளவிலே அல்லது ஒரு மாவட்டத்தின் பரப்பளவிலே மூன்றில் ஒரு பாகம் இருக்க வேண்டும் என்பதை நாம் எல்லோரும் அறிவோம். அந்த வகை யில் நீலகிரி மாவட்டத்தில் எல்லா வகை மரங்களையும் வளர்க்க நாங்கள் தயாராக இருக்கிறோம். ஆகவே தமிழக அரசு முன் வந்து எங்களுக்கு அந்தக் காட்டு வளத்தை மேலும் மேலும் பெருக்க வழிவகை செய்ய வேண்டும். இன்றைய நிலையில் உருளைக் கிழங்கு பயிர் நல்ல வளர்ச்சி இல்லாமல் பல விதமான நோய்களுக்கு ஆளாகி இருக்கிறது. நீலகிரி மாவட்டத்து மக்கள் இப்போது தேயிலை பயிர் செய்ய இருக்கிறார்கள். தேயிலைக்கு, பச்சைத் தேயிலைக்கு இப்போது விலை மிகவும் குறைந்த அள விலே தருகிறார்கள். ஆகவே தமிழக அரசை நாங்கள் எல்லா விவசாயிகளின் சார்பாக கேட்டுக் கொள்வதெல்லாம், அதற்கு ஒரு சப்போர்ட் பிரைஸ் என்ற வகையிலே விலை நிர்ணயம் செய்து ரூபாய் 7 முதல் 8 வரைக்கும் ஒரு கிலோ பச்சைத் தேயிலைக்கு கொடுக்குமாறு நாங்கள் உங்கள் மூலமாக கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறோம். நீலகிரியிலேயும், கேரளா விலேயும், இமாசலப் பிரதேசத்திலும் தான் கூட்டுறவு தேயிலை தொழிற்சாலைகள் இருக்கின்றன. அதிலே நீலகிரி மாவட்டத்தில் 15 கூட்டுறவு தேயிலைத் தொழிற்சாலைகள் இருக்கின்றன. அவைகளிலிருந்து வரும் தேயிலையை தயவுசெய்து நமது பாது காப்புத்துறை 100 சதவீதத்தில் வாங்கி அந்த சிறு விவசாயி களுக்கு உதவ வேண்டும் என்று தங்கள் மூலமாக கேட்டுக் கொள் கிறேன். மேலும் ஏற்றுமதி மூலமாக அந்தத் தேயிலையை நாம் நல்ல அளவிலே செய்து வந்தால் அந்த சிறு விவசாயிகளுக்கு உதவலாம். உதாரணமாக வெளிநாடுகளுக்கு ரஷ்யா, ஜெர்மன், இத்தாலி போன்ற நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்ய நாம் பரிந் துரை செய்து அந்த விவசாயிகளைக் காப்பாற்ற வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறோம்.

மேலும் தோட்டக் கலை அதிக அளவிலே வளர்ந்து வரும்
நீலகிரி மாவட்டத்திற்கு விவசாயிகளின் சார்பாக கேட்பது
என்னவென்றால் ஒரு கூடுதல் இயக்குநரை நியமித்துத் தர வேண்
டும் என்று கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறோம்.
நீலகிரி மாவட்டத்தில் விவசாயப் பெருங்குடி மக்களுக்காக ஒரு
விவசாய ஆராய்ச்சிக் கூடம் அமைத்துத் தருமாறு தங்கள்
மூலமாகக் கேட்டுக் கொள்கிறோம்.

கல்வியைப் பொறுத்த வரையில் நமது தமிழ்நாடு கேரளா
விற்கு அடுத்து இரண்டாவது நிலையிலே இருந்தாலும் கூட,
சிலபஸ் என்ற பாடத்திட்டம் மாநில அளவிலே 1-ஆம் வகுப்பு
முதல் 12—ஆம் வகுப்பு வரை ஒரே மாதிரியாக இருந்தால் அது
நமது மாநிலத்தை நல்ல வகையில் முன்னேற்ற வகை செய்யும்
என்ற ஒரு தாழ்மையான கருத்தை சொல்லக் கடமைப்பட்டிருக்
கிறேன். ஊட்டி கலைக் கல்லூரிக்கு ஒரு மதிற்சுவரோ அல்லது
மதிற்சுவருக்கு நிதி நிலை சரியில்லை என்றால் கம்பி வேலியை
யாவது அமைத்து அந்தக் கல்லூரியை காப்பாற்ற வேண்டும்
என்று தங்கள் மூலமாகக் கேட்டுக் கொள்கிறோம்.

புரட்சித் தலைவி மருத்துவ நலத் திட்டம் வரவேற்கப்பட
வேண்டிய ஒன்று. அது ஒரு நல்ல திட்டமாகும். மருத்துவர்கள்
கிராம மக்களைச் சந்திக்கத் தயாராகும் நிலை ஏற்பட்டால்தான்
இந்த நல்ல திட்டம் முழுமையாக வெற்றி பெற வாய்ப்பு உண்டு
என்று சொல்லக் கடமைப்பட்டிருக்கிறோம். எல்லா அத்தியா
வசியமான அன்றாட வாழ்க்கைக்குத் தேவையான மருந்து
வகைகளும் மக்களுக்குக் கிடைக்க ஏற்பாடு செய்தல் அவசியம்.
சட்டமன்ற உறுப்பினர்கள், பாராளுமன்ற உறுப்பினர் அடங்கிய
மாவட்ட மருத்துவ அட்வைசரி கமிட்டியை உடனடியாக அரசு
நியமிக்க வேண்டும் என்ற கோரிக்கையை தங்கள் மூலமாக இந்த
மாமன்றத்தில் வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். குடிநீரை
பொறுத்தவரையில் இன்னும் பல குக்கிராமங்களுக்கும், ஹரிஜன
குடியிருப்புகளுக்கும் குடிநீர் சரிவர வழங்கப்படவில்லை. நீலகிரி
மாவட்டம் ஒரு மலைப்பிரதேசமாக இருந்தும் கூட பல பகுதி
களில் குடிநீர் இல்லாமல் தாய்மார்கள் துன்பப்படுகின்றனர்.
லாரிகள் மூலம் குடிநீர் சப்ளை செய்யப்படுகின்றது. நகரங்
களில் குடிநீர் பிரச்சினை உள்ளது. குடிநீர் வடிகால் வாரியம்
போர்க்கால அடிப்படையிலே செயல்பட்டு குடிநீர் கிடைக்காத
பகுதிகளுக்கு உடனடியாக குடிநீர் கிடைக்க ஏற்பாடு செய்தல்
மிகவும் அவசியமாகும் என்னும் என் கருத்தைச் சொல்லிக்
கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஊட்டியில் உள்ள
பார்சன்ஸ் வாலி குடிநீர்த் திட்டம், குந்தா பகுதி மக்களுக்காக
அம்மக்கல் குடிநீர்த் திட்டம், கூடலூர் பகுதி மக்களுக்காக
ஹெலன் குடிநீர்த் திட்டம் மற்றும் மாவட்டத்தினுடைய
எல்லா குடிநீர்த் திட்டங்களையும் உடனடியாக செயல்படுத்து
மாறு தங்கள் மூலமாகக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிரு
கிறோம்.



பிற்பகல் 1-15

நீலகிரி மாவட்டத்தில் மின்சாரம் உற்பத்தியானாலும் பல
பகுதிகளில் மின்சக்தி குறைவாக விளக்குகள் எரிகின்றன. ட்யூப்
லைட்டுகளும் அநேகமாக இரவு 9 மணிக்கு மேல்தான் எரி
கின்றன. பள்ளி, கல்லூரி தேர்வுகள் நெருங்கிவரும் இந்த்
வேளையிலே மாணவ, மாணவியர்கள் நன்கு கற்று தேர்விலே
வெற்றி பெறுவதற்கான பயிற்சியைப் பெற தயவு செய்து
அதிக அளவிலே ட்ரான்ஸ்பார்மர்களைப் போட்டு இக்குறையைத்
தீர்த்து வைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளக் கடமைப்
பட்டிருக்கிறோம்.

மேலும் நமது நீலகிரி மாவட்டத்திற்கு தமிழ்நாடு மின்சார
வாரியத்தின் மூலமாக ஒரு சர்க்கிள் அலுவலகம் கண்டிப்பாக
தேவைப்படுகிறது. கடந்த சட்டமன்றத்திலும் கேட்டு இருக்கி
றோம். இந்த சர்க்கிள் அலுவலகத்தை கண்டிப்பாக அரசு
எங்களுக்கு அமைத்துத்தர வேண்டுமென்று தங்கள் மூலமாகக்
கேட்டுக் கொள்கிறோம்.

நீலகிரி மாவட்டம் ஒரு மலைப்பிரதேசமான இடம்.
புயலாலும், மழையாலும், இயற்கை சீற்றத்தாலும் சாலைகள்
மிகவும் பழுதடைந்த நிலையிலே இருக்கின்றன. இந்தச் சாலை
களுக்கும் சமவெளிப் பிரதேசத்தில் உள்ள சாலைகளுக்கும் அதிக
வித்தியாசம் உள்ளது. ஆகவே மலைப்பிரதேசமாகிய நீலகிரி
யினுடைய சாலைகளைச் செப்பனிட்டு பழுது பார்க்கக் குறைந்
தது 25 முதல் 30 சதவீதம் அளவு — அதிக அளவிலேயே
நிதியை எங்களுக்கு கொடுத்தால் தான் சாலைகளைச் செப்பனிட
முடியும் என்ற ஒரு தாழ்மையான கருத்தை உங்கள் மூலமாகக்
கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றோம். கிராமப்புற சாலை
களும் மிகவும் மோசமான நிலையில் உள்ளன. உடனடியாக
அவற்றைச் செப்பனிட விசேஷ நிதியை ஒதுக்கி மக்களுக்கு உதவ
வேண்டுகிறோம்.

திருவள்ளுவர் பேருந்துகள் உதகையிலிருந்து சென்னைக்கும்
கூடலூரிலிருந்து சென்னைக்கும், ஊட்டியிலிருந்து பெங்களூ
ருக்கும், ஊட்டியிலிருந்து பாண்டிச்சேரிக்கும், ஊட்டியிலிருந்து
திருப்பதிக்கும் செல்வதைத் தாங்கள் அறிவீர்கள். இந்த பேருந்து
கள் மிகவும் மோசமான நிலையில் இருப்பதினால் தங்கள்
மூலமாக மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்
களை, இந்தப் பேருந்துகளை மாற்றி புது பேருந்துகளை மக்களு
டைய வசதிக்காக விட வேண்டுமென்று கேட்டுக் கொள்ளக்
கடமைப்பட்டிருக்கிறோம்.

மேலும் நமது நீலகிரி மலைவாழ் மக்கள் ஊட்டியிலிருந்து
குருவாயூருக்குச் செல்ல ஒரு பேருந்து வேண்டும் என்பதனால்
சேரன் போக்குவரத்து மூலமாக ஊட்டியிலிருந்து குருவாயூருக்கு
ஒரு பேருந்து செல்ல தங்கள் மூலமாக ஏற்பாடு செய்ய வேண்டு
மென்று கேட்டுக் கொள்கிறோம்.

தெரு விளக்குகள் நமது நீலகிரி மாவட்டத்தில் சரிவர எரிவதில்லை. தெரு விளக்குகளையும் உடனடியாக மக்களுடைய நன்மைக்காக எரிவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறோம்.

வேலை வாய்ப்பைப் பற்றி இந்த நிதிநிலை அறிக்கையில் ஒன்றும் இல்லை. படித்த இளைஞர்கள் அதிகமாக இருக்கிறார்கள் இலட்சக்கணக்கான படித்த இளைஞர்களுக்கு வேலை வாய்ப்ப இல்லாத இந்த நிலையில், மீண்டும் தமிழக அரசு தயவு செய்து இந்த வேலை வாய்ப்பிற்கு ஒரு நிதியை ஒதுக்கி அதற்குத் தகுந்த ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறோம்.

மக்கள் இந்த அரசிடம் அதிக அளவில் எதிர்பார்க்கிறார்கள். அவர்கள் எதிர்பார்ப்பதில் நியாயம் இருக்கிறது. அவர்கள் முக்கியமாக எதிர்பார்ப்பது குடிநீர் வசதி, சாலை பராமரிப்பு, மின்சாரம் போன்ற அடிப்படை வசதிகள். இந்த அடிப்படை வசதிகளை தமிழக அரசு நல்ல வகையிலே செய்தாலும் கூட, இன்றும் போர்க்கால அடிப்படையிலே அந்த மக்களுக்கு உடனடியாகச் சேர ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறோம்.

மேட்டுப்பாளையம் முதல் உதகை வரை செல்லும் உலக பிரசித்திப் பெற்ற புளு மவுண்டன் எக்ஸ்பிரஸ் என்பது எடுத்துக் கொள்ளும் நேரம் சுமார் 4 மணி 30 நிமிடம் ஆகும். அந்த நேரத்தை பொது மக்களுடைய வசதிக்காகவும், உல்லாசப் பயணிகளின் வசதிக்காகவும், அயல் நாட்டு பிரயாணிகளின் வசதிக்காகவும் அந்த இரயிலுக்கு டீசல் வசதி செய்து சுமார் 2 மணி 15 நிமிடத்தில் சேர, மத்திய சர்க்காருக்கு தமிழக அரசு பரிந்துரை செய்ய தங்கள் மூலமாக கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறோம்.

பிற்பகல் 1-20

மேலும் நமது நீலகிரி மாவட்டத்தில் உதகமண்டலம் வட்டம் பெரியதாக இருப்பதால் அதை இரண்டாகப் பிரித்து இரண்டாவது வட்டத்தை குந்தாவில் அமைத்துத் தர வேண்டுமென்ற கோரிக்கையை தங்கள் மூலம் இந்த அரசுக்கு வைக்கிறோம்.

எங்கள் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் ஒரு டி.ஆர்.ஓ.-டிஸ்ட்ரிக்ட் ரெவின்யூ ஆபிசர் என்ற பதவி இல்லாமல் இருக்கிறது. இதனால் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். நமது மாநிலத்திலேயே டி.ஆர்.ஓ. பதவி இல்லாத ஒரு மாவட்டம் நீலகிரி மாவட்டம் தான். ஆகவே, டி.ஆர்.ஓ. பதவியை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறோம்.



ஆர்.டி.ஓ. என்றால் ரெவின்யூ டிவிஷனல் ஆபீசர் என்று தான் மக்களுக்குத் தெரியும். எங்களுடைய நீலகிரி மாவட்டத்தில் அரவங்காடு என்ற இடத்தில் ரூரல் டெவலப்மெண்ட் ஆர்கனைசேஷன் என்று ஒரு இயக்கம் இருக்கிறது. மக்கள் இதனால் இதை ஆர்.டி.ஓ. ஆபீஸ் என்று அங்கு செல்வதா அல்லது ரெவின்யூ டிவிஷனல் ஆபீசுக்கு செல்வதா என்று மிகவும் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே, இந்த ரூரல் டெவலப்மெண்டு ஆர்கனைசேஷனுக்கு அரசு உடனடியாக எழுதி வேறு பெயரை மாற்றச் சொல்லும்படி தங்கள் மூலம் கேட்டுக்கொள்கிறோம்.

நீலகிரியில் உள்ள உதகைக்கு எல்லாப் பகுதியிலிருந்தும் மக்கள் ஒவ்வொரு நாளும் வருகை தந்து கொண்டிருக்கிறார்கள். அங்குள்ள தாவர இயல் பூங்கா, படகு இல்லம், தொட்டபெட்டா, குன்னூரிலுள்ள லேம்ஸ் ராக், டால்பின்நோஸ், கோத்தகிரியிலுள்ள கேத்தரின் வாட்டர் பால்ஸ், கொட நாடு வியூ பாயிண்ட், கூடலூர் பகுதியிலுள்ள சிங்காரா, மாயார் போன்ற பகுதிகளுக்கு பொது மக்களும், உல்லாசப் பயணிகளும் செல்கிறார்கள். ஆகவே இந்த இடங்களை எல்லாம் சீரும் சிறப்புமாக வைப்பது நமது அரசின் கடமையாகும்.

அன்னை இந்திரா காந்தி அவர்களின் நினைவாக ஊட்டி தாவர இயல் பூங்காவிற்கு ஏற்கெனவே மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் ஆட்சிக் காலத்தில் நமது மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் அந்தப் பூங்காவிற்கு வருகை தந்து அன்னை இந்திரா காந்தி அவர்களின் பெயரைச் சூட்டுகிறேன் என்று சொல்லியிருக்கிறார்கள். இதுவரைக்கும் அந்தப் பெயரைச் சூட்டவில்லை. ஆகவே, அந்தத் தாவர இயல் பூங்காவிற்கு அன்னை இந்திரா காந்தியினுடைய ஞாபகார்த்தமாக அவருடைய பெயரைச் சூட்டவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறோம். (மணியடிக்கப் பெற்றது).

மேற்படி பூங்காவிலும், படகு இல்லத்திலும் கேரள மாநிலம் பாலக்காடு மாவட்டத்தில் மலம்புழா அணையில் இருப்பது போல் 'ரோப் கார்' பொது மக்களுக்காக அமைத்துக் கொடுப்பதுடன் அன்னியச் செலாவணி பெறும் வகையில் வெளி நாட்டு மக்களையும் அதிகமாக கவரலாம் என்று தங்கள் மூலமாக அரசுக்கு தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறோம்.

சட்டமன்ற உறுப்பினர்கள், பாராளுமன்ற உறுப்பினர் அடங்கிய 'டூரிஸ்டு டிராபிக் அட்வைசரி கமிட்டியை' அரசு உடனடியாக நியமிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு இந்த மாபெரும் சந்தர்ப்பத்தை அளித்த தங்களுக்கும், நல்ல உள்ளங்களுக்கும் மீண்டும் என்னுடைய நல் வாழ்த்துக்களையும், நன்றியையும் கூறி விடைபெறுகிறேன். ஜெய்ஹிந்த்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u>: திரு. வீ. ரவிச்சந்திரன்.

திரு. வி. ரவிச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, 1992—93 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கை
யின் மீதான விவாதத்தில் கலந்து கொண்டு புகழ் பெற்ற
இந்த மாமன்றத்தில் உரை நிகழ்த்துவதில் பெரு மகிழ்ச்சி அடை
கிறேன். இந்த பெருமைக்குரிய நல் வாய்ப்பினை வழங்கிய
உலகத் தமிழர்கள் போற்றும் ஒப்பற்ற தலைவியாம் மாண்புமிகு
இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கும்,
தங்களுக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்
கொள்கிறேன். மாண்புமிகு புரட்சித் தலைவியின் புனித
ஆட்சியின் இரண்டாவது வரவு—செலவுத் திட்ட அறிக்கை உலகமே
வியந்து பாராட்டும் வண்ணம் அமைந்திருக்கிறது என்பதால்
தமிழ் மக்கள் அனைவரும் பெருமை கொள்ள வேண்டும்.
கடுமையான நிதி நெருக்கடியிலும் ஏழை எளிய மக்கள் பாதிக்
காத வண்ணம் பல்வேறு சலுகைகளை அளித்து குறைந்த
அளவிலான வரிகளுடன் நமது அரசு தந்துள்ள இந்த பட்ஜெட்
ஏழை எளிய கிராம மக்களுக்கும், அனைத்து மக்களுக்கும்
ஒரு வரப்பிரசாதம் ஆகும்.

சமுதாயத்தில் வாழ வழியில்லாமல் இருக்கிற வயதான
வர்களுக்கான ஓய்வூதியம் ரூ. 50-லிருந்து ரூ. 75 ஆக உயர்த்திய
மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுடைய பெருந்தன்மையை
பாராட்டுகிறேன். கருவுற்ற தாய்மார்களுக்கு கொடுக்கப்படும்
உதவித் தொகை ரூ. 300 ஆக அறிவித்து இருப்பது மகிழ்ச்சிக்
குரிய ஒன்றாகும். வேளாண்மை உற்பத்தியை அதிகரிக்கும்
வண்ணம் உழவுத் தொழிலுக்குப் பயன்படும் டிராக்டருக்கு
வரிச் சலுகை அளித்திருப்பதால் விவசாயிகள் மத்தியில் மாண்பு
மிகு புரட்சித் தலைவி அவர்கள் நல்ல வரவேற்பைப் பெற்
றிருக்கிறார்கள். இரண்டு பெண் குழந்தைகளுக்கு மேல் பெற்றுக்
கொள்ளாத பெற்றோர்களை ஊக்கப்படுத்தும் வகையில்,
இரண்டு ஆயிரம் ரூபாயை அரசே டெபாசிட் செய்யும் திட்டத்
தின் மூலம் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் இந்தியா
விற்கே வழி காட்டுகிறார்கள். பெண்களைப் பெற்றதால்
பெற்றோர்களுக்கு ஏற்பட்டுள்ள கவலையைப் போக்கி, அப்
பெண்களுடைய எதிர்கால வாழ்க்கைக்கு உத்தரவாதம்
கொடுத்த மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்
களைப் பாராட்டுகிறோம்.

பிற்பகல் 1—25

போதுமான சம்பளம் இல்லையே என்று ஏங்கிய சத்துணவு
அமைப்பாளர்களுக்கு சம்பளத்தை உயர்த்தியதன் மூலம் புரட்சித்
தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் கொண்டு வந்த வரலாற்றுச்
சிறப்புமிக்க சத்துணவுத் திட்டம் வெற்றிகரமாக நடைபெறு
வதற்கு மாண்புமிகு புரட்சித் தலைவி தந்த ஊக்கத்தைப்
பாராட்டுகிறேன். துறையூர் நகருக்கு காவிரி குடிநீர் திட்டத்தை
நிறைவேற்றித்தர வேண்டுகிறேன். துறையூர் - பெரம்பலூர்
சாலையை இருவழிச் சாலையாக அமைக்க வேண்டுகிறேன்.



தமிழகத்தின் ஒப்பற்ற தலைவியாக விளங்குகின்ற எனது
இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் பொறுப்
பேற்றவுடன் முதற் கையெழுத்து, மலிவு விலை மதுவை
ஒழிக்க வேண்டுமென்று, மதுவிலக்குக் கொள்கையில் கையெ
ழுத்திட்டார்கள். இன்று தமிழ்நாட்டில் மது என்னும் கொடி
அரக்கனை விரட்டி தாய்மார்களின் இல்லங்களில் ஒளிவிளக்கை
ஏற்றி, ஒப்பற்ற தலைவியாக நமது மாண்புமிகு தமிழக முதல்வர்
புரட்சித் தலைவி அவர்கள் திகழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.
தமிழ் நாட்டிலே நிதிப் பற்றாக்குறை இருந்தும் ஏழை எளியோர்
நலனைக் கருதி 1.2 கோடி ஏழை மக்களுக்கு 49·56 கோடி
ரூபாய் செலவில் வேட்டி, சேலை வழங்கி சாதனை படைத்
திருக்கிறார்கள். எங்களது இதய தெய்வம் டாக்டர் புரட்சித்
தலைவியின் அரசு ஏழைகளைக் காக்கின்ற அரசு, மருத்துவ
நலத் திட்டம் புரட்சித் தலைவியினுடைய வரலாற்றுச் சிறப்பு
மிக்க திட்டமாகும். ''நோயற்ற வாழ்வே குறைவற்ற
செல்வம்'' என்ற கூற்றிற்கு ஏற்ப மாண்புமிகு டாக்டர் புரட்சித்
தலைவி மருத்துவ நல புதிய திட்டத்தின் மூலமாக ஆயிரக்
கணக்கான இடங்களில் மருத்துவ முகாம்களை நடத்தி இலட்சக்
கணக்கான கிராமப் புற ஏழை மக்கள் இலவசமாக தங்கள்
நோய்களுக்கு சிகிச்சை பெற்று அவர்களுடைய வாழ்க்கையில்
இன்புற்று வாழ இந்தியாவிலேயே எங்கும் இல்லாத அருமை
யான திட்டத்தை தானைத் தலைவி, புரட்சித் தலைவி அள்ளித்
தந்ததைப் பாராட்டுகின்றோம்; போற்றுகின்றோம்.

தொழில் துறையில் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்
தலைவி அவர்கள் அரசினுடைய புதிய தொழில் கொள்கை
யின் மூலம் முதன் முறையாக தொழில் வளர்ச்சி தொடர்புடைய
அனைத்து அம்சங்களையும் உள்ளடக்கிய விரிவான கொள்கை
விளக்கம், தொழில் முனைவோர் அனைவருக்கும் கிடைக்கச்
செய்துள்ளார்கள். இதன் மூலம் தமிழ் நாட்டில் தொழில்
வளம் பெருகுவதற்கும், தொழில் புரட்சியை தமிழ்நாட்டில்
ஏற்படுத்துவதற்கும் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் வழி
காட்டியுள்ளார்கள்.

வேளாண்மைத் தொழிலுடன் கடல் மீன் வளம், உள்நாட்டு
மீன்வளம் இவற்றை மேம்படுத்தும் வகையில் உயர் முன்னுரிமை
அளிக்கவும் உவர் இறால் பண்ணை வளர்ச்சியில் பெரிய முன்
னேற்றம் அடைய புதிய கொள்கை வகுத்து, மீனவர்களுடைய
வாழ்வு நலம் பெற கொடுக்கப்பட்ட திட்டத்தைப் பாராட்டு
கிறோம்.

மலை வாழ் மக்களுக்கு வேலை வாய்ப்பு இட ஒதுக்கீட்டில்
தமிழ்நாடு அரசு 1 விழுக்காடு இடம் ஒதுக்கியுள்ளது. மத்திய
அரசில் மலை வாழ் மக்களுக்கு 7.5 விழுக்காடு இடம் கொடுக்கப்
பட்டுள்ளது. மத்திய அரசு கொடுப்பது போல் மாண்புமிகு
தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அரசு மலை வாழ்

மக்களுக்கு 7.5 விழுக்காடு இடம் ஒதுக்கீடு செய்யும்படி மாண்பு மிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களிடம் அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

எனது உப்பிலியாபுரம் தொகுதியைச் சேர்ந்த பச்சை மலை மலைவாழ் மக்கள் தினை, சாமை, கேழ்வரகு, குச்சிக் கிழங்கு போன்ற பயிர்களை வனவிலங்குகளிடமிருந்து பாது காக்க கேப்கள் துப்பாக்கிகளுக்கான லைசன்ஸ் வழங்க வேண்டு கிறேன்.

திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் மலை வாழ் மக்கள் கேட்டிருந்த கேப்கள் லைசென்ஸ் மனுக்கள் கிடப்பில் போடப்பட்டுள்ளன. அதை பரிசீலிப்பதற்கு மாண்பு மிகு புரட்சித் தலைவி அரசு உடனடியாக விசாரணைக்கு அனுப்ப வேண்டுகிறேன். பச்சை மலைப் பகுதியில் 50 ஆயிரம் பேர் வாழ்ந்து வருகிறார்கள். ஆகவே, அப்பகுதியை ஒரு ஊராட்சி ஒன்றியமாக மாற்றியமைக்க வேண்டுகிறேன். பச்சைமலைப் பகுதியில் அரசுக்குச் சொந்தமான சந்தன மரங்கள் அதிகமாகக் களவு போய்க் கொண்டிருக்கின்றன. ஆகவே, பச்சைமலையில் திருட்டுக் போகும் சந்தன மரங்களைக் கண்காணிக்க 500-க்கும் மேற்பட்ட தனி ரிசர்வ் போலீஸ் அமைக்க வேண்டுகிறேன்.

வன அதிகாரிகளுக்கு, சந்தனக் கட்டைகள் அதிகமாகக் களவு போவதைத் தடுப்பதற்காக, அதிகமான துப்பாக்கிகளைப் பெறுவதற்கு வழிவகை செய்து தந்த மாண்புமிகு போக்குவரத்து, வன இலாகா அமைச்சர் அவர்களை எனது மனந்திறந்து பாராட்டுகிறேன்.

திருச்சி மாவட்டம் பெரியதாக உள்ளதால், திருச்சியை இரண்டாகப் பிரித்து, துறையூரை தலைநகரமாகக் கொண்ட புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். மாவட்டமாக அறிவிக்க வேண்டு கிறேன். திருச்சி, திருவெறும்பூரிலுள்ள பாய்லர் தொழிற்சாலை யின் கிளையை உப்பிலியாபுரம் தொகுதியில் துறையூர் நகரில் அமைத்து, இப்பகுதியிலுள்ள படித்த இளைஞர்களுக்கு வேலை யில் முன்னுரிமை கொடுக்க வேண்டுகிறேன்.

திருச்சி மாவட்ட வேலைவாய்ப்பு மையத்தை இரண்டாகப் பிரித்து துறையூரில் துணை வேலவாய்ப்பு அலுவலகம் இயக்க வேண்டுகிறேன்.

பச்சை மலை, வண்ணாடு, புதூர் "கிராமங்களில் நியாய விலைக் கடை ஒன்றைத் திறக்க வேண்டுகிறேன்.

பிற்பகல் 1-30

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் முன் அனுமதியோடு பேரவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.



திரு. வி. ரவிச்சந்திரன் : ஆயுதக் கலாச்சாரமாக இருந்த தமிழகத்தை அமைதிப் பூங்காவாக மாற்றிய பெருமை தமிழக முதலமைச்சரையே சாரும். இன்று சட்டம்-ஒழுங்கு முற்றிலும் சீர் செய்யப்பட்டு, காவல் துறை தன்னுடைய பணியை முழுமை யாகச் செய்வதற்கு வழி வகுக்கப்பட்டுள்ளது.

காவிரி நீர்ப் பிரச்சினையில் மத்திய அரசு, நடுவர் மன்றத் தின் இடைக்கால உத்தரவை எத்தகைய உணர்வுடன் வெளி யிட்டதோ, அதே உணர்வுடன் தேவையான தொடர் நட வடிக்கைகளையும் எடுத்து காவிரி நீர் கிடைப்பதற்கு வழிவகுத்த எங்களது காவல் தெய்வத்தைப் போற்றக் கடமைப்பட்டிருக் கிறோம்.

தமிழகத்தினுடைய வளர்ச்சிக்குப் பல்வேறு திட்டங்களை அறிவித்துப் பாடுபட்டுக் கொண்டு இருக்கின்ற புரட்சித் தலைவி அரசை, எதிர்க்கட்சியினர் தேவையில்லாத குறைகளையும், குற்றங்களையும் சொல்வதைத் தவிர்த்து, எந்த எண்ணத்தில் எந்த இலட்சியத்தில் இந்த அரசு மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களால் உருவாக்கப்பட்டதோ அந்த இலட்சியங்களுக்கும், எண்ணங்களுக்கும் ஏற்ப நிறைவேற்றிக் கொண்டு இருக்கின்றது. அதற்கு உங்களது ஒத்துழைப்பை அளிக்க வேண்டுகிறேன். புரட்சித் தலைவி அரசு ஒரு பொற்கால அரசாகத் திகழ்ந்து கொண்டிருக்கிறது. எனக்குப் பேச வாய்ப்பளித்த பேரவைத் தலைவரவர்களுக்கு நன்றி கூறி, விடைபெறுகிறேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (11–3–1992) காலை 9-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-31 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

## 4. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

### அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

1. 1990-ஆம் ஆண்டு தமிழ்நாடு அணு உலை நிறுவுதல் (கட்டிடங்களை ஒழுங்குமுறைப்படுத்துதல், நிலத்தைப் பயன் படுத்துதல்) விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து பொதுப் பணித் (மின்சக்தி) துறையின் 12–7–1990 ஆம் நாளிட்ட 1442 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை, [1978 ஆம் ஆண்டு தமிழ்நாடு அணு உலை நிறுவுதல் (கட்டிடங் களை ஒழுங்குமுறைப்படுத்துதல், நிலத்தைப் பயன்படுத்துதல்) சட்டத்தின் [தமிழ்நாடு சட்டம் 16[1978) 21 (4) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

2. 1990 ஆம் ஆண்டு தமிழ்நாடு நாட்டு மதுபான (சில்லறை விற்பனை) விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து உள், மதுவிலக்கு மற்றும் ஆயத் தீர்வைத் துறையின் 18-1-1991 ஆம் நாளிட்ட 33, 34 மற்றும் 35 ஆம் எண்கள் கொண்ட அரசாணைகளில் வெளியிடப்பட்ட அறிவிக்கைகள், [1937-ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின் [தமிழ்நாடு சட்டம் 10/1937) 54(3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

3. 1990-ஆம் ஆண்டு தமிழ்நாடு அணு உலை நிறுவுதல் (கட்டிடங்களை ஒழுங்குமுறைப்படுத்துதல், நிலத்தைப் பயன்படுத்துதல்) விதிகளை இயற்றுவது குறித்து பொதுப் பணித் (மின்சக்தி) துறையின் 2-2-1990 ஆம் நாளிட்ட 264 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1978 ஆம் ஆண்டு தமிழ்நாடு அணு உலை நிறுவுதல் (கட்டிடங்களை ஒழுங்குமுறைப்படுத்துதல், நிலத்தைப் பயன்படுத்துதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 16/1978) 21(4) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

4. 1990-91 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சீட்டுக் கழகத்தின் ஏழாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ், பேரவை முன் வைக்கப் பெற்றது) (தமிழ், ஆங்கிலம்) ]

5. 1990-91 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தின் ஆண்டு கணக்குகளின் மீதான தணிக்கை அறிக்கை. [1971 ஆம் ஆண்டு தமிழ்நாடு குடிசைப் பகுதி (அபிவிருத்தி மற்றும் அகற்றுதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 11/1971) 41-வது பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது). (ஆங்கிலம்).]

6. 1990-91 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு இறைச்சி நிறுவனத்தின் பன்னிரெண்டாவது ஆண்டறிக்கை. [1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது) (தமிழ், ஆங்கிலம்).]

## ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏனைய தாள்கள்.

ஏதுமில்லை.